அறிவியல் கட்டுரைகள்

THE MADURA ...

ஆசிரியர் :
P. இராமநாதன், M. A.
செயிண்ட் தாமஸ் காலேஜ்
திருச்சூர்.

நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
12 சகண்டு லைன் பீச்சு, சென்னை.
பதிப்புரிமை] 1945 [விலை அணா 12

First Edition 1945

Printed at the Rajan Electric Press, Madras.
Q. H. M. S. 8—1100 Copies.

முகவுரை

அறிவியல் கட்டுரைகள் என்னும் பெயருடன் வெளி வரும் இந்நூல், உயர் வகுப்பு மாணவர்க்கு உரியது. இதன்கண் இந்தியப் பெரும் புலவர், விஞ்ஞான ஆராய்ச்சியாளர், சமயத் தலைவர் இவர் தம் கருத்துகளும்; மேனாட்டு நூலாசிரியர், தமிழ் அரசன்—இராஜ ராஜன் வரலாறுகளும்; தமிழ் இலக்கியக் காட்சிகளும் ஆகிய பல துறைப்பட்ட பத்துப்பொருள்கள் இடம் பெற்று உள்ளன. இப்பலவகைப் பொருள்கள் இக்கால மாணவ உலகத்திற்கு இன்றியமையாதவை என்பதை, இந்நூலை ஒரு முறை நோக்கும் நல்லறிஞர் நன்கு அறிதல் கூடும்.

P. இராமநாதன்

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	நாகரிகம்	...	1
2.	கை வன்மை	...	7
3.	மேனாட்டு நாகரிகம்	...	13
4.	இந்தியச் சமூகம்	...	19
5.	நோபெல் பரிசு பெற்ற தமிழர்	...	27
6.	விவேகானந்தர் கடிதங்கள்	...	38
7.	இராஜ ராஜ சோழன்	...	55
8.	புறநானூற்றுக் காட்சிகள்	...	74
9.	தாமஸ் கார்லைல்	...	91
10.	தலைமை உரை	...	109

அறிவியல் கட்டுரைகள்

1. நாகரிகம் *

நாகரிகம் என்னும் சொற்பொருள் நாட்டுக்கு



ஏற்றாற்போல வேறுபடுகின்றது; மக்கள் அறிவு நிலைக்கு ஏற்ற வாறும் வேறுபடுகிறது. மேல் நாடுகளில் இச்சொல் நாகரிக உடை, உணவு, இயந்திரப் பெருக்கம், செல்வச்செருக்கு ஆகியவற்றின் திரட்சியைக்குறிக்கின்றது. ஆனால் நம்தாய் நாட்டில் இச்சொல் மெய்யான மனிதத் தன்மையைக்

---

* உலக மஹா கவியாகிய இரவீந்திர நாத தாகூர் தமது உலகப் பிரயாணத்தின்போது பற்பல நாடுகளில் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியுள்ளார். அச் சொற்பொழிவுகளில் பொதிந்து கிடக்கும் முதிர்ந்த கருத்துகள் பலவாகும். அம் முதிர்ந்த கருத்துகளில் ஒரு சில ஈண்டுக் கூறப்பட்டுள்ளன.

குறிக்கின்றது. அன்பு, அருள், அறிவு, அடக்கம் இவற்றின் திரட்சியே 'நாகரிகம்' என்று நம் முன்னோர் அறைந்துள்ளனர். இவை இல்லாமல் மனிதன் உடை, உணவு, இயந்திரப் பெருக்கம், செல்வம் இவற்றை எளிதில் எய்துதல் கூடும். ஆயின், அந்நிலையில் அவன், 'நாகரிக மனிதன்' என்று கருதப்படல் யாங்ஙனம் இயலும்? அதர்மத்தாலும் பெறக்கூடிய இப்போக பாக்கியங்கள் மனிதனுக்கு இறப்பை விடக் கொடியனவாகவும் மாறுகின்றன. எனவே, இவை நாகரிகச் சின்னங்கள் ஆகா. நாகரிகம் என்பது, உலகக் கூட்டு வாழ்க்கையில் மனிதன் தன் கடமைகளை உணர்ந்து அறவழியில் நடப்பதே என்னலாம். 'உண்மை நாகரிகம்' என்பது உயிர்த் தொடர்புடையதே அன்றி இயந்திரப்பெருக்கத்தின் தொடர்புடையதன்று. இயந்திரப் பெருக்கமும் செல்வப் பெருக்கமும் மனித முன்னேற்றம் என்றும், அம் முன்னேற்றமே 'நாகரிகம்' என்றும் மேனாட்டு மக்களால் கருதப்படுகின்றன. ஆனால் இவை உயிர்த் தொடர்புடையன அல்ல! அல்ல!!

நாகரிகச் செயல்

'வலியச் சென்று உதவி புரிதல்' என்பது நாகரிகத்தின் பண்புகளில் ஒன்றாகும். இதனைப் பின்வரும் உதாரணத்தால் நன்கறியலாம்: ஒரு கிராமத்தின்மீது பகைவர் வான ஊர்தியினின்றும் குண்டுகளைப் பொழிந்துகொண்டு இருந்தனர். அப்பொழுது அவர்களது வானவூர்தி

ஒன்று இயந்திரம் கெட்டுக் கீழே வீழ்ந்தது. அதில் இருந்த பகைவர் கீழிறங்கினதும் அந்தக் கிராமத்துப் பெண்கள் சிலர் உடைவாளை ஏந்தி அவர்களைக் குத்த நின்றனர். அவ்வமயம், நங்கை ஒருத்தி அவண் தோன்றி, அப்பகைவரை இன்முகத்தோடு வரவேற்று ஒரு குகைக்கு அழைத்துச் சென்றாள்; அங்ஙனம் சொல்லும் போதும் பகைவருடைய வெடிகுண்டுகள் வீழ்ந்த வண்ணமாகவே இருந்தன. நங்கை, அப் பகைவரை - தன் கிராமத்தையே அழிக்குந் தொண்டில் ஈடுபட்டிருந்த கூட்டத்தினருள் சிலரை - அன்றிரவெல்லாம் அக் குகையில் இருக்கச் செய்தாள்; உண்டி வழங்கினாள். இச் செயல் எதனைக் குறிக்கின்றதென்பதை எண்ணிப் பார்மின். இதுவே மனிதத் தன்மை. 'பகைவனையும் நண்பனாக நினை' என்னும் பெரியோர் வாக்குக்கு இணங்க நடந்த எழிலுடை நங்கையே நாகரிகத்தை உள்ளவாறு உணர்ந்தவள் ஆவாள். அவள் பகைவர்க்கு உதவி செய்துகொண்டிருக்கையிலும் அப் பகைவரைச் சேர்ந்தோர் குண்டு மாரி விடாமற் பொழிந்து கொண்டிருந்தமை எதனை உணர்த்துவது என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள். மனச்சாட்சி, மனிதத் தன்மை என்பனவற்றையும் கடந்த நிலையில் உள்ள இயந்திரப் பெருக்கம் நாகரிகம் ஆகுமா? எளிய நிலையுடைய எழிலுறு நங்கை மனிதத் தன்மையோடு பகைவரிடம் நடந்துகொண்ட பான்மை நாகரிகம் ஆகுமா? கூறுமின்.

நாகரிகத்தின் உயிர் நாடி

கிராம மக்கள் வறுமையில் வாடி இருப்பினும், எத்துணைப் பேரன்புடன் புதியவரோடு பழகுகின்றனர்! உபசரிக்கின்றனர்! நகரமக்கள் ஒரு குடம் தண்ணீருக்கும் காலணு வாங்காமல் விடார்; ஆனுல் எளிய கிராம மக்கள் குடம் குடமாகத் தண்ணீர் தந்து மலர்ந்த முகத்தோடு வறிதே செல்வர்; பணம் தரினும் பெற மறுப்பர். 'ஆபத்தில் உதவி,' 'விருந்தோம்பல்' என்னும் உயரிய பண்புகள் அவ் வேழை மக்களிடம் குடிகொண்டுள்ளன. கல்வியற்ற - செல்வமற்ற எளிய கிராம மக்களின் 'வெளிய மனப்பான்மை'யே **நாகரிகத்தின் உயிர் நாடி**யாகும். மக்கள் இதனைப் பிறவியிலேயே பெற்றிருத்தல் வேண்டும். இது பிறரைப் பார்த்துக் கொள்ளத் தக்கதன்று.

கோர மாளிகை

இம் மனப்பான்மை, இக்காலக் கேடுகெட்ட நாகரிகத்தால் பற்றப்படுமாயின்—பேராசைக்கு அடிமைப்படுமாயின், அன்றே உண்மை நாகரிகம் தொலைந்த தென்னலாம். அன்பு, அருள், அடக்கம், ஆன்ம வுணர்வு என்பன மேனுட்டு மக்கள் வாழ்க்கையில் குடிகொண்டிருந்த காலம் ஒன்றுண்டு. அந்நாடுகளில் அவை குடிகொண்டிருந்தவரை இரக்கம், ஈதல் முதலிய நல்லியல்புகள் மேனுட்டு மக்களைப் பிணித்துக்கொண்டிருந்தன. மக்கள் அவற்றைக் கைவிட்ட பின்னர், அந்நாடுகளில் இயந்திர மனப்பான்மை குடி

கொண்டுவிட்டது. அதன் பயனாக அவை பிற நாடுகளை இயந்திர பலத்தால் அடக்கி ஆளத் தலைப்பட்டன. இப் பேராசையே இன்றைய உலகத் துன்பங்கட் கெல்லாம் அடிப்படையாகும். பேராசை என்னும் அடிப்படைமீதுதான் இன்றைய உலகத்துத் துன்பங்கள் என்னும் 'கோர மாளிகை' கட்டப்பட்டுள்ளது.

செல்வமும் ஒழுக்கமும்

பேராசை மக்கள் தொகுதிக்கே தீமையானது. அதனை அறவே நீக்குதல்நன்மக்கள் கடனாகும். நிறத் திமிர், செல்வப் பெருக்கம் இன்னவை உண்மை நாகரிகக் குறிகள் ஆகா. ஆன்ம அமைதியும் நேரிய வாழ்க்கையுமே நாகரிகச் சின்னங்கள் ஆகும். பணப் பித்து மக்கள் மனத்தை விட்டு அகலும் நாளே உண்மை நாகரிகம் உதயம் ஆகும் நன்னாள் ஆகும். நமது தாய் நாட்டில் பண்டைக் காலத்தில் பணத்துக்குத் 'தனி மதிப்பு' இல்லை. அது மக்கட்கு அவசியமானதே ஆயினும் அதற்கெனத் தனி இடம் ஒன்று சமூகத்தில் உண்டு. அதற்கு 'முதல் இடம்' இல்லை. ஆனால் இன்று அப்பணமே 'முதல் இடம்' பெற்றுள்ளது. இம்மாறுதலே இந்தியர் வீழ்ச்சிக்கு உற்றதொரு காரணம் ஆகும். செல்வம் ஒரு போதும் ஆன்ம வளர்ச்சிக்கு உதவிபுரிந்ததில்லை; உதவி புரியவும் அதற்கு ஆற்றல் இல்லை. இதனை நம் முன்னோர் நன்கறிந்திருந்தனர். அதனாற்றான் அப்பேரறிஞர் ஆத்ம சிந்தனை உடையவரைப் பெருமைப்படுத்திப் பேசினர்; அவர்களைத்

தம் சமூகத்து உயர் மக்களாகக் கருதினர். அப் பேரறிஞரும் இழிந்த மனப்பான்மை அற்றவ ராய், வாழ்க்கையின் மேலான குறிக்கோள்களைப் பின்பற்றி வாழ்ந்து வந்தார்கள்; 'உயரிய கொள் கைகள்' என்னும் அடிப்படைமீது 'நாகரிக வாழ்க்கை' என்னும் தங்கள் கவினுறு மாளிகை யைக் கட்டினார்கள். அப்பேரறிஞரே 'நாகரிகம் முற்றிய மனிதர்' எனப்படுவர். அப் பேரறிஞர் இந்நாட்டில் வாழ்ந்தமையாற்றான் நம் தாய் நாடு, உலக நாகரிகத்துக்கோர் எடுத்துக்காட் டாக இலங்கியது; உலகம் அநாகரிக இருளில் ஆழ்ந்திருந்தபோது இந்தியா மட்டும் நாகரிகச் சுடர்விட்டு ஒளிர்ந்துகொண்டிருந்தது. இவ் வுண்மையைப் பல நாட்டுப் பண்டை அறிஞர் எழுதிவைத்த குறிப்புகளால் அறியலாம்.

நாகரிகச் சின்னங்கள்

இத்தகைய உயரிய நிலையில் இருந்த இந்தியா, இன்று தனது பழைய பெருமையை இழந்திருப்ப தன் காரணம் என்ன? இன்றுள்ள இந்தியரிடை எளிய வாழ்க்கை, ஆத்ம சிந்தனை, உயர் குணங் கள், ஒழுக்க மேம்பாடு, சமத்துவம் முதலிய **நாகரிகச் சின்னங்கள்** வலிமை இழந்து வாடலே சிறப்புடைக் காரணமாகும். இவை யாவும் நன் முறையில் அமையப்பெறும் நாளே 'இந்தியர் நாகரிசம் உடையவர்' என உலக அறிஞரால் அழைக்கப்பெறும் நன்னாள் ஆகும்.

2. கை வன்மை *

கை வன்மை எது?

நாம் பிற பொருள்களின் மூலமாக நம்மை வெளிப்படுத்தும் பண்பே 'கை வன்மை' ஆகும். ஒவ்வோர் உயிரும் அறிவுப் பெருக்கத்தை அடைய முயல்கிறது. மனிதனது அறிவு வளர்ச்சி ஓரளவிற்கு அதிகப்படுமாயின், அது வெளிப்படல் இயல்பு. அங்ஙனம் வெளிப்படும் வளர்ச்சியே கை வன்மையால் வரும் ஓவியம் முதலிய வேலைப்பாடுகள் ஆகும். சிலர் தம் கை வன்மையை ஓவியத்தில் காட்டுகின்றனர்; வேறு சிலர் பாடல்களிற் காட்டுகின்றனர். பிறர் பிற வாறு காட்டுகின்றனர். இக் கைவன்மைக் கலையே 'ஆர்ட்' (Art) என்று ஆங்கிலத்திற் சொல்லப் பெறும். இப்பண்பு பணத்தின் பொருட்டு உளதாகும் ஒன்றன்று. இது பிற போக பாக்கியங்கள் பொருட்டும் உண்டாவதன்று. இஃது அறிவுப் பெருக்கத்தின் அறிகுறியாக அமைவது. ஆதலால், 'கை வன்மை' என்பது உள் உணர்ச்சியை உலகத்தார்க்கு உணர்த்தும் இயற்கைச்

---

* உலக மஹா கவியாகிய இரவீந்திர நாத தாகூர் தமது உலகப் பிரயாணத்தின்போது பற்பல நாடுகளில் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியுள்ளார். அச் சொற்பொழிவுகளில் பொதிந்து கிடக்கும் முதிர்ந்த கருத்துகள் பலவாகும். அம் முதிர்ந்த கருத்துகளில் ஒரு சில ஈண்டுக் கூறப்பட்டுள்ளன.

சாதனம் ஆகும். இவ்வன்மை நல்வழியிற் பயன் படுமாயின், நாம் அழகிய ஓவியங்களையும் அதிசயிக்கத் தகும் கட்டடங்களையும் வியக்கத் தகும் பூஞ்சோலைகளையும் கண்ணைக் கவரும் பிற பொருள்களையும் உலகிற் கண்டு களிக்கலாம். இறைவனது அருட்படைப்பால் தோன்றிய உலகமே கடவுளின் கை வன்மையை - உள் உணர்ச்சியின் பெருக்கத்தை உணர்த்துவதாகும். இவ் வுள்ளக் கிளர்ச்சி தீய துறையில் வெளிப்படுமாயின், நாம் வெறுக்கத் தகும் காட்சிகளையே உலகிற்காண இயலும்.

கை வன்மைக் காட்சிகள்

மனிதனது உள் உணர்வின் தெளிந்த நிலையில் இருந்து பெருக்கெடுத்து வெளித் தோன்றும் கை வன்மையாற்றான் பாபிலோனிய நகரம் அழகு வழிய அமைக்கப்பட்டது; உலகத்திற்கே நாகரிகத் தோற்றத்தை அளித்திருந்த ரோமாபுரி பேரெழில் கொண்டு விளக்கமுற்று இருந்தது; நமது தாய் நாட்டிலும் எந்நாட்டவரும் இன்றளவும் புகழும் பெருமை உடைத்தாய கண்ணைக் கவரும் தாஜ் மஹால் தோற்றம் எடுத்தது; ஐம்புலன்களையும் ஒருங்கே ஈர்க்கும் அஜந்தாக் குகைச் சிற்பங்கள் அமையலாயின. இங்ஙனமே மற்ற நற் காட்சிகளும் ஆகும். மனிதன் தன்னை மறந்த இன்ப நிலையிற்றான் தூய கை வன்மையைத் தோற்றுவிக்கின்றான். அவ்வின்ப நிலையில் தீட்டப் பெறும் ஓவியம் அவ்வோவியக்காரனது உள்ளப் பான்

மையை உணர்த்துவதாகவே அமையும். மொகலாய நகரங்களாக விளக்கமுற்றிருந்த டெல்லியும் ஆக்ராவும் இன்றளவும் அத்தகைய தூய்மையான கை வன்மையைக் கண்ணைக் கவரும் கவினுறு கட்டடங்கள் வாயிலாகக் காட்டுகின்றன. பற்பல நாடுகளிலிருந்து, ஐம்புலன்களையும் ஒருங்கே ஈர்க்கும் அவ் வழகிய கட்டடங்களைக் காண இன்னும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்த வண்ணமாகவே இருத்தல் ஒன்றே, அக் கட்டடங்களின் ஒப்புயர்வற்ற தன்மையை உணர்த்தப் போதுமானதன்றோ?

இறைவனது இன்பப் படைப்பு

இறைவன் படைத்த இவ்வின்ப உலகம் அவனது உள்ளக் கிடக்கையை உணர்த்துவதாகும். எங்கெல்லாம் நமது உள்ளத்தை ஈர்க்கும் வனப்புக் காணப்படுகிறதோ அங்கெல்லாம் இறைவனது கைத்திறன் காட்சி அளிக்கின்றது. அக் காட்சி நம் விழிகட்கு இன்பத்தை நல்குகின்றது. அக் கைத்திறன் வாயிலாக அவ் விறைவனது இன்ப இதயத்தை நாம் அறியலாம். நீலத் திரைக் கடல், நீல வான், தண்மையும், வெம்மையும் கொண்டுள்ள தண்கதிர் - சுடுகதிர்கள், வானளாவியவரைமுகடுகள், சான்றோர் கவியெனப் பரந்து செல்லும் யாறுகள், மனத்திற்குப் பேரின்பத்தை ஊட்டும் மலர்ச் சோலைகள் இன்ன பிறவும் இறைவனது கைத்திறனை இனிதின் அறிவிப்பன அல்லவோ? அதனால் அன்றோ நம்மவர் இத்தூய இடங்கட்கு யாத்திரை செல்கின்றனர்? இவ்

விடங்களில் எல்லாம் கோவில்களை அமைத்து மக்களின் மனத்திற்கு அமைதியை உண்டாக்க நம் முன்னோர் முயன்றனர்! இவ்வியத்தகு இயற்கைக் காட்சிகளைப் படைத்த இறைவனது பேருள்ளம் இன்பமயமானது என்பதில் ஐயமுண்டோ? நம் முன்னோர் இத்தகைய தூய— மனத்தை ஒருவழிப் படுத்தும் இடங்கட்குச் சென்று சென்று, இறைவன் இனிதின் அளித்த இன்ப எழிலைக் கண்டு கண்டு, அவனது பேரருள் நிறைந்த கைத்திறனைப் பார்த்துப் பார்த்து, உள்ளம் நெக்குருக விழிநீர் வார அக்கைத்திறனில் உள்ளத்தைச் செலுத்தி இறைவன் பேரெழிலில் இரண்டறக் கலந்தனர். அதனாற்றான் அம் மேலோர், கேவலம் செயற்கைச் செல்வமாய பணத்தை ஒரு பொருளாக மதித்திலர்; அப் பணத்தை உடையாரையும் உயர்வாக மதித்திலர்; ஆன்ம உயர்வைப் பெற்ற அறிஞரையே- கைத்திறனில் ஈடுபட்டவரையே மதித்தனர்; புலமையிற் சிறந்த புலவன், இசையிற் சிறந்த பாடகன், நடிப்பிற் சிறந்த நடிகை, ஒழுக்கத்திற் சிறந்த சான்றோர், ஓவியத்தில் உயர்ந்த ஓவியன் என்பவர்க்கு இருந்த மதிப்பு அக்காலச் செல்வர்க்கு இல்லை எனலாம். நிற்க.

அழகு

அழகு என்பது எழுத்திலோ எண்ணத்திலோ படத்திலோ அடங்குவதன்று. அஃது ஒரு பொருள் அன்று. அஃது அனைத்தையும் கடந்து நிற்பது; இலக்கணம் அற்றது. அதுவே

ஒவ்வோர் உயிரையும் வளர்ப்பது. அஃது இருப்பதாற்றான் உலகில் 'இன்பம்' என்னும் சொல் வழக்கில் இருக்கின்றது; 'இறைவன் இருக்கின்றான்' என்னும் நினைவு நம் உள்ளத்தில் எழுகின்றது. அப்பேரழகு மனிதரது கைவன்மையால் இன்பக் காட்சி நல்குகின்றது. மனிதனது மனத்தை ஒரு வழிப்படுத்த வல்லது அழகு. இக்கால மனிதன் அழகை அறவே மறந்து-ஏன்? தன்னையே மறந்து-போர், கூச்சல், குழப்பம் முதலியவற்றில் ஈடுபட்டு அலைகின்றான். அவனுக்கு நிற்க நேரம் இல்லை; உட்கார இடம் இல்லை; நினைக்கப் பொழுது இல்லை; விருப்பமும் இல்லை. இங்ஙனம் மாய வலையில் வீழ்ந்து மயங்கும் மனிதன் சிறிது போழுது அழகொழுகும் பூஞ்சோலையில் அமர்ந்து, தன் கண்ணெதிரே காட்சி யளிக்கும் அன்று மலர்ந்த நறுமணம் வீசும் மலர்களைக் காண்பானாயின்-நறுமணத்தை நுகர்வானாயின், சிறுபோது அப்பூஞ்சோலையின் வனப்பை உன்னுவானாயின், ஆ! அவன் தன்னை உணர்வான்; மயக்கந் தெளிவான்; இறைவனது கைவன்மையைக் கண்டு களிப்பான்; இறைவனது கைத்திறன் அவனது கவலையுற்ற மனத்தைக் கவலையற்றதாகச் செய்யும் திருத்தொண்டை உணர்வான். அந்நிலையில் அவனும் இவ்வின்பக் காட்சியின் ஒரு பகுதியாக விளங்குவான். இங்ஙனம் இறைவனது கைவன்மையையும் மனிதனது கைவன்மையையும் கண்டு களித்து ஆன்ம அமைதி பெற்று வாழப் பேறு பெற்றவரே இன்பநிலை எய்துபவராவர்.

இயற்கை அழகும் செயற்கை அழகும்

கைத்திறன் என்பது மனிதன் உள்ளத்தில் உள்ள ஆன்ம வுணர்ச்சியையும் இறைவனையும் ஒன்றுபடுத்துவதாகும். இதன் பெருஞ் சிறப்பை உளங்கொண்ட நம் முன்னோர் அழகினை ஆதரித்தனர்; அழகிய சோலைகளை அமைத்தனர்; அழகொழுகும் கட்டடங்களைக் கட்டினர்; இயற்கை அழகு வாய்க்கப்பெற்ற இடங்களில் செயற்கை அழகையும் சிறப்புறச் செய்தனர். இயற்கையும் செயற்கையும் கூடியவழி இன்ப வெள்ளம் பெருக்கெடுத்தோடுகின்றது போலப் பேரழகு பெரும் பொலிவுடன் விளங்கும் அன்றோ? இங்ஙனம் நம் முன்னோர் பேரழகில் பிறந்தனர்; பேரெழிலில் வளர்ந்தனர்; அவ்வழகிலேயே இரண்டறக் கலந்தனர். அவ்வழகினை அகமகிழக் காட்ட வல்லது கை வன்மை (Art) ஒன்றேயாகும்.

3. மேனாட்டு நாகரிகம் *

இயந்திர வாழ்க்கை

மேல் நாடுகள் ஆன்ம ஒளியைப் பெற்றிருந்த காலம் ஒன்றுண்டு. ஆனால் அக்காலம் மாறிவிட்டது. மேனாடுகள் இரண்டு நூற்றாண்டுகளாகப் பேராசை என்னும் பெருநோயால் பீடிக்கப்பட்டுள்ளன. அவை அந்நோய்க்கு அடிமைப்பட்ட நாள் முதல் இயந்திர வலியால் பிற நாடுகளைக் கைப்பற்றி ஆளத் தலைப்பட்டன; இன்றும் ஆண்டுகொண்டு வருகின்றன. சுதந்திரத்தை விரும்பும் அம் மேனாடுகள்-பிறர் தம் மேல் படையெடுத்தலை விரும்பாத அந் நாடுகள்-தாம் மட்டும் பிற நாடுகளைப் படையெடுத்து வெல்வதில் விருப்பங்கொண்டமை என்ன அறமோ? நாம் அறியோம். இங்கிலை மேனாடுகளில் தோன்றிய நாள்தொட்டு, அங்கு ஆன்ம வளர்ச்சி குன்றிவிட்டது; அமைதி குலைந்தது; அழகு ஒழிந்தது; இறைவனுக்கும் தமக்கும் உள்ள நெருக்கத்தை அம்மேனாட்டார் இழக்கலாயினர். ஆன்ம வுணர்ச்சி அற்ற அவர்களிடம் மனிதத்

---

* உலக மஹா கவியாகிய இரவீந்திர நாத தாகூர் தமது உலகப் பிரயாணத்தின்போது பற்பல நாடுகளில் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியுள்ளார். அச் சொற்பொழிவுகளில் பொதிந்து கிடக்கும் முதிர்ந்த கருத்துகள் பலவாகும். அம் முதிர்ந்த கருத்துகளில் ஒரு சில ஈண்டுக் கூறப்பட்டுள்ளன.

தன்மையை எங்ஙனம் எதிர்பார்ப்பது? ஒரு குற்றமும் செய்யாத-அமைதியாக வாழ்வை நடத்திக்கொண்டிருந்த மக்கள் உடல் உரம் குன்றி, அடிமைப்பட்டுத் தவிக்கின்றனர்; அடிமைப்பட்ட நாட்டவர் தம் இழிநிலையை எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றனர். இம்மாந்தரைப் பிடித்து ஆள்வதையே பெருமையாகக் கொண்டு மேனாடுகள் தருக்குகின்றன; தம் இயந்திரப் பெருக்கத்தால் ஏற்படும் புதிய பொருள்களைச் செய்து அவ்வடிமை நாடுகளில் குவித்து-அந்நாடுகட்குப் புதிய பொருள்கள்மீது மோகத்தை உண்டாக்கி, அவற்றின் பழைய—அமைதி பொருந்திய வாழ்க்கையை அடியோடு சிதற அடித்து வருகின்றன. அடிமைப்பட்ட நாடுகள் இப்பொய்யான வாழ்வையே மெய்யான வாழ்வெனக் கொண்டு மதிமயங்கி நிற்கின்றன; மேனாட்டு இயந்திர வாழ்வை 'நாகரிகம்' எனக் கருதி அதனைப் பெறத் துன்புறுகின்றன. இஃது என்ன மடமை!

செயற்கை உலகம்

வலியற்ற நாடுகளை அடக்கி ஆள்வதோடு நில்லாது, மேனாடுகள், எல்லா நாடுகளையும் ஒன்றுபடுத்தவும் உலகில் அமைதியை நிறுவவும் பாடுபடுகின்றன. இது வேடிக்கை அன்றோ? ஆன்ம வுணர்ச்சி, ஆன்ம வளர்ச்சி இல்லாத நாடுகள் ஒன்றுபடல் எங்ஙனம் இயலும்! உள்ளத்து உணர்ச்சி ஒன்றே உலகத்தைத் தூய்மைப் படுத்தும். அதனை அறவே விட்ட மேனாடுகள்

தாமே பன்முறை கூடி, அமைதியை நிலைநிறுத்த முயலுதல் அறியாமையே ஆகும். அவை வீணே பிற நாடுகளைக் கைப்பற்ற விழைந்து, புதிய புதிய இயந்திர சாதனங்களைக் கண்டறிதலில் தாம் அரிதிற் பெறும் பெருஞ் செல்வத்தைச் செலவிட்டுவருகின்றன; 'எம்மிடம் இத்துணை ஆயிரம் வானவூர்திகள் உள்ளன. எம்மை வெல்ல வல்லார் யாவர்?' எனப் பெருமை கூறித் தருக்குகின்றன. என்ன அறியாமை! அந்நாட்டு மக்கள், தாம் மக்கட் பிறவி எடுத்ததன் நோக்கத்தையே மறந்துவிட்டனர். ஒரு குறிப்பிட்ட வேலையின் பொருட்டுப் போன ஒருவன் அதனை மறந்து வேறொன்றைச் செய்துகொண்டிருத்தல் போல—மேனாட்டார் மனிதப் பிறப்பின் நோக்கத்தை மறந்து—இறைவன் ஆணையை அறவே மறந்து—செயற்கை உலகில் வாழ்ந்து வருகின்றனர்; இதனை 'நாகரிகம்' என்றும் வாய் கூசாது கூறுகின்றனர். இஃதன்றோ வியப்பை விளைவிப்பது!

பண்டை இந்திய நாகரிகம்

இயந்திரப் பலமும் செல்வப் பெருக்கமும 'நாகரிகம்' எனக் கருதும் மேனாடுகளின் நிலைமை நம் நாட்டில் முன்னர் உண்டானதில்லை. நம் நாட்டுப் பண்டைப் பெரியவர் களங்கமற்ற மனப்பான்மை, குற்றமற்ற வாழ்வு, எல்லா உயிர்களையும் தம்மைப்போலக் கருதும் உளப்பான்மை—ஆகிய இவற்றையே நாகரிகச் சின்னங்களாகக் கொண்டிருந்தனர். இவற்றை

உடையவரே 'நாகரிகத்தை உடையவர்' என்று கருதப்பட்டனர். அவர்கள் பேராசை கொண்டு பிற நாடுகளைப் பிடித்திலர்; செல்வத்தை நிலையுற்றதென நினைத்து அதனைச் சேர்க்க நினைந்திலர்; செல்வம் நிலையற்றது—தூய ஆன்ம வுணர்வே நிலையுற்றது என்று கொண்டு, தூய வாழ்வை நடத்திவந்தனர். மனிதத் தன்மைக்குரிய எல்லாப் பண்புகளும் அவர்களிடம் அமைந்திருந்தன. அவர்கள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத சட்ட திட்டங்களை விதித்தனர்; தாமே அவற்றின்படி நடந்து ஏனை மக்கட்கு வழி காட்டினர். கோவில்களில் போதிக்கப்படும் உபதேசம், தம் மளவில் இலாபத்தைத் தராதாயின் அதனை அறவே கைந்நெகிழவிட்டு இலாபத்திலேயே கருத்தாயிருக்கும் மேனாட்டாரைப் போலச் சொல்வதொன்றும் செய்வதொன்றுமாக நம் பெரியார்கள் இருந்திலர். சொன்னவற்றைத் தம் வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டிய முனிவர்களைப் பெற்ற நாடு இந்தியாவே; அசோகனைப் பெற்ற நாடு இந்தியாவே; அக்பரைப் பெற்ற நாடும் இந்தியாவே. இந்தியாவில் தோன்றி மறைந்த மஹரிஷிகள், புத்தர், மஹாவீரர் போன்ற பெருமக்கள் நல்லுரைகளால் இந்நாட்டு நாகரிகம் உண்மை நாகரிகமாக ஒளிர்ந்தது.

அன்பற்ற நாகரிகம்

அன்பைப் பரப்ப வந்த—பாபிகளுக்காகத் தாமே சிலுவையில் அறையுண்ட நாசரேத்தூர்

அடிகளின் அன்பு மதத்தைப் பின்பற்றும் மேனாட்டார், இன்று அன்பைப் பரப்புவதற்குப் பதிலாக இயந்திரங்களையும் விஷ வாயுவையும் கோடிக் கணக்கான பவுன்களைச் செலவிட்டுப் பெருக்கி உலகத்தையே நாசம் செய்யத் துணிந்துவிட்டனர்; அன்பைப் பரப்புதற்குப் பதிலாக விஷ வாயுவைப் பரப்புகின்றனர். இவ்விழி நிலைமை 'நாகரிகம்' என்று மேனாட்டவரால் அழைக்கப் படுமாயின், அந்நாகரிகம் இந்தியராய நமக்கு வேண்டா என்று அறைதல் குற்றமாமோ? நீங்களே விடை கூறுங்கள்.

மேனாட்டுப் பொய்த் தோற்றம்

செல்வம் இன்றைய உலகத்தை ஆட்டிப் படைக்கின்றது; மேனாட்டார் அதற்காக ஓயாது அலைகின்றனர்; பொன், வெள்ளி, இரும்புச் சுரங்கங்கள் இருக்கும் இடம் தேடி அலைகின்றனர். ஆயிரக்கணக்கான மைல் தூரத்தைக் கப்பல்கள் மூலமாகக் கடந்து, புதிய தீவுகளைக் கண்டுபிடித்து ஆட்சி நடத்துகின்றனர்; 'இரசாயனப் பொருள்களால் பொன்னைச் சேர்த்தல் கூடுமா? உருளைக் கிழங்கிலிருந்து என்னென்ன செய்யலாம்?' என்றெல்லாம் மனக் கவலை கொண்டு மாண்டொழிகின்றனர். பணப் பித்தின்—அதிகார வெறியின் திருவிளையாடலை என்னென்பது! இப் பேராசை, மனிதனிடம் இயல்பிற் பொருந்தியுள்ள நல்லியல்புகளை நாளடைவில் நசிக்கச் செய்கின்றது; அவற்றுக்கு மரியாதை செய்ய மறுக்கின்றது. இதனாற்றான்

அந்நாடுகள் ஆன்ம வளர்ச்சி, நற்காட்சி, நல்லொழுக்கம் முதலியவை பெற்ற நல்லோரது மதிப்பைப்பெற இயலவில்லை. உலகத்தை மிரட்டுபவர், இயந்திரங்களைப் பெருக்குபவர், பிறரை அழிப்பதாக அச்சுறுத்துபவர், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் அரசியல் நிபுணர்கள் முதலியோரே 'சிறந்த அறிவாளிகள்—சிறந்த நாகரிக மனிதர்கள்' எனக் கொண்டாடப்படுகின்றனர். இவ்விழி நிலைமை—இப் **பொய்த் தோற்றம்** மாறும்வரை நாகரிக சூரியன் மேனாடுகளில் தோன்றல் அரிதாகும்.

பணத்திற்கு முதல் இடமா ?

இன்று பணமே சமூகத்தில் முதல் இடம் பெற்றுள்ளது. பண்டை இந்தியாவில் முதலிடம் சான்றோர்க்கு உரித்தாயிருந்தது. சான்றோர்க்கு உரித்தாக இருந்த அம்முதலிடம் இன்று பணக்காரர்களால் கவரப்பட்டு விட்டது. பணம் உடையவன் யாண்டும் மதிக்கப்படுகிறான். 'பணம், பணம்' என்னும் பேரொலி யாண்டும் பறை ஒலிபோலக் கேட்கின்றது; காதுகளைத் துளைக்கின்றது. இப் பணப்பித்து மனிதனது அமைதியான வாழ்வினை-நாட்டின் நன்னிலையை-உலகத்தின் உயிர்நாடியாக இருந்த மனித ஒற்றுமையைச் சீரழித்து விட்டது. இச்சீரழிந்த நிலைமையே 'நாகரிகம்' என்று இன்று பேசப்படுகின்றது. இது மேற்றிசை நாகரிகமாயின், 'இது எமக்கு வேண்டா' என்று இயம்பலில் இம்மியளவும் தவறுண்டோ ?

4. இந்தியச் சமூகம்*

சமூகச் சீர்திருத்தம்

'சமூகம்' என்பது மக்கள் தொகுதியும் அதன்வலிமையுமே யாகும். மக்கள் தொகுதி ஒற்றுமையுடன் இருந்தாற்றான் அது வலிமையுள்ள சமூகம் எனப்படும். மக்கள் ஒற்றுமையற்றுக் கண்டவாறு சிதறி இருப்பின், அவர் தொகுதி வலிமையுள்ள சமூகமாகக் கருதப்படாது. இந்திய ஜனத் தொகை முப்பத்தெட்டுக் கோடி என்னலாம். ஆயினும் என்? அது வலிமையுள்ள சமூகமாக இல்லை. அது தன்னைப் பல்வேறு மதங்களால்-ஜாதிகளால்-உயர்வு தாழ்வுகளால் சின்ன பின்னப்படுத்திக்கொண்டிருக்கிறது. இந்தியா, உலக ஜனத் தொகையில் ஐந்தில் ஒரு பாகத்தைக் கொண்டது; மிகப் பரந்த நிலப் பரப்பை உடையது. ஆயினும், அஃது ஒற்றுமையற்ற மக்களைக் கொண்டுள்ளது. அதன் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்பவர், அதன் ஒற்றுமைக்கு வழி தேடல் வேண்டும். இந்தியாவுக்கு இப்போது வேண்டப்படுவது சமூகச் சீர்திருத்தமே; பின்னரே அரசியல் சீர்திருத்தம் வேண்டுவது. முன்னது வலுப்பெறுமல், பின்னது பெறினும் பய

* உலக மஹா கவியாகிய இரவீந்திர நாத தாகூர் தமது உலகப் பிரயாணத்தின்போது பற்பல நாடுகளில் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியுள்ளார். அச் சொற்பொழிவுகளில் பொதிந்து கிடக்கும் முதிர்ந்த கருத்துகள் பலவாகும். அம் முதிர்ந்த கருத்துகளில் ஒரு சில ஈண்டுக் கூறப்பட்டுள்ளன.

னில்லை; நிலையாகவும் நில்லாது. ஒற்றுமையற்ற - ஏற்றத் தாழ்வுள்ள—பல்வேறுபட்ட மனநிலை யுடைய மக்களிடம் அரசியல் உரிமை வழங்கித் தான் பயன் என்னை ?

இந்தியா தனது சரித்திர காலத் தொடக்கத்திலிருந்தே இப்பெருங்குறையைப் பெற்றுள்ளது. இப்பெருங் குறையைப் போக்க முயலாமல் அரசியலைப்பற்றிப் பேசுதல் உள்ளே படர்ந்துள்ள நோய்க்கு வெளியே தைலம் தடவுதல் போலாகும். எனவே, இந்தியத் தலைவர்கள் என்போர் இந்தியர் நன்மையை நாடி முதற்கண் செய்யத் தகுவது சமூகச் சீர்திருத்தமே ஆகும். இதனில் வெற்றி பெறுதல், மனித இனத்திற்கே பெருந்தொண்டு செய்ததற்கு ஒப்பாகும். இஃது இறைவற்கு இன்பமான திருத்தொண்டாகவும் இருக்கும்; உலகத்துக்குப் பெருநன்மை புரிந்ததாகவும் இருக்கும்.

சமூகக் களைகள்

பழைய காலத்தில் ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரோடு பழகப் பிரயாண சாதனங்கள் மிகுதியாக இல்லை. ஆதலின், அவர்கள் தம் நாட்டிற்குள்ளேயே ஒன்றுபட்டுக் கலந்து வாழ்ந்தனர்; தமக்கு உரிய கலைகள், நாகரிகம் முதலியவற்றை வளர்த்துத் தம்மையும் உயர்த்தி வந்தனர். ஆனால் இக்காலத்திலோ எனின், பற்பல நாட்டார் ஒன்று சேரவும் கூடி வாழவும் உறவு கொள்ளவும் பொருள்களையும் பிறவற்றையும் மாற்றிக்கொள்ளவும் வசதிகள் அமைந்துள்ளன.

எனினும், பயன் என்? மனிதர் நெருங்கிப் பழகப் பழக வெறுப்பும் மனக் கசப்பும் ஐயமும் பழி வாங்கும் உணர்ச்சியும் வேறுபாடும் வளர்கின்றனவே அன்றி, ஆன்மநேய ஒருமைப்பாடு வளர்தல் இல்லை. இந்நிலை நீடித்து வருதலாற்றான்—ஆன்மவுணர்ச்சி அற்றதாற்றான்—நாகரிகச் சமூகங்கள் சீர்கெட்டு வருகின்றன; இந்தியச் சமூகமும் இழிநிலையை அடைந்து வருகின்றது. இந்தியர்க்குள் மொழி உணர்ச்சி, மாகாண உணர்ச்சி, பிறவியைப்பற்றிய உணர்ச்சி, உள்ளவன்—இல்லவன் என்னும் உணர்ச்சி முதலிய பல திறப்பட்ட உணர்ச்சிகள் வேரூன்றி உள்ளன. அவை 'சமூகக் களைகள்' ஆகும். அக் களைகள் முதற்கண் நீக்கப்படல் வேண்டும். இந்தியர் மனமாகிய வயலில் 'ஒற்றுமை' என்னும் பயிர் வளர வேண்டுமாயின், 'வேறுபாடுகள்' என்னும் களையை முதலில் அகற்றுதல் வேண்டும். அது கல்லி எடுக்கப்படும் நாளே, 'இந்தியச்சமூகம் தலை நிமிரக்கூடும்' என்னும் நம்பிக்கைக் கொள்ள இடந்தரும் நன்னாள் ஆகும். அந்நாள் எந்நாள்?

இந்துமதக் குறைபாடுகள்

இந்தியாவில் உள்ள மதங்களுள் பெரியது இந்து மதம். அஃது அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்ற நிலையில் உள்ளது. பலநாட்டு மக்களின் கொள்கைகளைக் கொண்டுள்ளது; பல மதத்தார் பழக்க வழக்கங்களைப் பெற்றுள்ளது; ஒரு தெய்வ வணக்கம் முதல் பல தெய்வ வணக்கம் ஈறாகக் கொண்டிருப்பது; உள்ளத்தில் பிரார்த்

தனை புரிதல் முதல் உயிர்க்கொலை ஈருகவுள்ள வழிபாட்டு முறைகளைக் கொண்டிருப்பது. இம் மதம் முதலில் சாதிகள் அற்றது; ஆயின், பின்னர் அசைக்க' முடியாதபடி சாதிகள் நிலை பெற்று விட்டன. இச்சாதி முறையால் இந்து மதம், 'எல்லா உயிர்கட்கும் பிறப்பு ஒன்றே' என்னும் உண்மைத் தத்துவத்தை இழந்து விட்டது; பெரும் , பகுதியினரைத் 'தீண்டத் தகாதவர்' என முடிவு செய்து ஒதுக்கி விட்டது. இக்கேடான முடிவு ஏறக்குறைய 2000 ஆண்டுகளாக இருந்து வருகிறது என்னலாம். சுமார் எட்டுக்கோடி மக்கள் தீண்டத் தகாதவர் எனப்பட்டு, பிறர்க்குரிய வசதிகள் மறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டுத் துன்புறுத்தப் படுகின்றனர். இவ்விழி நிலைமை இப்பொழுதுதான் சிறிது சிறிதாக மாறி வருகின்றது. இவ்விழி நிலைமை ஒன்றே இந்து மதத்திற்குப் பெருங்களங்கம் என்னலாம்.

சாதி வேற்றுமை

இந்து மதம் தான் உண்டாக்கிய இக் களங்கத்தோடு சமூகத்தில் பல்வேறு சாதிகளை உண்டாக்கிவிட்டது; 'ஒருவரை ஒருவர் பார்த்தல் ஆகாது; தொடுதல் ஆகாது; ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளலாகாது' என்றெல்லாம் வரம்புகள் உண்டாக்கியது. இவை எல்லாம் அவ்வக்கால மனிதர் திருவிளையாடல்களாக இருப்பினும், இந்து மதத்தின் பெயராலேயே செய்யப்பட்டன. இக் கேடான பழக்க வழக்

கங்களை உடையவர் 'இந்துக்கள்' என்றே இன்றுவரை கூறப்பட்டு வருகின்றனர். இந்து மதம் பிரிவுகளை உண்டாக்கியதே தவிர, மன ஒற்றுமையை உண்டாக்கத் தவறியது. உயர்வு-தாழ்வுகள் உள்ள இடத்தில் மன ஒற்றுமை எப்படி உண்டாகும்? மன ஒற்றுமையே சமூகத்தை முன்னேற்றும் கருவி ஆகும். இவ்வுண்மையை இந்து மதம் அறவே மறந்துவிட்டது. ஒரே மாகாண மக்கள்—ஒரே மொழியைப் பேசும் மக்கள், இச் செயற்கைச் சாதிகளால் தமக்குள் ஒற்றுமை அற்றுத் தவிக்கின்றனர்; மனக் கசப்பு, பொறுமை, ஐயங்கொளல் இவையே இன்றைய இந்திய மக்கள் உள்ளங்களில் குடி கொண்டுள்ளன. மன ஒற்றுமை இருக்கவேண்டிய இடத்தில் மன வேற்றுமையே தனியரசு செலுத்துகின்றது. சுருங்கக் கூறின், இச் சாதிகளால் இந்து மதச் சமூகம் தன் உயிர் நாடியை இழந்துவிட்டது. அதன் பயனாக நம் நாடு நாள்தோறும் சாதிப் பூசல்களையும் மதப் பூசல்களையும் தரிசிக்கும் பேறு பெற்றுள்ளது. சாதிப் பூசல்களால் தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. 'இன்ன தொழிலை இன்னவரே செய்தல் வேண்டும்' என்னும் பழங்காலக் கோட்பாடு இன்றும் இந்நாட்டில் இருந்து கொண்டு தொழில்களை நாசமாக்கி வருகிறது. இதனால் தொழிலின் மேன்மை அறியப்படாது கீழ் நிலைமைக்குக் கொண்டு போகப்படுகிறது. 'திறமை' என்பது அவரவர் இயல்பிற்றே அன்றி ஒரு சாதிக்கோ—பரம்பரைக்கோ உரிய

தன்று. ஆயின், இங்குத் 'திறமை' என்பது 'பரம்பரைக்கு உரியது' என்னும் நிலைமைக்குத் தாழ்ந்துவிட்டது.

ஒற்றுமை அற்ற நிலைமை

ஒரு நாட்டு மக்கள் இச் சாதிப் பிரிவுகளால் நீண்ட காலமாக வேறுபட்ட சமூகத்தினர்போல ஒதுங்கி வாழ்வதால் அவ்வச் சாதிப் பழக்கவழக்கங்கள் மாறுபட்டவை ஆகின்றன. இம்மாறுபாடுகள் நிலைத்துவிட்ட பிறகு இவை ஒன்று கூடல் இயலவில்லை; ஒற்றுமை உண்டாதலும் அரிதாகத் தோற்றுகிறது. இந்து மதத்தார் ஒருவரை ஒருவர் வேறு பட்டவராகக் கருதுகின்றனர். இக் குழப்ப நிலைமையால், மன ஒற்றுமையும் ஆன்ம உணர்ச்சியும் அற்று விடுகின்றன. ஒருவரை ஒருவர் ஐயுறுகின்றனர். ஒற்றுமை அற்ற இடத்தில் 'சமூக ஒற்றுமை'யை எதிர்பார்த்தல், மலடியிடம் பிள்ளைப் பேற்றை எதிர்பார்த்தல் போலாம்.

ஒற்றுமைக்கு வழி

சமூகம் பலம் பொருந்தியதாதல் வேண்டுமாயின், மக்களின் உணர்ச்சி, பேச்சு, செயல் இவை யாவும் ஒன்றுபட்டனவாக இருத்தல் வேண்டும். அங்ஙனமாயின்றான் சமூகம் வலியுடைத்தாகும். அப்பொழுதுதான் அச் சமூகம் உயரிய நோக்கங்களைக் கொண்டு ஒளிரும்; தனது முன்னேற்றத்தைக் கருதி இடைவிடாது உழைக்கும்.

சமூக உரிமை

இவ்வுயரிய நிலையை இந்தியச் சமூகம் அடைய வேண்டுமாயின், மத ஒற்றுமை ஏற்படல் வேண்டும்; இந்து மதத்திற்குள் உள்ள சாதி வேறுபாடுகள் அழிதல் வேண்டும்; உயர்வு-தாழ்வுகள் ஒழிதல் வேண்டும். மனிதன் மனிதனாக வாழ்தல் வேண்டும். மனிதன் உரிமையற்ற நிலையில் தவிக்கும்போது மண்ணுக்கு உரிமை தேடல் அறமாகாது; இயற்கைக்கும் மாறாகும். தன்னளவில் உரிமையோடு வாழ வழியற்ற ஒருவன்—சமூக உரிமையற்ற ஒருவன் நாட்டு உரிமைக்குப் பாடுபடுதல் நகைப்பிற்கு இடமன்றோ? எனவே, இந்தியாவிற்கு இப்பொழுது உடனே வேண்டப்படுவது சமூக உரிமையே ஆகும். மனிதன் மனிதனாக வாழும் உரிமையே முதலில் வேண்டற்பாலது. 'உரிமை' என்பது பிறர் தரத்தக்கது அன்று; கடைச் சரக்கும் அன்று. அஃது ஆன்ம வுணர்ச்சியால் உதயமாவது; உள் உணர்விலிருந்து வெளிப்பட்டு ஒளிர்வது; மனித சமூகத்தைத் தூய்மை ஆக்குவது; சுகவாழ்வைத் தருவது. விஷ வாயுக்களோ—போர்க் கருவிகளோ மெய்யான உரிமையை ஒருபோதும் தாரா. மக்கள் நேரிய வாழ்க்கையை நடத்தத் தொடங்கும் பொழுதே உரிமை அவர்களிடம் தோற்றமெடுக்கும். சமூக உரிமையற்ற அரசியல் உரிமை வருதல் அரிது; வரினும் நிலை பெறுதல் அதனினும் அரிது. 'மனித' உரிமை வேறு; 'மண்' உரிமை வேறு. முன்னதே பின்னதின்

உயர்ந்தது என்பது என் கருத்து. முன்னது வலுப்பெறுமாயின், பின்னது தானே வரும். நாம் அதற்காக ஆடி ஓடி அலைய வேண்டா.

முடிவுரை

இந்தியச் சமூகம் முன்னேற வேண்டுமாயின், அஃது ஏனைய சமூக நிலைமைகளை நன்கு அறிதல் வேண்டும்; சாதிகள் அற்ற—ஒரே மனநிலை கொண்ட ஏனைய சமூகங்களை எண்ணிப் பார்த்தல் வேண்டும்; அவற்றின் குறிக்கோள்களைத் தானும் கைக்கொண்டு, தன்னிடம் நிலைத்துள்ள கேடான வேறுபாடுகளை ஒழித்து ஆன்ம உணர்ச்சியோடு ஒன்றுபட்டு உழைத்தல் வேண்டும். ஒன்றுபட்ட இடத்திற்றான் உண்மை ஞானம் உதயமாகும். ஆ! இந்நிலைமை என்று ஏற்படுமோ, அன்று நமது தாய் நாடாகிய இந்தியா ஒரே சமூகமாக ஒளிர இடமுண்டு. அந்த நாள் என்று வரும்?

5. நோபெல் பரிசுபெற்ற தமிழர்

நோபெல் வரலாறு

இளமைப் பருவம்

ஆல்ப்ரெட் நோபெல் என்பவர் ஸ்வீடன் தேசத்தவர்; எளிய பெற்றோர்க்கு 1833-ல் மூன்றாம் பிள்ளையாகப் பிறந்தவர்; பிழைப்புத் தேடி நாடு நாடாக அலைந்த பெற்றோருடன் அலைந்து ஆரம்பக் கல்வியைக் கற்றவர். அவர் தந்தையாரான 'இம்மான்யுவல் நோபெல்' என்பவர் வெடி மருந்து செய்யும் வகையைக் கண்டறிந்தார்; அவரை இரஷ்ய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலைக்கு இம்மான்யுவல் சர்வாதிகாரி ஆனார். அதுமுதல் அவரது வறுமைப்பிணி சிறிது சிறிதாக மறைந்தது. தந்தையார் கட்டளைப்படி ஆல்பிரட் பல நாடுகட்குச் சென்றார்; அங்கு வெடிமருந்துகளைத் தயாரித்த—ஆராய்ந்த அறிஞர்களிடம் பயிற்சி பெற்றார். அவர் இரஷ்யா திரும்பி வருவதற்குள் இரஷ்யப் போர் நின்றுவிட்டது; அதனால் வெடி மருந்துத் தொழிற்சாலை மூடப்பட்டது. ஆயினும், ஆல்பிரட் மனக்கவலை கொள்ளவில்லை. அவர் முயன்று ஆராய்ந்து 'நைட்ரோ கிளிசரின்' என்னும் பொருளை வெடிமருந்தில் பயன்படுத்தும் தனி முறையைக் கண்டுபிடித்தார்; அதனைச் செய்ய முழு உரிமையையும் அரசாங்கத்தினிடமிருந்து பெற்றார்; இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளில் பொருள் உதவி பெற்று, 'நைட்ரோ

கிளிசரின் கம்பெனி'யை உண்டாக்கினர். போர் எங்கும் பரவி இருந்ததால் கம்பெனிக்குப் பொருள் வருவாய் பெருகியது. ஆல்பிரட் மேன் மேலும் முயன்று புதியபுதிய வெடிமருந்துகளைக் கண்டறிந்தார்; அவரது உழைப்பின் பயனாகப் பத்துத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்காட்லண்ட், ஆப்பிரிக்கா முதலிய பல நாடுகளில் வெடிமருந்துக் கம்பெனிகள் நிறுவப்பட்டன. இவற்றிலிருந்து ஆண்டில் இலக்ஷக்கணக்கான பவுன்கள் இலாபம் கிடைத்தன. சில ஆண்டுக்ட்குள் ஆல்பிரட் கோடீஸ்வரர் ஆனர்.

கொடையாளி

ஆல்பிரட் சிறந்த வள்ளலாய் விளங்கினர்; ஆண்டுதோறும் பல்லாயிரம் பவுன்களைப் பிறர்க்குக் கொடுத்து மகிழ்ந்துவந்தார்; ஆண்டுக்கு இலக்ஷம் பவுன்களுக்குமேல் வருமானத்தை உண்டாக்கும் தமது சொத்தை உலகிற்குப் பயன் படுத்த விழைந்தார்; தமது சொத்தில் ஐந்தில் ஒரு பகுதியை வைத்தியசாலைகட்கும் உற்றார் உறவினர்க்கும் பிரித்துவைத்தார். எஞ்சிய பகுதிகளின் வருட வருமானம் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் (1) இலக்கியம், (2) பௌதிகம், (3) இரசாயனம், (4) மருத்துவம் (5) சமாதானம் என்னும் துறைகளில், முன் வருடத்தில் சிறந்த தொண்டாற்றியவர்களுக்குப் பரிசாக அளிக்கப்படவேண்டும் என்பது அவரது விருப்பம் (will).

நோபெல் பரிசு

இந்த ஐந்துவகைப் பரிசுகட்குமே 'நோபெல் பரிசு' என்பது பெயர். இதனை ஆண்டுதோறும் 'பெறத்தக்கவர் இன்னவர்' என்பதை முடிவு செய்ய ஸ்டாக்ஹோமில் (நார்வே) இருக்கும் இலக்கிய-பௌதிக-இரசாயன-மருத்துவக் கழகங்கட்கே உரிமை உண்டு. சமாதானப் பரிசினை அளிக்க நார்வே நாடாளும் மன்றத்திலிருந்து அவ்வப்போது தேர்ந்தெடுக்கப்படும் ஐவர் குழுவிற்கே உரிமையுண்டு. இக் கழகங்களும் குழுவும் 'இந்த ஆண்டில் பரிசு பெறத்தக்கவர் இல்லை' என்று முடிவு செய்யின், பரிசுத்தொகை முதலுடன் சேர்ந்துவிடும். ஜாதி-நிற-மொழி வேறுபாடுகள் இன்றி ஆண்டுதோறும் இப்பரிசுகள் பல நாட்டு அறிஞர்க்கு வழங்கப்பட்டு வருகின்றன. இப்பரிசினைப் பெறுபவர் எவராயினும் சரி, அவர் உலக அறிஞர் மதிப்புக்கு உரியவர் ஆவர் என்பதில் ஐயமுண்டோ? இப் பெறுதற்கரிய பெரும் பரிசினைப் பெற்று, உலக அறிஞர் மதிப்புக்கு உரியவரானவரே நம் தமிழ் நாட்டுப் பௌதிக ஆராய்ச்சி நிபுணராகவுள்ள **சர். சந்திர சேகர வேங்கடராமன்** என்பவர்.

இராமன் வரலாறு

இளமைப் பருவம்

இராமன், சந்திர சேகர அய்யர் என்ற பௌதிகப் பேராசிரியர் குமாரர் ஆவர். இவர் கி. பி. 1888-ல் திருச்சிராப்பள்ளியில் பிறந்தவர்;

இளமை முதலே பௌதிகத்திலும் கணிதத்திலும் விருப்பமும் ஊக்கமும் காட்டிவந்தவர்.

இவர் தமது பதின்மூன்றும் ஆண்டிலேயே எப்.ஏ. (F.A.) தேர்வில் தேறிச் சென்னை மாகாணக் கல்லூரியில் பி.ஏ. (B.A.) வகுப்பிற் சேர்ந்தார்; ஆசிரியர்கள் உள்ளங் கவர்ந்த மாணவராக விளங்கிப் பி.ஏ. தேர்வில் முதல்வராகத் தேர்ச்சி பெற்ருர்; பின்னர் எம்.ஏ. (M.A.) வகுப்பிற் சேர்ந்துபயின்ருர். எம்.ஏ. வகுப்பு மாணவர் ஆராய்ச்சி புரிய வசதி உண்டு. ஆதலின், இராமன் பௌதிகத் துறையில் தனி ஆராய்ச்சிகளை நடத்தி வந்தார்.

ஆராய்ச்சி மாணவர்

எம். ஏ. வகுப்பில் இராமனுடன் படித்து வந்தவருள் அப்பா ராவ் என்பவர் ஒருவர். அவர் ஒருநாள் தமது சோதனைப் பயிற்சி[1]யில் ஒரு தவறு கண்டார். அத்தவறு, ஒலியின் ஒரு பிரிவைப் பற்றியதாகும். உடனே அந் நண்பர் தம் பௌதிக

1. Experiments.

ஆசிரியரான ஜோன்ஸ் துரையிடம் சென்று 'எனது சோதனையில் இத்தவறு ஏற்படக் காரணம் என்ன? அஃது ஏற்படாமல் இருக்க யாது செய்யவேண்டும்?' என்று கேட்டார். ஆசிரியர் விடை யளிக்கவில்லை. உடனே இராமன், அப்பாராவின் ஐயத்தைப் போக்கினார்; அத் 'தவறு' இனி ஏற்படாதிருக்கப் புதிய சோதனை அமைப்பு ஒன்றை நிறுவினார்; தமது புதிய முறை சிறந்ததுதான் என்பதைப் பன்முறை சோதித்து உணர்ந்தார்; பின்னர்த் தம் ஆராய்ச்சி முடிபுகளை ஒழுங்கு படுத்திக் கட்டுரையாக வரைந்து ஆசிரியரிடம் காட்டிப் 'பிழை திருத்தித் தருக' என்று வேண்டினார். அக்கட்டுரை மூன்று மாதம் வரை ஆசிரியரிடமே இருந்தது. ஆசிரியரும் பிழை திருத்தவில்லை. ஆயினும், இராமன் அதனை ஒருவாறு அவரிடமிருந்து பெற்று, இலண்டனில் உள்ள விஞ்ஞானப் பத்திரிகைக்கு அனுப்பினார். அப் பத்திரிகையில் அக்கட்டுரை அழகாக வெளிப்படுத்தப்பட்டது. இராமனது ஆராய்ச்சி அறிவைப் பாராட்டிய ஜோன்ஸ் துரை, அவரை மேற்படிப்புக்காக இங்கிலாந்திற்கு அனுப்ப விரும்பினார். ஆயின், 'மேனாடுகளில் இருத்தற்குரிய உடல் நிலை இவரிடம் இல்லை' என்று மருத்துவ நிபுணர்கள் கருதியதால், இராமன் இங்கிலாந்து செல்ல முடியவில்லை. இதற்கிடையில் இராமன் எம். ஏ. தேர்விலும் முதல்வராகத் தேர்ச்சி பெற்றார்.

அரசாங்க அலுவல்

இராமன் தொழில் முறைக்கேற்ற கணக்கு வழக்குகள் தொடர்பான எப். ஸி. எஸ். என்னும்

தேர்விலும்—இந்தியா முழுவதும் தேர்வு எழுதியவருள்—முதல்வராகத் தேறினர்; தமது பத்தொன்பதாம் வயதில் (1907-ல்) கல்கத்தாவில் டிப்டி அக்கவுன்டென்ட் ஜெனரல் பதவியில் அமர்ந்தார். அரசாங்க அலுவலில் இருந்த இராமனது உள்ளம் பௌதிக ஆராய்ச்சியிலேயே சென்றது. அஃது இயற்கைதானே! இவர் கல்கத்தாவில் இருந்த '**இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்க**' உறுப்பினர் ஆயினர்; நாளடைவில் கல்கத்தாப் பல்கலைக் கழகத் துணைத் தலைவரான சர். அஷுடோஷ் முகர்ஜி முதலிய பேரறிஞர் நட்புக்கு உரியவர் ஆயினர். இராமன் 1910-வரை அப் பெருமக்களுடன் பழகினர்; பல ஆராய்ச்சிகளை நடத்தினர்; ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டார்.

இராமன் 1910-ல் இரங்கூனுக்கு மாற்றப்பட்டார்; பிறகு நாகபுரிக்கு மாற்றம் கிடைத்தது; இறுதியில் அக்கவுன்டென்ட் ஜெனரலாக மீண்டும் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார். அப்பொழுது இவர் கொண்ட மகிழ்ச்சியை அளவிட முடியாது. இராமன் மிகுந்த ஆவலோடு ஆராய்ச்சிச் சங்கத்தில் சேர்ந்து மீட்டும் வேலை செய்து வந்தார்.

பேராசிரியர் ஆதல்

1914-ல் இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்கம், பலர் பொருள் உதவியால் விரிவுற்றது; 'விஞ்ஞானக் கல்லூரி'யும் ஏற்பட்டது. இராமன் அக் கல்லூரியில் பௌதிகப் பேராசிரியராக

அமர்த்தப்பட்டார். அன்றே அவர் வகித்துவந்த அரசாங்க உயர் பதவி அவரை விட்டு விலகியது. இராமன் சிக்கலான உண்மைகளையும் மாணவர் எளிதில் அறிந்துகொள்ளுமாறு செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்; ஆராய்ச்சி மாணவர்களிடம் அன்பும் ஆதரவும் காட்டி, அவர்க்கு ஆராய்ச்சியில் மன எழுச்சி உண்டாக்குபவர்.

பெயரும் புகழும்

1. 1921-ல் கல்கத்தாப் பல்கலைக் கழகம் இராமனுக்குப் 'பேராசிரியர்'[2] பட்டத்தை அளித்தது.

2. இலண்டனில் உள்ள இராஜ சங்கம்[3] 1924-ஆம் ஆண்டில் இவரைத் தோழராக[4] ஏற்றுக்கொண்டது.[5]

3. மேனாட்டு விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்கள் பல இராமனைத் தத்தம் நாடு போந்து சொற்பொழிவு ஆற்றுமாறு அழைப்புகள் விடுத்தன. இராமன் அவற்றை ஏற்று, 1924-ல் இந்தியாவை விட்டுப் புறப்பட்டார்; இங்கிலாந்து சென்றார்; பிறகு கனடாவை அடைந்தார். இராமன் கனடாவில் செய்த பௌதிக ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளைக் கேட்டு அமெரிக்க நாட்டு அறிஞர் பாராட்டினர். அவர்களுட் புகழ்பெற்ற 'இராபர்ட் ஆண்ட்ரூமில்லிகன்' என்பவர் பாராட்டுக்கு இராமன் உரியவரானதே குறிப்பிடத் தக்கதாகும். அயின்ஸ்டீன் போன்ற அழியாப் புகழ்பெற்ற அறிஞரே பேசத்தக்க

2 Professor 3 Royal Society 4 Fellow
5 F.R.S. (Fellow of the Royal Society, London).

மில்லிகன் ஆராய்ச்சிக் கழகத்தில் இராமனைப் பேசுமாறு மில்லிகனே வேண்டினார் எனின், நம் இராமனது ஆராய்ச்சித் திறனை என்னென்பது!

4. பின்னர் இராமன் அமெரிக்க ஐக்கிய நாடுகள், நார்வே, ஸ்வீடன், ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ், இடலி முதலிய நாடுகட்குச் சென்றார்; ஆங்காங்கு நடந்த விஞ்ஞானப் புலவர் மகாநாடுகளில் கலந்துகொண்டார்; அங்கு நடைபெற்ற வாதங்களில் பங்கு எடுத்துக் கொண்டு பெயர் பெற்றார்; ஐரோப்பிய ஆராய்ச்சிப் புலவர் நன்மதிப்பைப் பெற்றார்; அவருட் சிறந்தவர் மைக்கேல்சன், ஸீமன்[6], பாப்ரே[7] முதலியோர் ஆவர். இவர் அனைவரும் நோபெல் பரிசுபெற்ற பெருமக்கள். இவர்களுடைய பழக்கமும் இவர்கள் இராமனது நுண்ணறிவைப் பாராட்டும் வாய்ப்பும் கிடைத்தமை இராமனுக்குப் புகழை உண்டாக்கின. இவர் 1929-ல் 'சர்' பட்டம் அளிக்கப்பெற்றார்.

இராமன் நிகழ்ச்சி [8]

இஃது இராமன் கண்டறிந்த புதுமை. "நீருக்கு இயற்கையில் நிறமில்லை. ஆயின், சூரிய ஒளி நீரில் பாயும் பொழுது, அந்நீர் குறித்த ஒரு நிறத்தை அடைகின்றது. இந்நிறம் ஒளிச்சிதறலால் உண்டாகின்றது. நீரில் உள்ள 'கூட்டு அணுக்கள்' [9] கதிரவன் ஒளியைச் சிதறச் செய்கின்றன; செய்து, ஒரு குறித்த நிறத்தை மட்டும்

---

6 Zeeman 7 Fabray 8 Raman Effect
9 Molecules

அப்பொழுது ஏற்கின்றன," என்ற உண்மையைக் கண்டறிந்த இராமன், 'ஒளிச்சிதறல்' என்பதைப்பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்யலானார். இராமன், குறித்த பண்புகளைக்கொண்ட ஒரே வகைக் கிரணங்களை குறித்த ஒரு திராவகத்தினுட் செலுத்தினார்; பிறகு அத்திராவகத்திலிருந்து வெளிக் கிளம்பிய கிரணங்களைச் சோதனை செய்தார்; அவை நிற மாறுபாடு அடைந்திருத்தலைக் கண்டார்; அத்திராவகத்தில் இருந்த கூட்டு அணுக்களே அம் மாறுபாட்டை உண்டாக்கின என்பதை உணர்ந்தார்; அஃதாவது, அவ்வணுக்கள், திராவகத்தினுட் புகுந்து ஒளிக்கிரணங்களைச் சிதற அடித்து, அவற்றின் பண்புகளையும் மாற்றிவிட்டன என்பதை அறிந்தார். இவ்வாராய்ச்சியே 'இராமன் நிகழ்ச்சி' என்பது. இஃது இரசாயன ஆராய்ச்சிக்குப் பெரிய ஊன்றுகோல் என்னலாம். இவ்வற்புத ஆராய்ச்சிக்காக இராமன் 1930-ல் நோபெல் பரிசு அளிக்கப்பெற்றார்.

பிறவகை ஆராய்ச்சிகள்

இராமன் பௌதிகத்தின் பிற துறைகளிலும் ஆராய்ச்சிகள் நிகழ்த்தியுள்ளார்; இன்றும் நிகழ்த்தி வருகின்றார்; வாயுப்பொருள்களின் காந்த சக்தி, இசைக் கருவிகளின் ஓசைத் தத்துவம், காதுக்கெட்டா ஓசை விளக்கம்[10] முதலிய துறைகளில் பல ஆராய்ச்சிகளை வெளிப்படுத்தியுள்ளார். 'காதுக்கெட்டா ஓசை விளக்கம்'பற்றி

10 Ultra-sonics

இவர் வெளியிட்டுவரும் உண்மைகள் மிக்க பாராட்டுக்கு உரியவையாகும்.

பெங்களூர் ஆராய்ச்சிக் கழகம்

சர். சி. வி. இராமன் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பதினைந்து ஆண்டுகள் பேராசிரியராக இருந்தார்; பின்னர் 1933-ல் பெங்களூர் ஆராய்ச்சிக் கழகத்திற்குத் தலைவர் ஆனார். இவர் அங்குச் சென்ற பிறகு அக்கழகம் பௌதிகத் துறையில் முதன்மை பெற்று விளங்குகின்றது. அக்கழக ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளிநாட்டறிஞரும் உள்நாட்டறிஞரும் ஆர்வத்துடன் படித்து வருகின்றனர்.

நல்லியல்புகள்

இராமன் இளமைமுதலே இடைவிடா ஊக்கமும் உழைப்பும் உடையவர்; எடுத்த ஒன்றினைத் தொடுத்து முடிக்கும் இயல்பினர்; மிக்க வருவாய் வரும் அரசாங்க வேலையை உதறித் தள்ளிப் பேராசிரியர் பதவியை ஏற்றது, பௌதிக சாத்திரத்தில் இவருக்கிருந்த ஆர்வத்தை உணர்த்துகிறது. பெரிய பட்டங்கள் பெற்ற இவர் அடக்கமே உருக்கொண்டவராவர்; மாணவர்கட்கு ஊக்கமும் ஆக்கமும் அளிப்பதிற் சிறந்த பேராசிரியர். அதனால் மாணவர் இவரைத் தாயினை நாடும் கன்றெனை நாடி இருப்பர். ஆராய்ச்சிக்குப் 'பொறுமை' வேண்டற்பாலது. இராமன் பொறுமைக்கு இருப்பிடம் என்னலாம். 'மேனாடுகட்குச் செல்லாமலே நம் நாட்டு இளைஞர், சாத்திரப் பயிற்சியில் முதன்மை பெற

வேண்டும்' என்பது இவரது கருத்து. இவருடைய அரிய உழைப்பால் பௌதிக உலகமே பெருமை பெற்றது; இவரைப்பற்றி அறிஞர் அனைவரும் அறிய இடம் ஏற்பட்டது. இவர் பொதுவாக இந்தியர் ஆதலால், இவரால் பௌதிக உலகில் இந்தியா மதிப்புப் பெறலாயிற்று என்னலாம். இவரைச் சிறப்பாகப் பெற்ற தமிழ்நாடு பெருமையுடையதே ஆகும். இவர் பல்லாண்டுகள் வாழ்ந்து, மேலும் பல ஆராய்ச்சிகள் செய்து நாட்டிற்கும் உலகிற்கும் பயன்பட எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக!

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

—பட்டினத்தார்.

6. விவேகானந்தர் கடிதங்கள்

I

யோக்கஹாமா,
ஜூலை 10, 1893.

அன்புள்ள ஐயா,

எனது நீண்ட பிரயாணத்தில் அடிக்கடி உங்கட்குக் கடிதம் எழுதாமல் இருந்ததைப்பற்றி

மன்னிக்கும்படி வேண்டுகின்றேன். ஒவ்வொரு நாளும் ஓய்வில்லை; சிறப்பாக மூட்டை முடிச்சுகளைப் பற்றிக் கவலைப்படாத—எடுத்தறியாத என்னைப் போன்றவர்க்கு இப் பிரயாணத்தில் அவற்றைப் பாதுகாப்பதே பெரிய தொல்லையாக இருக்கிறது. ஒரு குடும்பி என்ற முறையில்

இருக்க வேண்டுபவனுகிறேன். இங்ஙனம் இருத்தல் எனது நேரத்தைக் கொள்ளை கொள்கிறது. இஃது உண்மையில் எனக்குத் தொல்லையாகத் தான் இருக்கிறது.

நாங்கள் பம்பாயிலிருந்து புறப்பட்டுக் கொழும்புத் துறைமுகத்தை அடைந்தோம். எங்களை ஏற்றிச்சென்ற கப்பல் அத் துறைமுகத்தில் ஒரு நாள் முழுவதும் தங்கி இருந்தது. நாங்கள் நகரத்தைக் காண விழைந்து கப்பலைவிட்டு இறங்கினோம்; நகரத்தின் பல தெருக்கள் வழியே நடந்தோம். நாங்கள் பார்த்தவற்றுள் இப்பொழுது நினைவிற்கு வருவது அழகிய பௌத்த விஹாரம் ஒன்றுதான். அங்கு நிர்வாண (முத்தி) நிலையை அடையத் தரும் பரிபக்குவ நிலையில் புத்த பகவான் உருவச்சிலை அமைக்கப்பட்டிருந்தது. அது மிகவும் அழகிய வேலைப்பாடமைந்த சிலையாகும்.

நாங்கள் அடுத்தபடி தங்கிய துறைமுகம் பினங்கு என்பது. அது மலேயா தீபகற்பத்திலிருந்து பிரிந்து கடலில் நீண்டிருக்கும் நிலப்பகுதியாகும். அங்குள்ள மக்கள் மலேயா நாட்டு முஸ்லீம்கள். அவர்தம் முன்னோர் பண்டைக் காலத்தில் கடற்கொள்ளைக்கூட்டத்தினர் ஆவர். பண்டைக்காலக் கப்பல்களில் பீரங்கிகள் இல்லை. ஆயின், இக்காலக் கப்பல்கள் ஆயுதம் தாங்கிகள் ஆதலால், கொள்ளைக்கூட்ட மரபினர் தம் பண்டைத் தொழிலை விட்டு அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். நாங்கள் பினங்கிலிருந்து

சிங்கப்பூருக்குச் செல்லும் பொழுது 'சுமத்ரா' தீவின் பகுதிகள் சில கண்ணெதிரே பட்டன. கப்பற் கொள்ளைக் கூட்டத்தினர் வாழ்ந்த இடங்கள் சிலவற்றை எங்கள் கப்பல் தலைவர் எங்கட்குக் காட்டினார். சுமத்ராவில் உள்ள மலைமுகடுகள் எங்கள் பார்வையைத் தம்பால் இழுத்தன.

சிங்கப்பூர் மலேயா நாட்டுத் தலைநகரம் ஆகும். அங்குப் பலவகை அரிய செடி-கொடி-மரங்களைக் கொண்ட காட்சிச் சாலை ஒன்று இருக்கின்றது. 'பிரயாணிகள் கை' எனப்படும் விசிரி போன்ற இலைகளைக் கொண்ட செடிகள் ஏராளமாகக் காண்கின்றன; ரொட்டிப்பழ மரங்களும்[1] மிகப் பலவாக இருக்கின்றன. சென்னையில் மாமரங்கள் மிக்கிருத்தல் போல இங்கு[2] மிகுந்து காண்கின்றன. இங்குள்ள மாம்பழங்கள் ஒப்பற்றவை. இங்குள்ள மக்கள், சென்னை மாகாண மக்களைப்போல ஒரே அளவுள்ள உஷ்ணப் பிரதேசத்தில் இருப்பினும் அவ்வளவு கரிய நிறம் உடையவர் அல்லர். சிங்கப்பூரில் அழகிய பொருட் காட்சிச்சாலை ஒன்றும் இருக்கின்றது.

அடுத்தது ஹாங்காங்.[3] இங்குள்ளவர் சீனர். இங்கு எல்லாவகைத் தொழில்களையும் நடத்துபவர் சீனரே; வாணிகம் செய்பவரும் சீனரே யாவர். ஒரு கப்பல் துறைமுகத்தை அடையுமாயின், நூற்றுக்கணக்கான சிறிய-பெரிய படகுகள் வந்து கப்பலை வளைத்துக்கொள்கின்றன. அவை பிரயாணிகளை நகரத்திற்கு அழைத்துச்

1. Bread-fruit tree 2 Mangosteen 3 Hongkong

செல்லவே அவ்வாறு வந்து சூழ்கின்றன. ஒவ்வொரு படகிலும் படகோட்டி தன் குடும்பத்துடன் வாழ்கிறான். அவன் குடும்பத்துக்கெனப் படகில் தனி இடம் உண்டு. படகில் இரண்டு சுக்கான்கள் உண்டு. ஒன்றைக் கையாலும் மற்றொன்றைக் காலாலும் அசைத்துப் படகைச் செலுத்தவேண்டும். இவ்வேலையைப் பெரும்பாலும் படகோட்டியின் மனைவியே செய்வது வழக்கம். அவள் முதுகில் குழந்தை ஒன்று துணியால் கட்டப்பட்டிருக்கும். சீனத்தாய் எந்தத் தொழிலைச் செய்யும்பொழுதும் அக்குழந்தை அவ்வாறே முதுகில் கட்டப்பட்டு அமைதியாக இருத்தல் வியப்பைத் தருவதாகும். ஹாங்காங் துறைமுகத்திற்குள் படகுகளும் நீராவிப் படகுகளும் கூட்டம் கூட்டமாக வருதலும் போதலும் காணத்தக்க ஒரு காட்சியாகும். தாயின் முதுகில் கட்டப்பட்டுள்ள பிள்ளைக்கு அரிசி அடை கொடுத்துவிட்டாற் போதும்; அஃது அமைதியாக அதனை அரைத்துக்கொண்டு இருக்கும்; பிற காட்சிகளைப் பார்த்துக் களித்தலில் அதற்கு விருப்பம் இல்லை. இந்தியப் பிள்ளைகள் தளர்நடைப் பருவத்தில் தள்ளாடும் பொழுது, அதே வயதுடைய சீனப் பிள்ளை அமைதியாக வேலை செய்யப் போதலைக் காணல் வருந்தத்தக்க காட்சியாகும். அச்சீன மகன் வாழ்க்கையின் தேவையை அவ்விளம்பருவத்திலேயே கற்றுக்கொண்டான் போலும்! சீனரது கொடிய வறுமையே இதற்குக் காரணம். ஏறத்தாழ இந்தியரும் இங்ஙனமே வறுமை

வாழ்வு வாழ்கின்றனர். அவ்வறியாமை, அவர்களை வறுமையைத் தவிர வேறு எதனையுமே எண்ணாதபடிச் செய்கின்றது.

ஹாங்காங் மிக்க அழகு பொருந்திய நகரம். அது மலைமீதும் மலைச் சரிவுகளிலும் அமைந்துள்ளது. மலை உச்சிக்குக் கீழிருந்து போய்வர மின்சார வண்டி வசதியுண்டு. அவ்வண்டி கம்பியாலும் நீராவியின் சக்தியாலும் நடமாடுகின்றது.

நாங்கள் மூன்று நாள் ஹாங்காங்கில் தங்கி இருந்தோம்; பின்னர், அங்கிருந்து எண்பது கல் தொலைவில் உள்ள காண்டன்[4] நகரத்திற்கு ஆற்று வழியே (படகில்) சென்றோம். அடடா! என்ன சுறுசுறுப்பான போக்கு வரவு! ஆற்று நீர் மறைப்புண்டதோ என்று எண்ணத்தக்கவாறு எண்ணிறந்த படகுகள் போகின்றன-வருகின்றன. அவற்றுள் பல, சாமான்களை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு ஏற்றிச்செல்வனவாகும். நூற்றுக்கணக்கான பிற படகுகள் வீடுகளாகப் பயன்படுகின்றனவாகும்; அவற்றுட் பல பெரியவையாகவும் பார்க்க அழகு பொருந்தியவையாகவும் இருக்கின்றன. சில படகுகளில் உள்ள வீடுகள் இரண்டு மூன்று அடுக்குகளை உடையன. சுற்றிலும் தாழ்வாரம் உடையன. இவ் வீடுகளை 'மிதக்கும் மாளிகைகள்' என்று சொல்லத் தடையுண்டோ?

---

4 Canton

சீன அரசாங்கத்தார், அந்நியர் இருத்தற்கென்று விடுத்துள்ள நிலப் பகுதியில் நாங்கள் சென்று தங்கினோம். ஆற்றின் இரண்டு கரைகளிலும் எங்களைச் சுற்றியுள்ள இடம் முழுவதும் (பல கல் தொலைவுவரை) பெரிய நகரமாகக் காணப்படுகிறது. மக்களுடைய ஓசையும் சாமான்களைத் தள்ளும் ஓசையும் படகுகளைச் செலுத்தும் ஓசையும் செவிகளைத் துளைக்கும். அக் காண்டன் நகரம் சுறுசுறுப்புக்கு இடமானது; நெருக்கமுள்ள மக்கள் தொகையைக் கொண்டது. எனினும், அது வெறுக்கத்தக்க நகரமாகும். என்னை? அஃது இந்திய நகரம்போல அசுத்தங்கள் நிறைந்த நகராகுமா? எனின், இல்லை. அசுத்தமான பொருள் எதனையும் வீணாகப்போகுமாறு சீனர் விடுவதில்லை. சீனன் ஒருபோதும் குளிப்பதில்லை என்று சபதம் செய்துளன் போலும்! சீனர் நீராடுதல் இல்லை. ஒவ்வொரு வீட்டின் அடிப்பகுதி கடையாகக் காண்கிறது; மேற்பகுதியிற்றான் மக்கள் குடி இருக்கின்றனர். தெருக்கள் மிகவும் குறுகலானவை. ஒரு மனிதன் கை வீசிக்கொண்டு நடந்தால் அவன் கைகள் இரண்டு பக்கங்களிலும் உள்ள கடைகளைத் தொட்டுத்தான் தீரும். தெருக்களில் பத்தடிக்கு ஒரு இறைச்சிக் கடையைக் காணலாம். நாய் இறைச்சியையும் பூனை இறைச்சியையும் விற்கும் கடைகளும் இருக்கின்றன. மிகவும் எளிய சீனரே நாய் அல்லது பூனை இறைச்சியை உண்பர்.

சீனப் பெருமாட்டிகளை வெளியிற் காணல் இயலாது. வட இந்தியாவில் இந்துப் பெண்களுக்குள்ள அந்தப்புர வாழ்க்கை இப்பெருமாட்டிகட்கும் உண்டு. தொழிலாளர் பெண்களையே வெளியிற் காண இயலும். அப் பெண்களுடைய பாதங்கள் உங்கள் மிகச்சிறிய குழந்தையின் பாதத்தைவிடச் சிறியதாகவுள்ளது வியப்பைத் தருகிறது. அப்பெண்கள் மெய்யாகவே நடக்கிறார்கள் என்று சொல்லுவதைவிட நொண்டி நடக்கிறார்கள் என்று கூறுதல் பொருத்தமானது.

நான் சீனர் கோவில்கள் பலவற்றைக் காணச்சென்றேன். அவற்றுள் மிகப் பெரியது சீனநாட்டு முதல் அரசர்க்கு அர்ப்பணம் செய்யப்பட்டது ஆகும். அங்கு புத்தர் பெருமானுடைய சிலை நடுநாயகமாக வைக்கப்பட்டுள்ளது. அதன் அடியில் முன்சொன்ன சீன முதல் அரசர் உருவச்சிலை அமைந்துள்ளது. அவற்றைச் சுற்றிலும் பௌத்த சமயத்தை முதன் முதல் தழுவிய ஐஞ்ஞூறு பௌத்த சீடர்களின் உருவச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் மரத்தால் இயன்றவை; அழகிய வேலைப்பாடு கொண்டவை.

நாங்கள் காண்டன் நகரிலிருந்து மீண்டும் ஹாங்காங் சென்றோம்; அங்கிருந்து ஜப்பானை அடைந்தோம்; நாங்கள் முதன் முதல் சென்று சேர்ந்த துறைமுக நகரம் **நாகசகி**[5] என்பது. நாங்

5 Nagasaki

கள் கப்பலைவிட்டு இறங்கி நகருக்குட் சென்றோம். என்ன நேர்மாறான காட்சி! ஜப்பானியர் மிகவும் தூய்மையாக இருக்கின்றார்கள். ஒவ்வோர் இடமும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் காணப்படுகிறது. எல்லாத் தெருக்களும் இயன்றவரை அகலமாகவும் நேராகவும் பதப்படுத்தப்பட்டனவாகவும் இருக்கின்றன. அவர்களுடைய வீடுகள் கூண்டுகளைப்போல் காண்கின்றன. ஒவ்வொரு நகரத்தின் அல்லது கிராமத்தின் பின் பச்சைக் கம்பளம் போர்த்தாற் போன்ற பசிய மரம் - செடி - கொடிகளைக் கொண்ட அழகிய குன்றுகள் நகரத்தை அல்லது கிராமத்தை அணி செய்கின்றன. ஜப்பான் அழகுக்கு இருப்பிடம் என்னலாம். ஜப்பானியர் குட்டை உருவினர்; அழகிய மேனியுடையவர்; வியப்பூட்டும் தோற்றம் கொண்டவர். அவர்களுடைய நடை, உடை, பாவனைகள் நம் கவனத்தை ஈர்ப்பன. பெரும்பாலும் ஒவ்வொரு வீட்டின் பின்புறமும் அழகிய தோட்டம் இருக்கின்றது. அதனில் செய் குளம், புல் மேடைகள், பூச்செடிகள், மருந்துச் செடிகள் முதலியன காண்கின்றன.

நாங்கள் நாகசகி என்னும் நகரத்திலிருந்து கோபே என்னும் துறைமுகத்தை அடைந்தோம். நான் ஜப்பானில் உள்ள உள்நாட்டுக் காட்சியைக் காண விழைந்து, கப்பல் பிரயாணத்தை இத்துடன் முடித்துக்கொண்டேன்; கோபேயிலிருந்து பல ஊர்களைப் பார்த்துக்கொண்டே யோக்கஹாமா சேரலாம் என்று முடிவு செய்தேன்.

நான் உள்நாட்டுப் பிரயாணத்தில் மூன்று பெரிய நகரங்களைக் கண்டேன். அவை ஓசகா,[6] கியொடோ,[7] டோக்கியோ[8] என்பன. ஓசகா என்பது பொருள்களை உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை நகரமாகும்; கியொடோ என்பது ஜப்பானின் பழைய தலைநகரம். டோக்கியோ என்பது இப்பொழுதுள்ள கோநகரம் ஆகும். இந்நகரம் கல்கத்தாவைப்போல இரு மடங்கு பெரியது; இரு மடங்கு ஜனத்தொகையும் கொண்டதாகும். இங்கு அநுமதிச் சீட்டு இன்றி எந்த வெளி நாட்டானும் உள்நாட்டுப் பிரயாணம் செய்ய விடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானியர் இன்றைய தேவைகளை நன்கு உணர்ந்தவராகக் காண்கின்றனர். அவர்களிடம் துப்பாக்கிகளைத் தாங்கி நன்கு பயிற்சி பெற்ற படைவீரர் இருக்கின்றனர். அத்துப்பாக்கிகளும் அந்நாட்டுப் படைத் தலைவர் ஒருவர் கண்டுபிடித்தனவேயாகும். அவர்கள் தொடர்ச்சியாகத் தங்கள் கப்பற் படையைப் பெருக்கிப் பலப்படுத்தி வருகின்றனர். ஜப்பான் எஞ்சினியர் ஒருவர் ஒரு மைல் நீளமுள்ள புழையை மலையிற் குடைந்திருப்பதை நான் கண்டேன்.

தீப்பெட்டி செய்யும் தொழிற் சாலைகள் பார்க்கத் தக்கவை. ஜப்பானியர் தமக்கு வேண்டும் பொருள்கள் அனைத்தையும் தம் தாய்நாட்டிலேயே செய்ய விழைகின்றனர். ஜப்பானியக் கப்பல்கள் ஓய்வின்றி ஜப்பானுக்கும் சீனவுக்கும்

6 Osaka 7 Kioto 8 Tokio

பிரயாணம் செய்கின்றன. அவை விரைவில் பம்பாய்க்கும் யோக்கஹாமாவுக்கும் பிரயாணம் செய்ய விழைகின்றன.

நான் பல கோவில்களைச் சென்று பார்வையிட்டேன். ஒவ்வொரு கோவிலிலும் பழைய வங்க மொழி எழுத்துகளில் வடமொழி மந்திரங்கள் சில எழுதப்பட்டுள்ளன. குருமாருட் சிலரே வடமொழி படித்துள்ளனர். ஆயினும் அவர்கள் மிக்க அறிவுடையவர்கள்; இக்காலத்திற்குத் தேவையானவற்றை நன்கறிந்துள்ளனர். நான் ஜப்பானியரைப்பற்றி நினைப்பனயாவும் இச் சிறிய கடிதத்தில் எழுதமுடியவில்லை. ஆண்டு தோறும் நம் இந்திய இளைஞர் சிலரேனும் ஜப்பானுக்கு வந்து போகவேண்டும் என்பது எனது அவா. உயர்வுக்கும் நல்லவற்றிற்கும் இந்தியா தாயகமானது என்பது ஜப்பானியர் எண்ணமாக இருக்கிறது.

ஆனால், நீங்களோ—இந்தியராகவுள்ள நீங்களோ—வாழ்நாள் முழுவதும் பயனற்றவற்றைப் பேசும் வீணர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஜப்பானுக்கு வாருங்கள்; இம்மக்களைப் பாருங்கள்; வீடு திரும்பி வெட்கித் தலை குனியுங்கள். நீங்கள் வெளி நாடு சென்றால் உங்கள் ஜாதி கெட்டுவிடும் என்று எண்ணும் அறிவீனர்களாக இருக்கிறீர்கள். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வளர்க்கப்பட்ட மூட நம்பிக்கைகளை மென்மேலும் வளர்த்துக்கொண்டும், தீண்டாமையைப்பற்றி நூற்றுக்கணக்கான வருடங்களாக வாதம் செய்துகொண்டும் நாட்களை வீணே

கழிக்கின்றீர்கள்; பல நூற்றுண்டுகளாக வளர்க கப்பட்டுவந்த சமூகக்கொடுமையால் மனித இனத்தைஉங்கட்குஅப்பாற்பட்டதாகச்செய்து விட்டார்கள். என்ன செய்கிறீர்கள்? இப்பொழுது என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள்? கையில் புத்தகங்களுடன் கடற்கரையில் உலாவிக் கொண்டு—மேனாட்டு ஆசிரியன்மார் அறிந்தோ, அறியாமலோ எழுதியுள்ள சில செய்திகளை மனப் பாடம் செய்துகொண்டு முப்பது ரூபாய் கூலி வரும் குமஸ்தா வேலைக்காக அல்லது சட்ட நிபுணர் பதவிக்காக நீங்கள் படும்பாடு பரிதபிக்கத் தக்கது. இதுதானு இந்திய இளைஞரது வாழ்க்கையின் உயர்ந்த நோக்கம்? இங்ஙனம் படித்த மாணவனுடைய கால்களைச் சுற்றிக்கொண்டு அவனுடைய பிள்ளைகள் பசிப்பிணியால் இடும் இரைச்சலோ கொடிது! கொடிது!! உங்களுடைய புத்தகங்களையும் பட்டவுடைகளையும் பட்டத் தாள்களையும்[9] பிறவற்றையும் மூழ்கடிக்கக் கடலில் நீர் இல்லையா? இங்கு வாருங்கள்; மனிதராக இருங்கள்; முன்னேற்றத்திற்கு எப்பொழுதும் தடையாகவுள்ள புரோகிதர்களைப் புறக்கணியுங்கள். அவர்கள் உள்ளத்தை மாற்ற முடியாது; அவர்கள் உள்ளம் ஒருபோதும் விரியாது. அவர்கள், சென்ற பல நூற்றுண்டுகளாக இருந்துவரும் மூட நம்பிக்கை—கொடுமை இவற்றினின்றும் தோன்றியவர்கள். அதனால் முதலில் புரோகிதத்தையே சமூகத்திலிருந்து களைந்து எறியுங்கள். வாருங்கள்; மனிதராகுங்கள். உங்கள் குறுகிய

9 Diplomas

வளைகளிலிருந்து வெளியே வாருங்கள்; நெடுந் தொலைவு சுற்றிப் பாருங்கள்; பிற நாடுகள் எவ் வாறு முன்னேறிச் செல்லுகின்றன என்பதைக் கவனியுங்கள். நீங்கள் உங்களைப்போல் உள்ள மனிதரை நேசிக்கின்றீர்களா? உங்கள் நாட்டை நேசிக்கின்றீர்களா? நேசிப்பதாயின் வாருங்கள். நாம் உயரிய நோக்கங்கட்காக உழைப்போம்; பின்னல் திரும்பிப் பார்க்க வேண்டா; உங்கள் உயிர்க்கு இனியரானவர் அழு தாலும் பின்நோக்கம் வேண்டா; முன் நோக்கமே வேண்டற்பாலது!

இந்தியா, கோடிக் கணக்காகவுள்ள தன் மக்களில், குறைந்தது ஆயிரம் பேருடைய தியா கத்தை விரும்புகிறது. அந்த ஆயிரம்பேரும் மனி தத் தன்மையும் தியாகவுள்ளமும் உடையவராக இருத்தல்வேண்டும். எளியவர்மேல் இரக்கம்— அவர்களது பசித்த வயிற்றுக்கு உணவு—அறி யாமை இருளில் ஆழ்ந்துள்ள மக்கட்கு அறிவு— உங்கள் முன்னேரால் விலங்கு நிலைக்குக் கொண ரப்பட்டுத் தாழ்நிலையில்உள்ள ஏழைமக்களை மனி தராகச் செய்யும் முயற்சி—இவை அனைத்தும் இன்று வேண்டற்பாலன. இவற்றைச் செய்யத் தந்நலமற்ற—நிரம்பிய அறிவுபெற்ற இளைஞர் எத்துணையரைச் சென்னை மாகாணம் வழங்கு தல்கூடும்? அமைதி, ஆரவாரம் இன்மை, நிதான மான தொண்டு இவையே வேண்டற்பாலன. பத்திரிகைகளில் பெயரை விளம்பரப்படுத்தும் ஆடம்பர வேலை வேண்டா.

உங்கள் அன்புள்ள,

விவேகானந்தன்.

II

சிகாகோ,
28-12-1893.

அன்புள்ள ஐயா,

நான் சிகாகோவிற் செய்த சொற்பொழிவுகள் இந்திய நாட்டுப் பத்திரிகைகளில் வெளியானது புதுமையே யாகும். ஏன் எனில், நான் செய்கின்ற காரியம் வெளிக்குத் தெரியலாகாது என்று மறைப்பது எனது வழக்கமாகும்......

இந்த (அமெரிக்க) நாட்டில் வறுமைப் பிணி இல்லை என்னலாம். இங்குள்ள பெண்மணிகள் படித்தவராகவும் பண்பட்ட அறிவுடையவராகவும் இருக்கின்றனர். இவர்களைப் போன்ற பெண்மணிகளை நான் எங்கும் கண்டிலேன். நமது நாட்டில் நன்றாய்ப் படித்த ஆடவர் உளர். ஆயின், நீங்கள் இங்குள்ள பெண்மணிகள் போன்றுரை எங்கும் காணல் இயலாது. பேறு பெற்ற ஆடவர் வீடுகளில் பெண் தெய்வங்கள் வாழ்ந்தார்கள் என்பது முற்றும் உண்மையே ஆகும். தூய பளிங்கு மனம் படைத்த ஆயிரக் கணக்கான பாவையரை நான் இங்குப் பார்த்திருக்கிறேன். ஆ! அவர்கள் எவ்வளவு தாராளமாகப் பழகுகிறார்கள்! அவர்களே சமூக சம்பந்தமான காரியங்களையும் வீட்டுத் தொடர்பான காரியங்களையும் கவனிக்கிறார்கள். பள்ளிகளும் கல்லூரிகளும் பெண்கள் மயமாகக் காண்கின்றன. ஆயின் நமது நாட்டிலோ, பெண்கள் தாராளமாகத் தெருக்களில் நடமாட விடப்படுதல் இல்லை. அமெரிக்கப் பெண்மணிகள் என்

பால் காட்டும் அன்பினை அளவிட்டுக் கூறுதல் இயலாது. நான் இங்கு வந்தது முதல் அவர்கள் என்னை வரவேற்று உபசரித்து வருகின்றனர்; தங்கள் வீடுகட்கு என்னை அழைத்துச் செல்கின்றனர்; நான் பேசக் கூட்டங்களைக் கூட்டுகின்றனர்; எனக்கு உண்டி அளிக்கின்றனர்; என்னை வெளியிடங்கட்கு அழைத்துச் செல்கின்றனர்; என் வசதிக்குரிய எல்லாவற்றையும் செய்கின்றனர். நான் அவர்களது அன்பிற்கும் ஆதரவிற்கும் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அவர்கட்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்!

உண்மையான 'சக்தி - வணக்கத்தான்' யாவன் என்பதை நீங்கள் அறிவீர்களா? கடவுள் உலகம் முழுவதும் பரவியுள்ள சக்தி என்பதை உணர்ந்து, அச்சக்தியின் அவதாரத்தைப் பெண்களிடம் காண்பவனே 'சக்தி - வணக்கத்தான்'. இங்குள்ள ஆடவர் பலர் இந்தக் கருத்தோடே தம் வீட்டுப் பெண்களை நோக்குகின்றனர். 'பெண்மணிகளைச் சிறந்த நிலையில் வைத்துள்ள குடும்பங்களையே கடவுள் ஆசீர்வதிக்கின்றனர்' என்று மநு கூறியுள்ளது நினைக்கத்தக்கது. இங்குள்ள ஆடவர், பெண்மணிகளை அத்தகைய சீரிய நிலையில் வைத்து நடத்தி வருகின்றனர். அதனாற்றான் அப்பெண்மணிகள் செழுமையாகவும், கற்றவராகவும் உரிமையுடையவராகவும் சுறுசுறுப்புள்ளவராகவும் வாழ்க்கையின் விளக்கமாகவும் விளங்குகின்றனர். ஆயின், நாம் ஏன் அடிமைகளாகவும் துன்பப்படுபவராகவும் ஏறத்தாழ

இறந்தவராகவும் இருக்கின்றோம்? விடை தெளிவானதே.

அம்மங்கை நல்லார் எவ்வளவு தூய்மையும் கற்புடைமையும் கொண்டு விளங்குகின்றனர்! மிகச் சிலரே இருபது அல்லது இருபத்தைந்து வயதிற்குமுன் மணம் செய்துகொண்டவராகக் காண்கின்றனர். அவர்கள், வானத்திற் பறவைகள் பெற்றுள்ள உரிமையை அநுபவிக்கின்றனர். அவர்கள் பள்ளி, கடை, கல்லூரி முதலிய இடங்கட்குச் செல்கின்றனர்; பொருள் ஈட்டுகின்றனர். பணக்காரப் பெண்மணிகள் ஏழைகட்கு உதவி செய்வதில் முனைந்துள்ளனர். நாம் என்ன செய்துகொண்டு இருக்கின்றோம்? நாம் நம் பெண்களைப் பதினொரு வயதில் மணம் முடிப்பதில் தவறுவதே இல்லை. ஏன்? அவ்வயதில் மணம் முடிக்கவில்லையாயின் அவர்கள் கெட்டு விடுவார் என்பது நமது நம்பிக்கை. மநு கூறியுள்ளது யாது? "பெற்றோர் கவனிப்பும் கவலையும் கொண்டு தம் ஆண் மக்களைக் காத்துப் படிக்க வைத்தல்போலவே பெண்மக்களையும் செய்யக் கடவர்" என்றன்றோ கூறியுள்ளார். பிரமசரிய நிலையைப் பின்பற்றிய பிறகே மகன் தனது முப்பது வயதிற்குப்பின் மணம் செய்துகொள்வதுபோல—மகளிரும் பிரமசரிய விரதத்தைப் பின்பற்றிச் செவ்வையாகப் படித்தல் வேண்டும். இம் முறையில் பெற்றோர் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. நீங்கள் உங்கள் பெண்களுடைய நிலையை நல்லதாக உயர்த்த இயலாதா? அங்ஙனம் செய்தாற்றான் உங்கள் வாழ்வு சிறக்

கும்; இன்றேல் இன்றுள்ள இழிவு நிலையிற்றான் நீங்கள் இருந்து ஒழிவீர்கள்.

ஒருவன் கீழ் வகுப்பில் பிறந்தானாயின் அவனது வாழ்க்கையே பாழடைந்துவிடுகிறது. அவனுக்கு வாழ்க்கை முன்னேற்றம் இல்லை. ஏன் இத்தகைய கொடுமை செய்யப்படவேண்டும்? இந்த அமெரிக்க நாட்டில் ஒவ்வொருவருக்கும் முன்னேறச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன; அவர்கட்கு நம்பிக்கையும் இருக்கின்றது. இன்று ஏழையாகவுள்ள ஒருவன் நாளை செல்வனாகலாம்; படித்துப் பலரிடத்தும் மதிப்புப் பெறலாம். இங்கு ஒவ்வொருவரும் எளியவர்க்கு உதவி செய்ய முன்வருகின்றனர். இந்தியாவில், 'நாம் எளியவர்' என்ற கூக்குரலே பெரிதாக இருக்கிறது. ஆயின், எளியவர் நலனுக்காக வேலை செய்யும் அற நிலையங்கள் இந்தியாவில் எத்தனை உள்ளன? எப்பொழுதும் துன்பத்தையே நுகரும் கோடிக்கணக்கான ஏழை மக்கட்காகக் கண்ணீர் வடிப்பவர் எத்துணையர் உளர்? நாம் மனிதத் தன்மை உடையவர்தாமா? நாம் அவ்வேழை மக்கள் முன்னேற்றத்திற்கும் உயிர் வாழ்வதற்கும் என்ன உதவி செய்திருக்கிறோம்? நாம் அவர்களைத் தொடுவதில்லை; அவர்கள் கூட்டுறவை விலக்கிவிட்டோம். நாம் உண்மையாகவே மனிதர்தாமா? நமது தூய சமயம் எவ்வளவு இழி நிலைக்கு வந்துவிட்டது! நமது சமயம் இப்பொழுது எங்கே வந்துள்ளது? 'தொடாதே' என்ற சுலோகத்திற்குத் தான் இறங்கியுள்ளது!

அமெரிக்காவைக் காணவேண்டும் என்பதற்காகவோ, பெயருக்காகவோ, புகழுக்காகவோ நான் இந்நாட்டிற்கு வரவில்லை; இந்தியாவில் ஏழைகட்கு உதவி செய்ய இங்கு ஏதேனும் வழி கிடைத்தல் கூடுமோ என்பதை அறியவே இங்கு வந்தேன். திருவருள் துணை செய்யுமாயின், நாள் செல்லச் செல்ல அவ்வழி உங்கட்குத் தெரியக் கூடும்.

ஆன்ம வுணர்ச்சியில் அமெரிக்கர் இந்தியரினும் தாழ்ந்தவரே ஆவர்; ஆயின், சமூக வாழ்வில் நம்மினும் மிக வுயர்ந்தவராவர். நாம் அவர்கட்கு நமது ஆன்ம வுணர்வை அறிவுறுத்துவோம்; அதற்குப் பதிலாக அவர்கள் சமூகத்தில் காணப்படும் நலன்களைக் கொள்வோம்.

அன்பும் ஆசியும் தங்குக!

உங்கள் அன்புள்ள,

விவேகானந்தன்.

7. இராஜராஜ சோழன்

(கி. பி. 985—1014)

சங்க காலச் சோழர்

தமிழ்ச் சங்க காலத்தின் தோற்றத்தை வரையறுத்துக் கூறல் இயலாது; ஆனால், அதன் இறுதிக்காலம் ஏறத்தாழக் கி. பி. 400 என்னலாம். கி. பி. 400-க்குள் சங்க நூல்கள் தொகுக்கப் பெற்ற காலமும் அடங்கும். அச் சங்க நூல்களிலிருந்துதான் 'சங்க காலச் சோழர் வரலாற்றை' அறிய முடியும். சங்க காலத்திற் சோழ நாடு தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களைத் தன் அகத்தே பெற்றிருந்தது. அந்நாடு தன்னை ஆண்ட அரசரைப் பொறுத்து விரிந்தும் சுருங்கியும் இருந்ததுண்டு. கரிகாற் சோழன் காலத்தில் (ஏறத்தாழக் கி. பி. முதல் நூற்றாண்டில்) சோழ நாடு வடக்கே விரிந்திருந்தது; தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னை, சித்தூர், நெல்லூர் ஜில்லாக்களைத் தன் அகத்தே பெற்றிருந்தது. இப்புதிய பகுதி ஏறத்தாழ நடு நாடு, தொண்டை நாடு எனப்பட்டது. தொண்டை நாட்டை முதன் முதல் அடிப்படுத்தி, காடு கெடுத்து நாடாக்கி ஆண்ட பேரரசன் கரிகாலனே என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. கோவலன் மகளான மணிமேகலை காலத்தும் தொண்டை நாடு சோழர் ஆட்சியில் இருந்தது. சங்க காலச் சோழ நாட்டிற்கு உறையூர், காவிரிப்பூம்பட்டினம் தலைநகரங்களாக

இருந்தன. பின்னது புகழ்பெற்ற துறைமுகப் பட்டினமாகவும் திகழ்ந்தது.

இடைக்காலச் சோழர்

கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை தொண்டை நாடு பல்லவர் கைப்பட்டு இருந்தது. சோழ நாடு களப்பிரர் கைப்பட்டது; பின்னர் ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து (கி. பி. 575) ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை (கி. பி. 875)—ஏறத்தாழ முந்நூறு வருடகாலம்—பல்லவப் பேரரசர் ஆட்சியில் இருந்தது. சோழர் திருவாரூர், உறையூர், பழையாறை என்ற மூன்று ஊர்களையும் தன்னகத்தே பெற்ற சிறிய நிலப்பகுதியை ஆண்டுவந்தனர். அவர்கள் வடக்கே பேரரசராக இருந்த பல்லவ மன்னர்க்கு ஒரு சமயம் அடங்கியும், மற்றொரு சமயம் தெற்கே பேரரசராக இருந்த பாண்டிய மன்னருக்கு நண்பராக இருந்தும் காலம் கழித்து வந்தனர். இங்ஙனம் தம் நாடிழந்து, முடியிழந்து, செல்வாக்கிழந்து ஏறத்தாழ 500 வருடகாலம் சோழமன்னர் துன்புற்றனர். அவருள் ஒருவனே-பெரிய புராணத்துள் கூறப்படும் மங்கையர்க்கரசியாரின் தந்தை; மற்றொருவன், கி. பி. 875-ல் சோழப் பெருநாட்டை உயிர்ப்பித்த ஆதித்த சோழன் தந்தையான விஜயாலயன்.

இவ்விடைக்காலச் சோழர் வளங்குன்றி இருந்தனர். ஆயினும், தம் சைவ சமய வளர்ச்சியைத் தளர விட்டிலர்; அப்பர்-சம்பந்தர்-சுந்தரர் காலங்களில் அவர்கட்கு வேண்டிய வசதிகள்

அளித்தனர்; தம் நாட்டுக் கோவில்களைத் தூய்மையாக வைத்திருந்தனர்; சமயத் திருப்பணிகளை நன்றாகச் செய்து வந்தனர்.

விஜயாலயன் மரபினர்

பல்லவப் பேரரசை ஒழித்துச் சோழப் பேரரசினை அமைத்த ஆதித்த சோழன் பெரிய வீரன்; சிறந்த சிவபக்தன். அவன் காவிரியின் இரண்டு கரைகளிலும் (காவிரி தோன்றும் இடமுதல் கடலில் கலக்கும் இடம்வரை) உள்ள சிவன் கோவில்களைப் பழுதுபார்த்தான் என்று 'அன்பில்' பட்டயம் அறைகின்றது. ஆதித்தன் மகனை முதற் பராந்தகன் (கி. பி. 907—953) பாண்டிய நாட்டை வென்று சோழப் பெருநாட்டைக் கன்னியாகுமரிவரை விரிவாக்கினன்; ஈழ நாட்டையும் கைப்பற்றினன். இவன் சிவபக்தியிற் சிறந்தவன்; தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்து புகழ் பெற்றான் என்று திருவாலங்காட்டுப் பட்டயம் பகர்கின்றது. இவனுக்குப் பின் வந்த சோழ அரசருட் சிறந்த முதல்வன் நமது இராஜராஜனே ஆவன்.

இளமைப் பருவம்

இராஜராஜன் பாட்டனாருள் சிறந்த சிவபக்தரான கண்டராதித்தர் என்பவர் ஒருவர். அவரது ஆருயிர் மனைவியார் செம்பியன் மாதேவியார் என்பவர். இவ்வம்மையார் அளவு கடந்த சைவப் பற்று உடையவர். இவர் முப்பதுக்கு மேற்பட்ட (பாடல் பெற்ற) சிவன் கோவில்களைப் புதுப்பித்தனர்; நிபந்தங்கள் விட்டனர். இம்

மூதாட்டியாரிடம் வளர்ந்தவனே இராஜராஜன். இவன் இளமையில் நன்முகக் கல்வி கற்முன்; சிவநெறிச் செல்வனுக விளங்கினுன்; தன் தந்தையான சுந்தர சோழன் இறந்ததும் தான் அரசுகட்டில் ஏருமல், அதனை விரும்பிய தன் சிற்றப்பனுன மதுராந்தகனுக்கு அளித்து, அவன் இறக்கும்வரை பொறுமையோடிருந்த உத்தமன்; தந்தையிடத்தும் சிறிய தந்தையிடத்தும் இளவரசனுக இருந்து, அரசியலைப் பற்றிய நுட்பங்களை நன்கறிந்தவன்.

போர்ச் செயல்கள்

1. இராஜராஜன் சோழப் பேரரசுக்கு எதிராகக் கலகம் விளைத்த பாண்டியன் அமரபுஜங்கனையும் அவனுக்கு உதவியாக வந்த சேரமானையும் போரில் வென்று, பாண்டிய நாட்டைச் சோழப் பெருநாட்டிலிருந்து பிரியவிடாமற் செய்தான்.

2. வேங்கை நாடு என்பது கோதாவரி, கிருஷ்ணை யாறுகட்கு இடையில் உள்ள நிலப் பகுதி. அதனைக் கீழைச் சாளுக்கிய மரபினர் நெடுங்காலமாக ஆண்டுவந்தனர். இராஜராஜன் காலத்தில் அந்நாடு குழப்பத்திற்கு இடமாக இருந்தது. அரச மரபினர் இருவர் தமக்குள் போரிட்டுக்கொண்டிருந்தனர். அரசனுக இருந்த சக்திவர்மன் என்பவன் அரச பதவியினின்றும் விரட்டப்பட்டான். அவன் இராஜராஜனிடம் சரண்புகுந்து, அவனுடைய தென்னுட்டுப் போர்களில் தொண்டாற்றினுன். இராஜராஜன் வேங்கி நாட்டின்மீது படை யெடுத்து அங்கிருந்த


இராஜ ராஜன் காலத்துச்
சோழப் பெரு நாடு
(கி. பி. 985–1014)
75
80
20
15
10
வ.
கோதாவரி
கிருஷ்ணை
வேங்கி
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
துங்கபத்திரை
நுளம்பபாடி
இரட்டபாடி
வ. பெண்ணை
தடிகைபாடி
காளத்தி
தொண்டைமாநாடு
காஞ்சி
தலைக்காடு
பாலாறு
தெ. பெண்ணை
கங்கபாடி
கும்பகோணம்
காவிரி
லக்ஷத் தீவுகள்
வஞ்சி
உறையூர்
தஞ்சாவூர்
நாகப்பட்டினம்
மதுரை
பாண்டி நாடு
குமரிமுனை
அநுராதபுரம்
இலங்கை
மாலத் தீவுகள்
இந்து மகா சமுத்திரம்

அரசனை முறியடித்துச் சக்திவர்மனைப் பழைய படி அரியணை ஏற்றினான்; அவன் தம்பியான விமலாதித்தனுக்குத் தன் மகளான குந்தவை என்பாளை மணம் செய்வித்தான். சக்திவர்மனுக்குப்பின் விமலாதித்தின் வேங்கை நாட்டு அரசன் ஆனான். இந்தப் புதிய உறவினால், சோழப் பேரரசின் செல்வாக்கு வடக்கே கோதாவரி யாறுவரை பரவலாயிற்று.

3. இராஜராஜன் தன் ஒப்பற்ற மைந்தனை இராஜேந்திரனைச் சேனைத் தலைவனாக்கி, அவன் வசம் பெரும்படை ஒன்றை ஒப்புவித்தான். அப் பெருவீரன் அப் படையுடன் வேங்கை நாட்டிற்கு வடக்கே இருந்த கலிங்க நாட்டை வென்று, மகேந்திர மலைமீது தன் வெற்றித்தூண் ஒன்றை நாட்டினான்.

4. வேங்கை நாட்டை வென்ற பின்னர் இராஜராஜன் கங்கபாடியைத் தாக்கினான். கங்கபாடி என்பது மைசூர் நாட்டின் கீழ்ப் பகுதியும் அதனைச் சூழவுள்ள நிலப்பகுதியும் ஆகும். அதன் தலைநகரம் தழைக்காடு. இராஜராஜன் கங்கபாடியைத் தனதாக்கி, தழைக்காட்டிற்கு இராஜராஜபுரம் என்று பெயரிட்டான்.

5. பின்னர் அப்பேரரசன், நுளம்ப-பல்லவர் ஆண்டுவந்த மைசூரை அடுத்த நுளம்பபாடி நாட்டையும் அதனை அடுத்திருந்த தடிகைபாடி நாட்டையும் தனதாக்கி மீண்டான். நுளம்பபாடி என்பது தும்கூர், சித்தல் துர்க்கம், பெங்களூர், கோலார் ஜில்லாக்களைத் தன்னகத்தே பெற்ற நாடு.

6. கொங்கு நாடு என்பது சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஜில்லாக்களைக்கொண்ட நிலப்பகுதி. அதனைக் 'கொங்காள்வார்' என்ற மரபினர் ஆண்டுவந்தனர். அந்நாடும் இராஜராஜன் வயப்பட்டது.

7. குடகு நாட்டை மீனிசா என்பவன் ஆண்டுவந்தான். அவன் இராஜராஜனுடன் 'பனசோகே' என்ற இடத்திற் பெரும் போர் புரிந்து தோற்றான். எனினும், சிறந்த வீரனான இராஜராஜன் அவனை மதித்து அவனது வீரத்தைப் பாராட்டி, அவனுக்கு 'க்ஷத்திரிய சிகாமணி கொங்காள்வான்' என்ற பட்டம் சூட்டி ஓர் ஊரை நன்கொடையாக அளித்தான்.

8. குடகு நாட்டு வெற்றிக்குப் பிறகு இராஜராஜன் கொல்லம், கொடுங்கோளூர் முதலிய சேர நாட்டு உட்பகுதிகளைத் தாக்கி, ஆங்காங்கிருந்த அரசர்களை வென்று சேர நாட்டையும் தன் ஆட்சிக்கு உட்பட்டதாகச் செய்தான்.

9. பராந்தகன் கால முதல் ஈழ மண்டலம் சோழர் ஆட்சியில் இருந்து வந்ததன்றோ? அங்கிருந்த மஹிந்தன் என்ற சிங்கள அரசன், இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் கலகம் விளைத்தான். இராஜராஜன் ஒரு பெரும்படையுடன் இராஜேந்திரனை அங்கு அனுப்பினான். கடுமையான போர் நடந்தது. இறுதியில் சிங்கள அரசன் இலங்கையின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள மலை நாட்டில் மறைந்தான். வட இலங்கையும் யாழ்ப்பாணமும் சோழர் கைப்பட்டன. வட இலங்கை 'மும்முடி சோழ மண்டலம்

எனப் பெயர் இடப்பெற்றது; அநுராதபுரம் அழிக்கப்பட்டது; பொலந்நருவா என்பது தலைநகரம் ஆக்கப்பட்டது. அந்நகரில் அழகு மிக்க சிவன் கோவில் ஒன்றை இராஜராஜன் எடுப்பித்தான். அக்கோவில் தமிழர் கட்டடத் திறனை இலங்கையர்க்கு அறிவித்துக்கொண்டு இருக்கின்றது.

10. வாதாபியைத் தலைநகராகக் கொண்டு பல்லவரிடம் ஓயாது போரிட்டவர் மேலைச் சாளுக்கியர். அவர் ஆட்சி ஒழிந்து இடையில் இராஷ்டிரகூடர் தோன்றினர். அம்மரபினர் ஆட்சி ஏறத்தாழக் கி. பி. 973-ல் ஒழிந்து, பழையபடி மேலைச் சாளுக்கியர் மரபினர் சுயேச்சை பெற்றனர். அவருள் இராஜராஜன் காலத்தவன் **சத்தியாஸ்ரயன்** என்பவன். இவன் சோழப் பெருநாடு விரிதலைக் கண்டு பொறுது படை திரட்டினான். அதனை அறிந்த இராஜராஜன் தன் மைந்தனை ஏவினான். இராஜேந்திரன் 9 லக்ஷம் வீரருடன் பீஜப்பூர் ஜில்லாவரை படையெடுத்துச் சென்று, நாட்டைக் கைப்பற்றினான்; அந்நாட்டிற்கு அழிவை உண்டாக்கினான். வெற்றி இருதிறத்தார்க்கும் இல்லை. சத்தியாஸ்ரயன் சோழனை விரட்டி இரட்டபாடியை ஆண்டுவந்தான். இரட்டபாடி என்பது பம்பாய் மாகாணம், ஹைதராபாத் சமஸ்தானங்களைத் தன் அகத்தே கொண்டது. அதன் தலைநகரம் **கல்யாணபுரம்** என்பது.

11. இராஜராஜன் பெரிய கடற்படை வைத்திருந்தான். அதனாற்றான் அவன் முதலில்

சேரனது கப்பற் படைப் பலத்தை ஒடுக்கக் காந்தளூர்ச் சாலையில் கலம் (மரக்கலம்) அறுத் தான்; கடற்படை கொண்டே இலங்கையை வென்றான்; அவ்வாறே இப்பொழுது 'மால்டிவ் தீவுகள்' எனப்படுவனவற்றைத் தன் கடற்படை கொண்டு கைப்பற்றினான். 'முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் கொண்டவன்' என்று இவனைக் கல்வெட்டுக் குறிக்கிறது. அத்தீவுகளை ஆண்ட அரசன் தன்னைப் 'பன்னீராயிரம் தீவுகட்கு அர சன்' என்று கூறுதல் மரபு. அம்மரபு பற்றியே இராஜராஜனும் அவற்றை ஆண்ட தன் காலத்து அரசனை வென்றவுடன் 'முந்நீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரம்' என்றனன் போலும்!

ஜயங்கொண்ட சோழன்

இராஜராஜன் இங்ஙனம் பல நாடுகளையும் வென்று, சோழப் பெருநாட்டை விரிவாக்கி அழி யாப் புகழ் பெற்றதால் தன்னை 'ஜயங்கொண்ட சோழன்' என்று அழைத்துக்கொண்டான்; தொண்டை மண்டலத்தை 'ஜயங்கொண்ட சோழ மண்டலம்' என்று அழைத்தான்; திருச்சி ஜில்லாவில் ஓர் ஊர்க்கு 'ஜயங்கொண்ட சோழ புரம்' என்று பெயரிட்டான். அவ்வூர் இன்னும் அப்பெயருடன் இருந்து, அவனது நினைவை நமக்கு ஊட்டிவருகின்றது.

அரசியல்

சோழப் பெருநாடு பல மண்டலங்களாகவும் மண்டலங்கள் வளநாடு, கோட்டம், கூற்றங்களா கவும் வளநாடுகள் நாடுகளாகவும் நாடுகள்

பேரூர், சிற்றூர்களாகவும் பகுக்கப்பட்டிருந்தன. மண்டலங்களை ஆள அரசப் பிரதிநிதிகள் இருந்தனர். சோழப் பெருநாடு முழுவதும் அளக்கப்பட்டது. அதனை அளந்தவருள் ஒருவன் 'உலகளந்தான்' என்றும், அளக்கப் பயன்பட்ட கோல் 'உலகளந்த கோல்' என்றும் பெயர் பெற்றமை கல்வெட்டுகளால் அறியலாம். இங்ஙனம் நிலம் அளக்கப்பட்டதால் நிலவரி விதிக்க வசதி ஏற்பட்டது. சோழப் பெருநாடு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டதால், மண்டலத் தலைவர் ஆட்சியில் மண்டலங்கள் இருந்தன. ஆயினும் பெருநாடு முழுவதையும் மேற்பார்க்க நடு அரசாங்கம் ஒன்று இருந்தது. அஃதொன்றே அரசனுக்குப் பொறுப்புள்ளதாக இருந்தது. நடு அரசாங்க அதிகாரிகள், இக்காலத்தில் உள்ள அரசியல் பிரிவுகளின் செயலாளர் (Secretaries to various Departments of the Government) போன்றூர் ஆவர். கிராம சபைகள், நாட்டுச் சபைகள் இவற்றின் ஆட்சி முறையை நடு அரசாங்கம் மேற்பார்வையிட்டு வந்தது. கோவில் வரவு செலவுகளைக் கவனிக்கவும் நடு அரசாங்க அதிகாரி இருந்தான். கைப்பற்றப்பட்ட புதிய நாடுகளில் சோழர் நிலைப் படைகள் நிலையாக இருந்து அமைதியைப் பாதுகாத்து வந்தன. இத்தகைய அரசியல் ஒழுங்கை நோக்க, இராஜராஜன் தென்னிந்தியப் பேரரசர் சிலருள் ஒருவனாக மதிக்கத் தக்கவன் என்னலாம்.

சமயத்தில் விரிந்த நோக்கம்

இராஜராஜன் அழுத்தமான சிவ பக்தன்; எனினும், தன் பெருநாட்டில் இருந்த வைணவ-பௌத்த-சமண சமயங்கள்மீதும் மதிப்புடையவன்; அவற்றை வளர்க்கத் தன்னால் இயன்ற உதவிகள் செய்துள்ளான்; வைணவ ஆலயங்களை மைசூரில் எடுப்பித்தான்; பல கோவில்கட்கு நிபந்தங்கள் விடுத்தான். நாகப்பட்டினத்தில் புதிதாக எடுப்பிக்கப்பட்ட சூடாமணி விஹாரம் என்ற பௌத்தர் கோவிலுக்கு இவன், 'ஆனைமங்கலம்' என்ற சிற்றூரை விட்டதைக் குறிப்பதே 'லெய்டன்' பட்டயச் செய்தி யாகும். சமணப் பள்ளிகள் பல இவன் நாட்டில் இருந்தன; அவை இவனது நடுவுநிலை கொண்ட ஆட்சியில் நன்னிலையில் இருந்தன; அவற்றுள் சிலவற்றிற்கு இவன் தமக்கையாரான குந்தவையார் பொருள் உதவி செய்தார் என்ற செய்திகளைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

விருதுகள்

இராஜராஜன் விருதுப் பெயர்கள் மிகப் பல. அவற்றுள் மும்முடி சோழன், ஜயங்கொண்ட சோழன், அருள்மொழித் தேவன், சோழேந்திர சிம்மன், க்ஷத்திரிய சிகாமணி, ஜனநாதன், நிகரிலி சோழன், சோழ மார்த்தாண்டன், இராஜாஸ்ரயன், இராஜமார்த்தாண்டன், பாண்டிய குலாசனி, கேரளாந்தகன், சிங்களாந்தகன், சிவபாத சேகரன் என்பன குறிப்பிடத் தக்கன.

குடும்பம்

இராஜராஜனுக்கு மனைவியர் பலர் இருந்தனர் என்பது கல்வெட்டுகளால் தெரிகிறது. அவருள் உலக மகா தேவியார் என்ற தந்தி சக்தி விடங்கியார் பட்டத்தரசியார் ஆவர். திருவிசலூர்க் கோவிலில் இராஜராஜன் துலாபாரம் புக்கான்; தந்தி சக்தி விடங்கியார் ஹிரண்ய கர்ப்பம் புகுந்தனர். பெருவீரனை இராஜேந்திர சோழனைப் பெற்றவர் வானவன் மாதேவியார் என்பவர். இராஜராஜனுக்குக் குந்தவை, மாதேவடிகள் என்ற பெண்கள் இருவர் இருந்தனர். தமக்கையாராகிய குந்தவையார் இராஜராஜனுடனே இருந்தனர்போலும்! பாட்டியாரான செம்பியன் மாதேவியாரும் நீண்ட காலம் வாழ்ந்திருந்தனர். இவ்விரு பெருமாட்டிகளிடமும் இராஜராஜன் பெருமதிப்புக் கொண்டிருந்தான் என்பது கல்வெட்டுகளாற் புலனாகிறது.

திருமுறை கண்டது

திருப்பதிகங்களைப் பாடியருளிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் வாழ்ந்த காலம் பல்லவர் காலம் (கி.பி.600-900) ஆகும். அதற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின் வந்தவன் இராஜராஜன். அவன் காலத்தில் திருமுறை ஓதுவார் சிலர் இருந்தனர். அவர்கள் தமிழ்ப் பண்களில் இன்பம் பயக்கப் பாடிய திருப்பதிகங்களைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்த மன்னவன், அவை அனைத்தையும் தொகுத்து முறைப்படுத்த விரும்பினான்; அவை சிதம்பரம் கோவிலில் இருந்தன என்

பதைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி வாயிலாக அறிந்தான்; அவரை அழைத்துக் கொண்டு கூத்தப்பெருமான் கோவிலை அடைந்தான்; தனது கருத்தைத் தில்லைவாழ் அந்தணரிடம் அறிவித்தான். அவர்கள், "திருப்பதிகங்களை வைத்தவர் வரின், அவை இருக்கும் அறைக் கதவு திறக்கப்படும்" என்று சாதுர்யமாகத் தெரிவித்தனர். அவர்கள் குறிப்பை உணர்ந்த வேந்தர் வேந்தன், உடனே மூவர் திருமேனிகளையும் அலங்கரித்துப் பூசை செய்து உலா வரச்செய்து, அறைக் கதவின் எதிரில் கொணர்ந்து நிறுத்தச் செய்தான். கதவு திறக்கப்பட்டது. இராஜராஜன் கண்ணெதிரே தேவார ஏடுகள் காட்சி அளித்தன.

நம்பியாண்டார் நம்பி அவற்றை எடுத்துப் பார்த்தார்; காலம் கடந்து விட்டதால் சில ஏடுகள் பழுதுற்றுப் பயனற்றுப் போயின; போனவை போக எஞ்சியவற்றை ஆய்ந்தார்; அப்பர் திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாக வகுத்தார்; சம்பந்தர் பாடிய திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகப் பிரித்தார்; சுந்தரர் பாடியவற்றை ஒரே திருமுறையாக வகுத்தார். இங்ஙனம் ஏழு திருமுறைகள் வகுக்கப்பட்டன.

தஞ்சைப் பெரிய கோவில்

இராஜராஜன் தென் இந்தியாவிற் பேரரசனாக இருந்தான் என்பதையும் தமிழரது உயரிய கட்டடக்கலை அறிவிற்குத் தான் ஓர் எடுத்துக் காட்டு என்பதையும் பார்ப்பவர்க்கு அறிவிப்பது

போல அவன் எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோவில் இன்றும் இன்பக் காட்சி அளிக்கின்றது. மிகப் பெரிய அளவில் தமிழகத்தில் அமைந்த முதற் கோவில் அஃது என்னலாம். 750 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்ட இடம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பிரிவில் சிறிய கோபுரம் உண்டு. முதற் பிரிவில் உள்ள முற்றத்தைப்போல இருமடங்கு பரப்புள்ள முற்றம் இரண்டாம் பிரிவில் இருக்கின்றது. மூலஸ்தான கட்டடத்தின்மேல் நூறு அடிச் சதுரமுள்ள அடிப்படைமீது ஏறத்தாழ இருநூறு அடி உயரமுள்ள விமானம் கட்டப்பட்டுள்ளது. விமானத்தில் காணப்படும் உள்ளறைகளில் பல திறப்பட்ட வேலைப்பாடு கொண்ட தெய்வ வுருவங்களைக் காணலாம். விமானத்தின் பக்கச் சுவர்களில் உள்ள சிற்ப வேலைப்பாடு கொண்ட உருவச்சிலைகள் பார்க்கத் தக்கவை. ஒற்றைக்கல் நந்தி அழகிய வேலைப்பாடு கொண்டது. எந்த மூலையில் இருந்து பார்ப்பினும் தஞ்சைப் பெரிய கோவில் விமானம் அழகிய காட்சி அளிப்பதைக் கண்டு மகிழலாம். அகன்ற காற்றோட்டமுள்ள திருச்சுற்று, திருச்சுற்று மாளிகை முதலியன வசதியாக அமைந்துள்ளன. கருங்கல் ஒரு துண்டும் அகப்படாத சோழ நாட்டில் இக் கோவிலைக் கட்டக் கருங்கற்கள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன! அவற்றைக் கொண்டுவர என்ன அரும்பாடு பட்டிருத்தல் வேண்டும்!

இவ்வியத்தகு கோவிலைக் கட்டி முடிக்கப் பல ஆண்டுகள் ஆயின. இராஜராஜன் தன் பெரு

நாடு முழுவதிலும் இருந்த பல கிராமங்களின் வருவாயை இக்கோவில் பூசை, விழாக்களுக்காக எழுதிவைத்தான்; தான் பல நாடுகளிலிருந்து வென்று கொணர்ந்த பொன்னைக்கொண்டும் மணிகளைக்கொண்டும் மூர்த்தங்கட்கு ஏராள மான அணிகலன்களைச் செய்வித்தான்; அப்பர், சம்பந்தர், சுந்தரர்க்குச் செப்புத் திருமேனிகளை எழுந்தருளச் செய்தான்; கோவிலில் அன்றுடம் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய 48 பேரை நியமித்தான்; இசை, நடனம், நாடகம் என்ற நாகரிகக் கலைகளைக் கோவிலில் வளர்க்கப் பல கோவில்களிலிருந்து 400 பெண்மணிகளை வர வழைத்தான்; ஒருத்திக்கு ஒரு வீடும் ஒரு வேலி நிலமுமாக அந் நானூற்றுவர்க்கும் வீடுகளும் நிலங்களும் அளித்தான்; இங்ஙனமே பிற தமிழ் நாட்டுக் கோவில்களில் வேலைசெய்து அநுபவம் பெற்ற ஒவ்வொரு துறை வேலையாளையும் இக் கோவிலிற்கு வரவழைத்துக்கொண்டான். இங் ஙனம் தக்க முறையில் அமைவுண்ட இப்பெருங் கோவிலைப்பற்றி இராஜராஜன் காலத்தவரான கருவூர்த்தேவர் என்ற சிவனடியார் பாடியுள்ளார். பெரிய கோவில் இராஜ ராஜேஸ்வரம் எனப் பெயர் பெற்றது.

பெரிய கோவில் ஓவியங்கள்

பெரிய கோவில் கருவறையின் புறச்சுவர் கள்மீது நாயக்க மன்னர் காலத்து ஓவியங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கு அடிப் புறத் தில் சோழர் கால ஓவியங்கள் காண்கின்றன. மேலுள்ள சுண்ணும்புப் படை உதிர்ந்துள்ள

சுந்தரர் கயிலை செல்லுதல்



சேரமான் பெருமாள் கயிலை செல்லுதல்

இடங்களில் உட்புறமுள்ள சோழர்கால ஓவியங்கள் காட்சி அளிக்கின்றன. ஒரு புறச்சுவர்மீது இருந்த மேற்படை நீங்கிவிட்டது. அதனால், அதன் அடியில் மறைப்புண்டு கிடந்த சில பழைய ஓவியங்கள் தென்பட்டன*. அவற்றுள்– (1) சிவபெருமான் முதிய மறையவராக வந்து சுந்தரர் மணத்தைத் தடுத்து அவரை 'அடிமை ஓலை' காட்டி ஆட்கொண்டதை விளக்கும் ஓவியம், (2) சுந்தரர் வெள்ளானைமீதும் சேரமான் பெருமாள் குதிரைமீதும் கயிலை நோக்கிப் பிரயாணமாதலைக் காட்டும் ஓவியம் என்பன குறிக்கத் தக்கன. இவை இராஜராஜன் காலத்து அழகிய ஓவியங்கள் ஆகும். இவற்றாலும் பிற ஓவியங்களாலும் அக்கால ஆடவர் ஆடை, அணிகள், பெண்மணிகளின் ஆடை, அணிகள், உருவ அமைப்பு, கூந்தல் ஒப்பனை, இசைக் கருவிகள், நடன வகைகள், நடனப் பெண்களின் ஒப்பனை முறை முதலியவற்றை நன்கறியலாம்.

மெய்க்கீர்த்தி கண்ட முதல்வன்

பல்லவர் பட்டயங்களிலும் சோழர் பட்டயங்களிலும் முன்னோர் வரலாற்றுச் சுருக்கம் ஓரளவு தரப்படும்; அவ் வரலாற்றுக்குப் பின், பட்டயம் தருபவன் பெயரும் அது தரப்பட்ட நோக்கமும் பிறவும் தெளிவாகக் குறிக்கப்படும். இப்பட்டயங்களைக் கொண்டு அவற்றை விடுத்த அரசர் வரலாற்றுக் குறிப்புகளை முறையாக அறி

*இவற்றை முதன் முதல் கண்டறிந்தவர் அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்று ஆசிரியரான திரு. S. K. கோவிந்தசாமிப் பிள்ளை, M.A. ஆவர்.

தல் இயலாது. இராஜராஜன் இத்துறையில் ஒரு புது முறையைக் கையாண்டான். அவனது கல்வெட்டின் முதற் பகுதியில் அவனுடைய ஆட்சியில் (அக்கல்வெட்டுக் காலம்வரை) நடந்த சிறப்புடைச் செயல்களைக்குறித்த பிறகே, கல்வெட்டு எழுந்த நோக்கமும் பிறவும் வெட்டுவித்தலை வழக்கமாகக் கொண்டான். இக்கல்வெட்டுகளைப் படிக்கும்பொழுது, சிறப்புடைச் செயல்கள் மிகுதியாகக் குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் காலத்தால் பிற்பட்டவை என்பதும், எக் கல்வெட்டுக்குப் பின் எது தோன்றியது என்பதும் அரசன் செயல்களில் ஒரு முறைவைப்பும் திட்டமாக உணரக்கூடும். இத்தகைய புதிய முறையைக் கல்வெட்டுகளிற் கையாண்ட இராஜராஜன் நுட்ப அரசியல் அறிவு வியக்கத்தக்கதே. இத்துறையில் இப் பெருமகனைப் பின்பற்றி இவன் பின் வந்த அரசர் அனைவரும் சென்றனர் என்பது அவரவர் கல்வெட்டுக்களிலிருந்தும் செப்புப் பட்டயங்களிலிருந்தும் தெரிகிறது.

தென்னாட்டுப் பேரரசன்

இராஜராஜன் சோழப் பேரரசருள் முன் வைத்து எண்ணத்தக்கவன். இவன் கால முதலே சோழப் பெருநாடு பெருமை பெற்றது. இவனது பெருவீரம், இவன் பெற்ற வெற்றிகள், இவனது படைவன்மை, இவனது அரசியல் அறிவு ஆகிய அனைத்துமே இவனது ஒப்பற்ற மகனான இராஜேந்திரனுடைய பெருஞ் செயல்கட்கு அடிப்படை ஆயின; இவனது முப்பது ஆண்டு ஆட்சி, சோழர் வரலாறாகிய கட்டடத்

திற்கு அழுத்தமான அடிப்படை ஆனது. அரசியல் முறை, கட்டடக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை, சமயக்கலை, இலக்கியம் முதலியன இப்பெருமகன் காலத்தில் பேரளவு வளர்ச்சியுற்றன. பட்டம் பெற்றபோது சிறிதாக இருந்த சோழ நாட்டைத் தன் மனவலியாலும் படைவலியாலும் மிகப் பெரியதாக்கிப் பெரும் புகழுடன் ஆண்ட பெருமை இப் பெரியோனுக்கே உரியது. இத்தமிழ் மகன் வீரத்திற் சிறந்து விளங்கியது போலவே சமயப்பற்றிலும் அழுத்தமாக இருந்து, பக்தியிலும் சிறந்து விளங்கியது பெரிதும் போற்றத்தக்கது.

8. புறநானூற்றுக் காட்சிகள்

சங்க நூல்கள்

வேங்கட மலையை வடக்கிலும் கன்னியா குமரியைத் தெற்கிலும் வங்கக் கடலைக் கிழக்கிலும் அரபிக் கடலை மேற்கிலும் எல்லைகளாகப் பெற்ற தமிழ் நாட்டில், ஏறத்தாழ 1600 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சேர, சோழ, பாண்டிய நாடுகள் செழிப்புற்ற நிலையில் இருந்தன. பாண்டியர் தமது தலைநகரமான மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை நடத்தி வந்தனர். அதனில் தமிழ் நாட்டுப் பெரும் புலவர் பலர் இருந்தனர். அவர்களும் பிறரும் பாடிய பாடல்கள் தொகுக்கப்பட்டன. அவையே எட்டுத்தொகை, **பத்துப் பாட்டு** என்பன. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, **புறநானூறு** என்பன எட்டுத் தொகை நூல்கள் ஆகும். இந்நூல்களில் உள்ள பாக்களைப் பாடியவர் பல்வேறு காலத்தவர்; பல நாட்டினர்; பல்வேறு வகுப்பினர். அவருள் ஆடவரும் உளர்; பெண்டிரும் உளர். இந்நூல்களுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் அறம், பொருள், வீடு என்னும் மூன்றையும் (புறப்பொருள்) பற்றியன. பரிபாடல் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் பற்றியது. ஏனையவை இன்பம் (அகப் பொருள்) ஒன்றையே பற்றியவை.

புறநானூறு

இந்நூல் புறப்பொருள் பற்றிய நானூறு பாக்களைக் கொண்டுள்ளதால் 'புறநானூறு' எனப் பெயர் பெற்றது. இதில் உள்ள பாக்கள் சேர-சோழ-பாண்டியராகிய முடியுடை வேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத் தலைவர், வீரர், பாரி முதலிய வள்ளல்கள்; ஆண்பாற் புலவர், பெண்பாற் புலவர் முதலியோர் வரலாறுகளை ஓரளவு அறிய உதவி புரிகின்றன. பாடிய புலவருள் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் முதலிய பல திறப்பட்ட மரபினரும் அடங்கியுள்ளனர். இந்நூற் பாக்களின் பரந்துபட்ட காலம் ஏறத்தாழக் கி. மு. 1000—கி. பி. 250 என்னலாம். இப் பாடல்களால் அக்கால மக்களுடைய பழக்க வழக்கங்கள், மொழி நடை, நாகரிகக் கருத்துகள், சமய வாழ்க்கை, கலை வளர்ச்சி முதலியவற்றை ஓரளவு நன்றாக அறிதல் கூடும். தொகை நூல்களுள் தமிழர் நாகரிகத்தை அறியப் பேருதவி செய்யத்தக்க நூல் இஃதொன்றே என்று துணிந்து கூறலாம். ஆதலின் இந்நூற் செய்திகளைத் தமிழ் மாணவர் அறிதல் இன்றியமையாததாகும். இந்நூற் செய்திகள் அனைத்தும் இங்குக் கூற இயலாது; ஆதலின், இதன் தேவையையும் சிறப்பையும் வற்புறுத்த இந்நூற்பாக்கள் உணர்த்தும் சில காட்சிகளைக் காட்டுவோம்; காண்க.

காட்சி—1

ஔவையார் அரசியல் தூதர்

ஔவையார்

அதியமான் நெடுமான் அஞ்சி என்பவன் சேலம் ஜில்லாவில் தகடூரை (தர்மபுரியை)த் தலைநகராகக்கொண்டு அதனைச் சூழவுள்ள நாட்டை ஆண்ட கொங்கு நாட்டு அரசருள் ஒருவன். அவன் ஔவையார் என்ற பெண்பாற் புலவரைத் தன் அரண்மனையில் மிக்க உபசாரத்துடன் வைத்திருந்தான். புலவர் அவனுடைய நல்லியல்புகளை அவ்வப்பொழுது பாராட்டி, அறிவுரை கூறவேண்டிய காலங்களிற் கூறி, அவனுக்கு உற்ற அறிவூட்டும்-ஆக்கமூட்டும் நண்பராக இருந்து வந்தார். நீண்ட நாள் உயிர் வாழச் செய்யும் கருநெல்லிக் கனி ஒன்றைத் தான் உண்ணாது ஔவையாரை அதியமான் உண்பித்தனன் எனின், ஔவையாரிடம் அவ்வள்ளல் கொண்டிருந்த பேரன்பு நன்கு விளங்கும் அன்றோ?

தொண்டைமான்

இவன் அதியமான் காலத்தில் காஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்டு வந்தவன் என்று கருதப்படுகிறன். இவன் எக்காரணத்தாலோ அறியோம், அதியமானைத் தாக்கத் தருணம் பார்த்திருந்தான். இதனை அறிந்த அதியமான் தன் பகைவனது படைப் பலத்தை அளந்தறியத் தன் அவைப் புலவரான ஔவையாரைத் தூது செல்ல விட்டான்.

ஔவையார் - அரசியல் தூதர்

பெரும் புலவராகிய ஔவையார் தன் அரண்மனை நோக்கி வருவதைக் கண்ட தொண்டைமான் மகிழ்ச்சி அடைந்தான்; அடைந்து, எதிர் சென்று அவரை வரவேற்று அறு சுவை உண்டி அகங்குளிர அளித்தான்; தன் படைப் பலத்தை அவருக்குக் காட்ட விழைந்து, அவரைப் படைக்கலக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்று காட்டினான். ஔவையார் அங்கிருந்த படைகளை ஆழ்ந்து நோக்கினார்; பின்னர் அவனை நோக்கி,

"இப் படைக்கலக் கொட்டிலில் உள்ள படைக் கருவிகள் புதியனவாகச் செய்யப்பட்டவை; நெய் பூசப்பட்டவை; பீலி அணியப்பட்டவை. இவை புதியவை என்பதற்கு அடையாளமாக மாலை சூட்டப்பட்டு இருக்கின்றன; மிக்க காவலையுடைய அகன்ற கோவிலில் வைக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் இவற்றின் காட்சி அழகாக இருக்கின்றது. ஆயின், அதியமானுடைய படைக்கருவிகள் போரில் பகைவரைக் குத்தினமையால் கங்கும் நுனியும் முறிந்து எப்பொழுதும் கொல்லனது சிறிய உலைக்கூடத்திலேயே விழுந்து கிடக்கின்றன," என்று கூறினார். இக்கூற்றில், தொண்டைமானைப் புகழ்ந்தது போலப் பழித்தமையும் அதியமானைப் பழித்ததுபோலப் புகழ்ந்தமையும் அடங்கி யிருத்தல் காணலாம். "அதியமான் ஓயாது போர் செய்பவன்; அதனால் அவனுடைய படைக்கலங்கள் எப்பொழுதும் பழுது பார்க்கப் படும் நிலையிலேயே இருக்கின்றன. நீயோ,

போரே அறியாதவன்; அதனால், நின் போர்க் கருவிகள் செய்யப்பட்ட நிலையிலேயே வைக்கப் பட்டுள்ளன. இக்கருவிகளைப் பயன்படுத்தி ஒரு போதும் போர் செய்து பயிற்சி பெறாத நீ, போரையே தன் தொழிலாகக் கொண்ட பெரு வீரனான அதியனைத் தாக்க விரும்புகின்றாயே! என்ன அறியாமை!" என்று ஔவையார் தெளி வாகக் கூறுதற்குப் பதிலாகச் சாதுர்யமாக மேற் சொன்னவாறு கூறினார். இங்ஙனம், குறிப்பாகச் செய்தியைக் கூறி அரசரை எச்சரித்தலே அரசி யல் தூதர் கையாளத் தகுவது என்பது அரசியல் அறிஞர் அறிந்த ஒன்றாகும்.

இந் நிகழ்ச்சியால், நமது பாட்டியாரான ஔவையார் அரசர் மதிக்கத்தக்க-அவர்க்கு அறி வுரை கூறத்தக்க நிலையில் அறிவும் ஒழுக்கமும் பெற்று வாழ்ந்தனர் என்பதை நன்கறியலாம். மிக்க அறிவும் நாகரிகமும் வளர்ந்துள்ளன என்று கூறப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அரசர், பெண் அறிஞரைத் தூது விடுதல் அருமை யாகும். இவ்வரிய ஒன்று, நமது தமிழ் நாட்டில் ஏறத்தாழ 1800 ஆண்டுகட்குமுன் நடைபெற் றது எனின், இதிலிருந்து-அக்காலக் கல்வி முறை யும்-சிறப்பாகப் பெண் கல்வியும்-கற்ற பெண் மணிகள் சமூகத்திற் பெற்றிருந்த மதிப்பும் பிற வும் நன்கறியக் கிடத்தல் காண்க.

காட்சி—2

பாரி மகளிர்

பாரியின் சிறப்பு

பாரி என்பவன் சங்க கால வள்ளல்களில் ஒருவன். அவன் பாண்டி நாட்டின் வட பகுதியில் உள்ள **பறம்பு மலையை** (பிரான் மலையை)த் தன் அகத்தே கொண்ட முந்நூறு ஊர்களைக்கொண்ட பறம்பு நாட்டுத் தலைவன்; சிறந்த கொடை வீரன்; முல்லைக் கொடி காற்றால் அலைதலைக் கண்டு மனம் பொறாமல் தனது தேரை, அது படர்தற்கேற்றபடி வைத்து மீண்ட இரக்க மனம் கொண்ட பெருந்தகை. அவனுக்கு உயிர் நண்பராக இருந்து, அவன் மகிழத் தாம் மகிழ்ந்து, அவன் வருந்தத் தாம் வருந்தி, அவனுடன் உறைந்தவர் மாசற்ற புலவராகிய **கபிலர்** என்பவர்.

மூவேந்தர் முற்றுகை

சேர - சோழ - பாண்டியர், பாரியினிடம் பகைமை கொண்டு அவன் மலையரணை முற்றுகை இட்டனர். மலைமீதிருந்த கோட்டைக்குள் பாரி, அவன் மகளிர், கபிலர், போர் வீரர் இவர்கள் இருந்து போரை நடத்தினர். போரில் மலையைக் கைக்கொள்ளக் கூடவில்லை. அதனால் மூவேந்தர் இரப்பவரைப்போல வேடம் பூண்டு பாரியை அடைந்து, அவனை வஞ்சனையாற் கொன்று, மலையைக் கைக்கொண்டனர். கபிலர் பாரியுடன் இறக்கத் துணிந்தனர்; திக்கற்ற பாரி மகளிரான தம் மாணவியரை நோக்கிக் கழிவிரக்

கங்கொண்டு, அவர்களைத் தக்கார்க்கு மணம் முடித்த பின்னரே இறப்பதாகத் துணிந்தார்; துணிந்து, அம் மகளிர் இருவரை அழைத்துக் கொண்டு வழி நடக்கலானார்.

துன்பப் பாடல்

கபிலரும் பாரி மகளிரும் வழி நடந்து சென்றனர்; பல ஊர்களைக் கடந்தனர்; ஒருநாள் ஓர் ஊரில் தங்கினர். அன்று முழு நிலாத் தண் கதிர் பரப்பி இரவை அழகு செய்தது. பாரி மகளிர் தங்கி இருந்த ஊர் அழகு பெற்று விளங்கியது. ஆயினும் என்ன! உள்ளம் துன்பக் கடலுள் ஆழ்ந்திருக்கையில் புறத்தே உள்ள இன்பக் காட்சிகள் இன்பத்தைத் தாரா அல்லவா? முழுமதி தண்ணொளி பரப்பி இரவை அழகு செய்தது, பாரி மகளிர்க்குப் பண்டை நினைவை ஊட்டியது. அவர்கள் கண்கள் நீரை ஆறுகப் பெருகவிட்டன. அம் மகளிர் கரை கடந்த வருத்தம் எய்தியவர்களாய்,

சென்ற திங்களில் (சென்ற பௌர்ணமியன்று) நாங்கள் எம் தந்தையுடன் இருந்தோம்; எம் பறம்பு மலையும் எம் வசம் இருந்தது. இன்றைத் திங்களில் (இந்தப் பௌர்ணமியன்று) முடியுடை மூவேந்தர் எம் குன்றைக் கைக்கொண்டனர். நாங்கள் எம் தந்தை இன்றித் தவிக்கின்றோம்,'' என்று வாய்விட்டு அரற்றினர். படித்த அம்மகளிர் அரற்றல்,

" அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
எந்தையும் உடையேம்; எம் குன்றும்
[பிறர்கொள்ளார்;

இன்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார் ; யாம் எந்தையும் இலமே,''

என்னும் அரிய பாட்டாகத்தோற்றம் எடுத்தது.

காட்சி—3

பாண்டியன் வஞ்சினம்

நெடுஞ் செழியன்

இவன் சங்க காலப் பாண்டியருள் ஒருவன். இவன் இளைஞனாக இருந்த பொழுதே அரசு கட்டில் ஏறியவன். இவன் படைக்கலப் பயிற்சியில் சிறந்தவன் ; யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியவற்றில் வல்லவன் ; மாங்குடி மருதனார் போன்ற பெரிய சங்கப் புலவரிடம் தமிழ் இலக்கண - இலக்கியங்களைக் கற்றுக் கவி பாடும் ஆற்றல் பெற்றவன் ; மாங்குடி மருதனாரை அவைப் புலவராகப் பெற்றவன்.

பகைவர் படையெடுப்பு

இவன் இளைஞனயினும் புலமையினும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினான். இவன் புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது. அதனைப் பொறாமையாலோ-அன்றி, இளைஞனை இவனது வீரத்தைக் குறைவாக எண்ணிப் பாண்டிய நாட்டைக் கவர்ந்து பங்கிட்டுக்கொள்ளும் பேராசையாலோ, அறியோம் ; சோழனும் சேரனும் பாண்டியன் மீது படை திரட்டினர். அவர்கட்கு உதவியாகத் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற ஐம் பெரு வேளிரும் படை திரட்டினர் ; ஆக எழு

வரும் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தனர்.

பாண்டியன் வஞ்சினம்

தன் ஒருவன்மீது இருபெரு வேந்தரும் ஐம்பெரு வேளிரும் மிகப்பெரிய சேனையுடன் வருதலை ஒற்றர் வாயிலாக உணர்ந்த பாண்டியன் கடுஞ்சீற்றம் கொண்டான்; கோப நகைப்பு நகைத்தான்; நகைத்து,

" 'இப் பாண்டியன் ஆள்கின்ற நாட்டைச் சிறப்பித்துச் சொல்பவர் நம்மால் சிரிக்கத் தக்கவர் ஆவர். இவன் அரசியல் அறிவு பெரு இளைஞன். நாமோ அரசியல் முதிர்ச்சி உடையோம்; உயரிய முதல்தரமான யானைப்படையும் குதிரைப்படையும் தேர்ப்படையும் பண்பட்ட காலாட்படையும் உடையோம்.' என்று என்னை இகழ்ந்தும் தம்மை உயர்வாகவும் பேசிக்கொண்ட பகை மன்னரைப் பொருதற்கரிய போரில் சிதற அடிப்பேன்; அடித்து, அவர்தம் முரசத்தோடு அவரைச் சிறைப்படுத்துவேன்; அங்ஙனம் செய்யேனாயின்,- 'எம்மரசன் கொடியன்' என்று குறை கூறத்தக்க கொடுங்கோல் கொற்றவனாக யான் ஆகக்கடவேன். ஆன்ற கேள்வியும் அமைந்த புலமையும் உடைய மாங்குடி மருதனார்போன்ற சான்றோர் எனது நாட்டைப் பாடாதொழிவாராக! யான் என்னை இரந்து பெறுவோர்க்குக் கொடுத்து மகிழமுடியாத வறுமையை அடைவேனாகுக!"

என்று வஞ்சினம் கூறினான். இவ்வஞ்சினக் கூற்றிலிருந்து இவன் செங்கோல் அரசன் என்

பதும், குடிகள் நலத்திற்கே நாட்டை ஆள வேண்டும் என்ற திடமான கொள்கை உடையவன் என்பதும், மாங்குடி மருதனார் போன்ற சான்றோர்பால் மிக்க மதிப்பு உடையன் என்பதும், 'இல்லை' என்று இரப்போருக்கு 'இல்லை' என்று உரையா இதயம் படைத்தவன் என்பதும் நன்கு விளங்குகின்றன அல்லவா?

காட்சி—4

பெருநள்ளி வள்ளன்மை

பெரு நள்ளி

இவன் சங்க கால வள்ளல்களில் ஒருவன்; தோட்டி என்னும் மலைக்கும் அதனைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன். இவன் வரையாது வழங்கும் வள்ளல்; வறுமைக்குக் கொடிய பகைவன்;

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே!"

என்ற நற்கொள்கை உடையவன்.

வன்பரணர்

இவர் சங்க காலப் புலவர்; சொல் அழகும் பொருள் அழகும் வைத்துச் செய்யுள் செய்தலில் வல்லவர். இவர் வள்ளகளிடம் சென்று கண்டு அவர்மீது கவி பாடிப் பிழைத்து வந்தார். ஒரு நாள் இவர் தம் குடும்பத்துடன் செல்லும் பொழுது வழிநடந்த களைப்பால் பலா மரத்தடியில் ஓய்ந்துஇருந்தார். இவர் இடையில் கந்தை ஆடையைச் சுற்றிக்கொண்டிருந்தார்.

பெருநள்ளி வள்ளன்மை

புலவர் இங்ஙனம் இருந்த காடு பெருநள்ளி நாட்டைச் சேர்ந்தது. அவன் அன்று அப் பக்கமாக வேட்டையாடிக்கொண்டு வந்தான். வந்த அவன் பார்வை எளிய புலவர்மீது சென்றது. புலவர் அவனைக் கவனிக்கவில்லை. எனினும், அவன் புலவரது தோற்றம் கண்டு மன இரக்கம் கொண்டான்; புலவரை நெருங்கினான். அப்பொழுதுதான் புலவர் அவனைக் கண்டார்; கண்டதும் எழுந்தார். வள்ளல் கை கவித்து அவரை அமரச்செய்து, தான் வேட்டையிற் கொன்ற மான் இறைச்சியைத் தான் கடைந்த தீயால் விரைந்து சுட்டு, 'நீவிர் உண்ணுக' என்று தந்தான். புலவரும் பிறரும் அப்பதப் படுத்தப்பட்ட இறைச்சியை அமுதம் போல உண்டு சுடு பசியைத் தொலைத்தனர்; மலை உச்சியிலிருந்து மலைச்சாரலில் வீழ்ந்த அருவி நீரைக் குடித்தனர். புலவர், தாம் வேண்டாத நிலையில் தானாக வந்து உண்டி கொடுத்து, அதனால் உயிர் கொடுத்த வள்ளலை வணங்கி விடைபெற நின்றார். அவ்வமயம் அப் பெருங் குணக் கிழவன் தான் அணிந்திருந்த முத்துவடங் களையும் முன்கையில் அணிந்திருந்த கடகத்தை யும் எடுத்து, 'யாம் காட்டு நாட்டினேம்; ஆத லின், இங்கு நல்ல விலை மதிக்கத்தக்க அணிகலன் களைத் தருவதற்கு வாய்ப்பில்லை. இவற்றைப் பெறுக' என்று சொல்லி ஈந்தான்.

ஈதலில் பெருமை வேண்டாதவன்

புலவர் அவ்வள்ளலது நாடும் பெயரும் நிலை யும் அறிய விரும்பினார். இஃது இயல்புதானே!

அவர் அப்பெருமானை நோக்கி, "ஐயா, எம்மைப் பொருளாக மதித்து வந்து, உண்டி கொடுத்து, அணிகலன்களும் தந்து வாழ்வித்த நீர் யாவர்? உமது பெயர் யாது? உமது நாடு எது?" என்று பணிவாகக் கேட்டார். விடை இல்லை. வள்ளல் விரைந்து வந்த வழிச் சென்றான். புலவர், அவன் பின் சென்ற வீரரைக் கேட்டு, அவனே தோட்டி மலைத் தலைவனான பெருநள்ளி என்பதை அறிந்தார்; தன் பெயர் சொல்ல விருப்பம் அற்ற அவனது பெருந்தன்மையை எண்ணி எண்ணி வியந்தார்.

காட்சி—5

வீரத்தாய்

மறக்குடி

மறம் என்பது வீரம். தந்தை - தாய், இவர்க்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகள் - பெண் பிள்ளைகள் அனைவரும் வீரங்கொண்டு விளங்கினர் எனின், அவர் குடும்பம் 'வீரக் குடும்பம்' அல்லது 'மறக் குடும்பம்' எனப்படும். அவர் சந்ததியினர் (குடியினர்) வழி வழியாக வீரர்களாகவே விளங்கி வருவராயின், அவர் 'மறக் குடியினர்' எனப்படுவர். இம் மரபினரே தமிழ் நாட்டில் **மறவர்** எனப்படுவர்.

மறவர் குடும்பம்

சங்க காலத்து மறவர் குடும்பங்களுள் ஒன்றைப்பற்றி இங்குக் கூறுவோம்: ஒரு குடும்பத்தில் மறவர் மகள் ஒருத்தி இருந்தாள். தந்தை அவளைச் சிறந்த மறவனுக்கு மணம் செய்வித்

தான். புதிய மணமக்கள் இல்லற வாழ்க்கை யை இன்பத்தோடு நடத்திவந்தனர். நாளடை வில் அவர்கட்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. பெற் ரேர் அம்மகவைத் தம் மறக்குடி இயல்பிற் கேற்ப வளர்த்து வந்தனர். சிறுவன் பத்து அல் லது பன்னிரண்டு வயதினன் ஆயினன்.

போர்-தந்தை தொண்டு

சிறுவன் தவமகனுகக் கருதி வளர்க்கப்பட்டு வந்த அந்தக் காலத்தில் நாட்டில் போர் உண்டா னது. வேற்றரசன் படையெடுப்பால் நாடு அல்லற்பட்டது. 'போர்' என்றவுடனே துள் ளிக் குதித்துப் போர்க்களம் நோக்கி ஓடும் மற வர் அணியணியாகச் சென்றனர். அவர்களுள் சிறுவனது தாய்ப் பாட்டன் ஒருவன். உடல் தளரினும் வீரவுணர்ச்சி தளர்தல் இல்லாத மறக் குடி முதியவன் மகிழ்ச்சியோடு போர்க்களம் புகுந்தான்; தன்னுல் இயன்றவரை போர் புரிந் தான்; யானைகளைக் கொன்று குவித்தான்; இறுதி யில் புண்பட்டு இறந்தான்.

போர்-கணவன் தொண்டு

இரண்டாம் முறை மற்ருெரு போர் மூண் டது. இப்போரில் மறத்தியின் கணவன் கலந்து கொண்டான். அவன் உற்ற வயதினன்; சிறந்த வீரன்; கட்டழகன்; அச்சம் என்பதை அறியா தவன். அதனுல், அவன் பகைவர் என்ற பாற் கடலைக் கலக்கும் மந்தர மலையாக விளங்கினுன்; இறுதியிற் புண்பட்டுப் புகழ்நிறுத்தி மாண் டான்.

போர்-மகனை ஏவிய மறத்தி

மறுநாள் போர்ப்பறை கேட்டது. முதற் போரில் தந்தையையும் இரண்டாம் போரில் ஆருயிர்க் கணவனையும் இழந்து மகிழ்ந்த மறக் குடி மகள், செருப்பறை கேட்டதும் சொல்லொணு மகிழ்ச்சி அடைந்தாள்; தன் தனி மைந்தனை அழைத்தாள்; விரிந்து கிடந்த அவன் தலை மயிரை எண்ணெய் தடவிச் சீவி முடித்தாள்; வெள்ளாடையை அவனது இடையில் உடுத்திஞள்; வேலைக் கையில் கொடுத்தாள்; தனக்கு அவன் ஒருவனே மகன் என்பதையும் கவனியாமல் மலர்ந்த முகத்துடன் 'போருக்குச் செல்க,' என்று கூறி விடுத்தாள். ஆ! என்ன வீரம்! இவளல்லவா வீர மகள்! வீர மனைவி! வீரத்தாய்!

காட்சி—6

பூதப்பாண்டியன் தேவியார்

பூதப் பாண்டியன்

இவன் சிறந்த ஒழுக்கமும் நிறைந்த புலமையும் உடையவன்; கவிபாடும் ஆற்றல் பெற்றவன். இவன் ஆருயிர் மனைவியாரும் இவனைப் போன்றவரே என்று ஒரு வாக்கியத்திற் கூறி முடிக்கலாம். அதனுல் இருவரும் உடலும் உயிரும்போல வாழ்ந்து வந்தனர். அன்பு ஒத்த வாழ்விஞர் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இலங்கியது.

வஞ்சினம்

ஒருகால் பகையரசர் சிலர் பாண்டியனை எதிர்க்க முனைந்தனர். அதனை அறிந்த அரசன் சினந்து,

"என்மீது போருக்கு வர விரும்பும் பகையரசர் சிங்கம்போலச் சினந்து மீளாத வலிய உள்ளம் உடையவர்; விரைந்து வீரத்துடன் செல்லும் படையையும் உடையவர். அவர்கள் தம்முள் ஒன்றுகூடி என்னை வெல்லத் துணிந்துள்ளனர். நான் அவர்களைப் போர்க்களத்தில் பொருது, அவர்கள் முதுகு காட்டி ஓடுதலைக் காண்பேன்; அங்ஙனம் காணேன் ஆயின்,—(1) எனக்குச் சிறந்தவளாக உள்ள இவளை (மனைவியை) விட்டு நான் நீங்குவேன் ஆகுக; (2) அறம் கடுகளவும் பிறழாத அவைக்களத்தில், அறத்தின் திறப்பாடு இல்லாத ஒருவனை வைத்து, முறை கலங்கிக் கொடுங்கோல் செய்தேன் ஆகுக; (3) மிக்க புகழையுடைய வையையால் சூழப்பட்ட செல்வம் பொருந்திய ஊர்களில் பொய்யாத வருவாயை உடைய மருத நில ஊர்க்குத் தலைவனாகிய மாவன் என்பவனும், 'எயில்' என்னும் ஊரையுடைய ஆந்தை என்பவனும், புகழ் அமைந்த அந்துவஞ்சாத்தன் என்பவனும், ஆதன் அழிசி என்பவனும் வெய்ய சினத்தை உடைய இயக்கன் என்பவனும் உட்பட நின்ற சிறந்த நண்பரது சேர்க்கையில் உண்டாகும் செருக்யையுடைய மகிழ் நகையைத் தப்பினவன் ஆகுக; (3) பல உயிர்களையும் பாதுகாக்கும் அரசகுலத்திற் சிறந்த பாண்டி நாடு காக்கும் காவலில் நீங்கிப் பிறருடைய வன்புலங்களைக் காக்கும் காவலிடத்து, இக்குடிப் பிறப்பிலிருந்து நீங்கி யான் பிறப்பேன் ஆகுக!"

என்று சபதம் செய்தான். இச்சபதத்திலிருந்து — பாண்டியனுடைய செங்கோல்

தன்மை, நட்பு நிலைமை, காதல் அருமை முதலி யன நன்கு விளக்கமாதல் காண்க.

தேவியார் தீப்பாய்தல்

இத்தகைய கருத்து ஒருமித்த உயிர்க்காதல னை பூதப் பாண்டியன் இறந்தான். அவனது பிரிவைத் தேவியார் பொறுத்துக்கொண்டு கைம்மை வாழ்க்கை வாழ்வரோ? அவர் 'எரி மூழ்குவேன்' எனத் துணிந்தார். அதனை அறிந்த அமைச்சரும் புலவரும் தடுத்தனர். அப்போது அவ்வம்மையார் அவர்களை வருத்தத்துடன் நோக்கி,

" அறிவிற் சிறந்த பெரு மக்களே, 'நின் தலை வனுடன் நீ இறத்தலே தக்கது' என்று கூறாமல், 'நீ இறத்தலைத் தவிர்க' என்று சொல்லி என்னை விலக்கும் தகாத யோசனையுடைய பெரியோர் களே, வெள்ளரிக்காய் விதைபோன்ற நல்ல வெண்மையான மணமுள்ள நெய் இல்லாமல், இலை இடையே பயின்ற-கையால் பிழிந்துகொள் ளப்பட்ட நீர்ச் சோறு, எள் துவையல், புளியைக் கூட்டிச் சமைக்கப்பட்ட வேளைக்கீரை ஆகிய இவற்றை உணவாகக்கொண்டு—பருக்கைகளாற் பரப்பப்பட்ட படுக்கையில் பாயின்றிக் கிடந்து, கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிர் வாழ்க்கை யான் வாழவல்லேன் அல்லேன். சுடு காட்டில் உண்டாக்கப்பட்ட பிணப்படுக்கை உங் கட்குக் கடினமானதாகும். காதலனை இழந்த எனக்கு அது மலர்ந்த தாமரை மலர்களைக் கொண்ட குளிர்ந்த பொய்கை போன்றது,"

என்று கூறித் தீப்பாய்ந்து இறந்தார்.

வேண்டுகோள்

இத்தகைய பலவகைக் காட்சிகளைக் காட்டும் நூல் புறநானூறு. அது, நம் முன்னோர்களுடைய வீரம், நாட்டுப் பற்று, கற்பு, ஒழுக்கம், கல்வி, அறச் செயல், சமய எண்ணங்கள், வாணிகம், அரசியல் அறிவு முதலிய பல திறப்பட்ட- நமக்குத் தேவையாகவுள்ள நற் செய்திகளை நன் முறையில் அறிவிக்கும் ஆற்றல் உடையது. தமிழ் மக்களாகிய நீவிர், நமது முன்னோர் வரலாறு உணர்த்தும் அச்சிறந்த நூலினை வாங்கிப் படித்துப் பயன் பெறுதல் வேண்டும்.

9. தாமஸ் கார்லைல்

கல் தச்சர் குடும்பம்

சிறந்த ஆங்கில நூலாசிரியர் சிலருள் **தாமஸ் கார்லைல்** ஒருவர். அவரது வாழ்க்கை வரலாறு பிள்ளைகட்கு உணர்ச்சி ஊட்டத் தக்கது. தாமஸ் கார்லைல் ஸ்காட்லண்ட் தேசத்தில் எக்லிபெக்கன்[1] என்னும் வாணிப நகரில் கி. பி. 1795-ல் பிறந்தவர். அவர் தந்தையாரான ஜேம்ஸ் கார்லைல் கல் தச்சராக வேலை பார்த்து வந்தார். அவருக்கு ஒன்பது பிள்ளைகள் பிறந்தார்கள். அவருள் மூத்தவர் நமது தாமஸ் கார்லைல் என்பவரே

---

1. Ecclefechan

ஆவர். கல் தச்சர் வேலையிற் போதிய வருவாய் வாராமையால் குடும்பம் வறுமையில் வாடிக் கொண்டிருந்தது.

பள்ளிப் பருவம்

கார்லைல் முதலில் தந்தையாரிடமே கல்வி பயின்றார்; பின்னர் மற்றப் பிள்ளைகளோடு கிராமப் பள்ளிக்குச் சென்று படித்து வந்தார்; விரைவில் அங்கிருந்த பிள்ளைகளுள் முதன்மை பெற்று விளங்கினார். கிராமப்பள்ளிப் படிப்பு முடிந்ததும் கார்லைல் மேலும் படிக்க விருப்பம் கொண்டார். கல்வியறிவு மிகுதியாக வாய்க்கப்பெறாத ஜேம்ஸ் கார்லைல், தம் புத்திரரைத் தம்மைவிடச் சிறந்த அறிவாளியாக்க விரும்பினார். அவர் எளியவர் ஆயினும் பிள்ளையைப் படிக்க வைப்பதில் பேரூக்கம் காட்டினார். அதனால் அவர், கார்லைலை 'ஆனன்' பள்ளிக்கூடத்திற் சேர்த்தார். கார்லைல் அப்பள்ளி ஆசிரியரிடம் நன் மதிப்புப் பெற்றார்; ஆண்டுதோறும் மேல் வகுப்புக்குச் சென்றார். இறுதியில் அப் பள்ளிக்கூடத்தை விட்டார். தந்தையார், ஆசிரியர் யோசனைப்படி கார்லைலை எடின்பரோப் பல்கலைக் கழகத்திற் சேர்க்க விரும்பினார். கார்லைல் ஊருக்கும் எடின்பரோ நகரத்திற்கும் இடையில் நூறு மைல் தூரம் இருக்கலாம். தந்தையாரிடம் பணம் இல்லாமையால், தாமஸ் கார்லைல் தக்க துணைவர் ஒருவருடன் எடின்பரோவுக்கு நடந்து சென்றனர். அப்போது அவருக்கு வயது பதினைன்கு. 'கற்க வேண்டும்' என்ற ஆவல் ஒன்றே அந்த இளைஞர் உள்ளத்தில் நிலைத்திருந்ததால், நூறு மைல்

தூரத்தைத் தம் அடியால் அளக்கத் துணிந்தார். கார்லைல் எடின்பரோப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து படித்து வந்தார்; 'ஒழுக்கத்திற் சிறந்தவர்' என்று எல்லோராலும் போற்றப்பட்டார்; மாணவர் வழக்குகளைத் தீர்க்கும் நீதிபதியாக விளங்கினர். அவர்மீது ஆசிரியரும் மாணவரும் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். இங்ஙனம் கல்வியிலும் ஒழுக்கத்திலும் பெயர் பெற்றுக் கொண்டே, கார்லைல் 1814-ல் பல்கலைக் கழகப் படிப்பை ஒருவாறு முடித்துக் கொண்டார்.

பலதுறை அலுவல்

1. கல்லூரியை விட்டு விலகிய கார்லைல், தமது எதிர்கால வாழ்க்கையைப்பற்றி ஒன்றும் சிந்தியாமலே இருந்தார்; பின்னர்த் தாம் படித்த 'ஆனன்' பள்ளிக்கூடத்திலேயே ஓர் ஆசிரியராக அமர்ந்தார். ஆயினும், அவர் அவ் வேலையில் நீடித்திருக்கவில்லை. அஃது அவரது மனநிலைக்கு ஏற்ற வேலையாக இல்லை. அதனல் அவர், அதனை விட்டுத் தனித்துப் பல நூல்களைப் படிப்பதில் காலம் கழித்து வந்தார்.

2. அவ்வமயம் தந்தையார் தமது கல் தச்சர் தொழிலைவிட்டு ஒரு சிறிய விவசாயப் பண்ணையில் வேலை செய்ய ஒப்புக்கொண்டார். கார்லைல் தந்தையாருக்கு உதவியாகக் கிராமத்திலேயே இருந்தார். அங்ஙனம் இருந்த இரண்டு ஆண்டுகளில், அவர் ஜெர்மன் மொழியைக் கற்றுக் கொண்டார்.

3. இதன் பிறகு கார்லைல் 'கிர்க்கல்டி'[2] என்னும் இடத்தில் இருந்த பள்ளிக்கூடத்தில் ஓர் ஆசிரியராக அமர்ந்தார். அவ்வூரில் வேறோர் பள்ளிக்கூடமும் இருந்தது. அதனில் 'எட்வர் இர்விங்' என்பவர் ஆசிரியராக இருந்தார். கார்லைலும் இர்விங்கும் பழகத் தொடங்கி விரைவில் நண்பராயினர். இங்ஙனம் கார்லைல் ஆசிரியராக இருந்தபொழுது அவரது அன்புள்ள அன்னையார் தம் ஊரிலிருந்து பல பொருள்களைக் கார்லைலுக்கு அனுப்பிவந்தார்; தம் செல்வ மைந்தருக்குக் கடிதம் எழுதுவதற்காகவே அவ்வம்மையார் படித்துக் கொண்டார் எனின், அவர் பிள்ளைபால் கொண்டிருந்த தாயன்பை என்னென்பது!

4. கார்லைலுக்கு மீண்டும் ஆசிரியர் வேலையில் வெறுப்பு ஏற்பட்டது. அதனால், அவர் அதனை விட்டு விலகித் தம் நண்பரான இர்விங் என்பவருடன் எடின்பரோ நகரம் சென்றனர்; வேலையின்றி மூன்று ஆண்டுகள் துன்பப்பட்டனர். தம் மனத்திற் பட்டதை ஒளிக்காமற் சொல்லும் இயல்பினர் ஆதலின், அவர் பலரது விருப்பிற்கு ஆளாகக்கூடவில்லை. இந்த மூன்று வருட காலமும் அவருக்கு வேண்டிய உண்டியும் உடையும் ஊரிலிருந்தே வந்துகொண்டிருந்தன. அவர், "நான் என்றேனும் ஒரு நாள் முன்னேற்றம் பெற்றே தீருவேன்; என்னைப்பற்றிக் கவலைப் பட வேண்டா," என்று தம் தாய் - தந்தையர்க்கு அடிக்கடி எழுதி வந்தார்.

---

2. Kirkcaldy

5. 1821-ல் கார்லைலுக்கு நற்காலம் தொடங்கியது என்னலாம். பத்திரிகைகட்கு அனுப்பப்பட்ட நூல்களைப் படித்து மதிப்புரை எழுதும் வேலை அவருக்குக் கிடைத்தது. வருவாய், தேவைக்கு ஓரளவு மிகுதியாகவே வந்தது. எஞ்சிய தொகையைக் கார்லைல் தம் பெற்ருேர்க்கு அனுப்பிவந்தார். அவர் ஓய்வு நேரங்களில் பிரஞ்சு மொழியில் வரையப்பட்டிருந்த நூல் ஒன்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். தமது 'சொந்த நூல்' என்று சொல்லக்கூடிய முறையில் நூல் ஒன்றை எழுதவேண்டும் என்பது அவரது அவா. அதனுல்அவர், ஸ்கில்லர் வாழ்க்கை வரலாறு[3] என்ற நூலை எழுதத் தொடங்கினுர்.

6. அதனை எழுதத் தொடங்கிய கார்லைல் இலண்டன் சென்ருர்; தம் நண்பரான இர்விங் என்பாரைக் கண்டு அவருடன் சிலநாள் தங்கி இருந்தார். இலண்டன் வாழ்க்கை அவருக்கு வெறுப்பைத் தந்தது. அதனுல் அவர், நூல் வெளியிடுபவரிடம் சில வேலைகளைப் பெற்றுக் கொண்டு ஸ்காட்லண்ட் போய்ச் சேர்ந்தார்.

மண வாழ்க்கை

கார்லைலுக்கு 1826-ல் திருமணம் நடைபெற்றது. அவரது மனைவியார் பெயர் 'வெல்ஷ்' என்பது. அவர் சிறந்த ஒழுக்கம் உடையவர்; கணவர்க்கேற்ற காரிகையராக ஒழுகி வந்தார். வறுமையில் வாடிய கார்லைலுக்குத் தக்க மனைவியார் கிடைத்தது அவர் பாக்கியம் என்றே கூறு

3. Life of Schiller

தல் வேண்டும். கார்லைல் எடின்பரோ நகரத்தில் தமது புதிய வாழ்க்கையைத் தொடங்கி நடத்தி வந்தார்; நூல் எழுதிப் பிழைப்பதையே நோக்கமாகக் கொண்ட கார்லைலது வாழ்க்கை எளிய வாழ்க்கையாகவே இருந்தது. வருவாய் நிரம்ப வாராமையால், சமையல் வேலை முதலிய வீட்டு வேலைகளை எல்லாம் மனைவியாரே செய்யவேண்டியவர் ஆனார். இங்ஙிலையில் கார்லைல் எடின்பரோவைவிட்டு நீங்கிக் கிரெய்கன்புட்டாக்[4] என்னும் இடத்தில் ஒரு தனி வீடு அமர்த்திக்கொண்டு வாழ்ந்துவந்தார்.

கட்டுரை ஆசிரியர்

கார்லைல் எழுதிய நூல்கள் சில வெளிவந்தன. அறிஞர் அவற்றைப் படித்து மகிழ்ந்தனர். சிறிது சிறிதாக அவரது பெயர் வெளியிற் பரவியது. 'எடின்பரோ ரெவ்யூ' என்ற பத்திரிகை, அவருடைய கட்டுரைகளை வெளியிடத் துணிந்து முன்வந்தது. கார்லைல் பல அரிய கட்டுரைகளை வரைந்து அப்பத்திரிகையில் வெளியிட்டு வந்தார். அவருடைய கட்டுரைகள் ஸ்காட்லண்ட் முழுவதும் நன்கு பரவின; இங்கிலாந்திலும் பரவின. கட்டுரைகட்குப் பணம் வரத் தாமதமாயிற்று. அதனால், கார்லைல் கடன்வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. குறித்த பொழுதெல்லாம் பத்திரிகைக் காரிடமிருந்தும் புத்தக வெளியீட்டாரிடமிருந்தும் பணம் வராமையால் அவர் பட்ட கடன் அடைபட வழியில்லாது இருந்தது.

4. Craigenputtock

அதனால், அவர் மனம் வருந்தலானார்; தம்மிடம் இருந்த பரிகளை விற்றேனும் கடன் அடைக்கத் துணிந்தார். அவர் அங்ஙனம் துணிந்ததுதான் தாமதம்; நல்ல குதிரை ஒன்று நோய்வாய்ப் பட்டு இறந்தது.

சிறந்த நூல்

இத்துன்ப நிலையில், அவர் எழுதிக்கொண்டு வந்த புதிய நூல் ஒன்று முற்றுப்பெற்றது. அதன் பெயர் '**சார்ட்டர் ரிசார்ட்டஸ்**'[5] என்பது. அதனைக் கார்லைல் மனைவியார் கருத்தூன்றிப் படித்தார்; "இஃது உண்மையில் திறம்பட அமைந்த நூலாகும்," என்று கூறிப் பாராட்டினார். கார்லைல் 'ஸ்கில்லர் வாழ்க்கை வரலாறு' என்ற நூலை வரைந்தனர் என்பது முன்னரே கூறப்பட்டதன்றோ? அந்நூலைப் படித்த இங்கிலாந்து மக்களும் ஜெர்மானிய மக்களும் அதனைப் பாராட்டினர். அதனால், கார்லைல் பெயர் அவ் இரு நாடுகளிலும் நன்றாய்ப் பரவி இருந்தது. அங்ஙனம் இருந்தும், இலண்டன் நகரத்தில் இருந்த நூல் வெளியிடுவோர், கார்லைல் வரைந்த சிறந்த புதிய நூலை வெளியிட முன்வரவில்லை. இதற்காகக் கார்லைல் இலண்டன் சென்றது வீணாயிற்று.

"அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா,"

என்பது உண்மை அல்லவா?

தந்தையார் மறைவு

கார்லைல் இலண்டனில் இருந்த பொழுது அவரது தந்தையார் தம் ஊரிற் காலமானார். இச்

5. Sartor Resartus

செய்தி கார்லைலைத் திடுக்கிடச் செய்தது. அவர் கொண்ட துயரத்துக்கு அளவில்லை; தம் ஊரை அடைந்து, தாம் இருந்து செய்யவேண்டிய கடன்களைச் செய்து, 'கிரெய்கன் புட்டாக்'கை அடைந்தார்; அங்கு இருப்பதும் அவருக்குப் பிடிக்கவில்லை; தம் பொருள்கள் சிலவற்றை விற்றார்; தம்மிடமிருந்து கடிதம் வந்தவுடன் இலண்டனுக்கு வருமாறு மனைவியாரிடம் கூறி இலண்டனை நோக்கிச் சென்றார்.

புது இடம் புகுதல்

இலண்டன் சென்ற கார்லைல், செல்சி[6] என்னும் இடத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டார்; அது தோட்டமுள்ள வீடாகும்; அங்குத் தம் ஆருயிர் மனைவியாரை வரவழைத்துக்கொண்டார். வீட்டிற்குப்பின் தோட்டம் இருந்ததால் அவர் தோட்ட வேலையை இன்பமாகச் செய்துவந்தார்.

'பிரெஞ்சுப் புரட்சி' பற்றிய நூல்

இது கார்லைல் அரும்பாடுபட்டு எழுதிய நூலாகும். ஒருநாள் அவர், தம் மதிப்புக்குரிய நண்பரான ஜான்ஸ்டுவர்ட்மில் என்பவரிடம் இந்நூலைக் காட்டினார். அந்நண்பர் கார்லைலை உள்ளன்போடு நேசித்த உத்தம நண்பர்; அவரிடம் பெருமதிப்பும் கொண்டவர்; இப்புதிய நூல் வெளிவரல் வேண்டும் என்பதில் மிகுந்த கவலை கொண்டவர். அவர் இந்நூலை எடுத்துச் சென்று படித்துப் பார்ப்பதாகக் கூறித் தம் வீட்டிற்கு

6. Chelsea

எடுத்துச் சென்றார். சில வாரங்கள் சென்றன. ஒருநாள் மாலை அந்நண்பர் கார்லைல் விடுதிக்கு வந்தார். அவரது முகம் கவலை கொண்டதாகக் காணப்பட்டது. அவர் மன அமைதி அற்றவராகக் காணப்பட்டார். கார்லைல் அவரை அமர்வித்து, "ஏன் உங்கள் முகம் வாடி இருக்கின்றது?" என்று கவலையோடு விசாரித்தார். நண்பர் நடுக்கத்துடன், "ஐயன்மீர், நான், நீங்கள் எழுதிய பிரெஞ்சுப் புரட்சிபற்றிய நூலைப் படித்து முடித்தேன்; பிறகு அஜாக்கிரதையாக ஓர் இடத்தில் வைத்து மறந்துவிட்டேன்; நினைவு வந்து பார்த்த பொழுது, அதன் பெரும்பகுதியான ஏடுகள் காணப்படவில்லை; சிலவே எஞ்சி இருந்தன. நான் என்ன செய்வதென்பது தெரியவில்லை....." என்று கூறினார்.

கார்லைல் அந்நூலை எழுதி முடிக்கப் பல மாதங்கள் உழைத்தார்; அதனை விற்றுவரும் பணத்தைக் கொண்டு தமக்கிருந்த கடனை ஒழிக்க விழைந்தார். அவரது எண்ணம் பாழாயிற்று. என்ன செய்வார்! நண்பரோ நல்லவர்; வேண்டும் என்று அந்நூலை அழித்தவர் அல்லர். கைத்தவற்றால் நேர்ந்த இழப்பு இது. எனவே, கார்லைல் நண்பரை நோக்கி, "ஐயா, அதுபற்றிக் கவலைப்பட வேண்டா; போனது போகட்டும்; மறந்து விடுக," என்று, கவலைப்பட்ட நண்பருக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர், கார்லைல் மீண்டும் அந்நூலை எழுதத் தொடங்கினார்; முன்வரைந்த பொருளுக்குரிய குறிப்புகள் அவர்பால் இல்லை; மீட்டும் அவற்

றைத் தயாரித்துக்கொண்டு விரிவாக நூலை எழுத முனைந்து, பல மாதங்கள் உழைத்து, இறுதியில் பிரெஞ்சுப் புரட்சி முழுவதையும் பற்றிப் பெரிய நூலாக 1837-ல் எழுதி முடித்தார். அதனை முடித்த அன்று, அவர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். இஃது இயற்கைதானே!

அரும்பாடுபட்டு வரையப்பட்ட பிரெஞ்சுப் புரட்சி பற்றிய நூல் வெளியிடப்பட்டது. அதனைப் படித்த அமெரிக்க அறிஞர், அந்நூலையும் அதன் ஆசிரியரையும் பாராட்டினர். அமெரிக்க நாடு, கார்லைலை மதித்ததற்கு அறிகுறியாக அவருக்கு இருநூறு பவுன்கள் அனுப்பின. இங்ஙனம் அவரை வெளிநாட்டார் மதிக்கத் தொடங்கியதைக் கண்ட இங்கிலாந்து, அப்பெரிய எழுத்தாளரைப்பற்றி எண்ண ஆரம்பித்தது. எடின்பரோப் பல்கலைக் கழகத்தார் தங்கள் பல்கலைக் கழகத்தில் உள்ள வரலாற்றுப் பீடத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவரை வேண்டினர். வெளிநாட்டார் தம்மை மதிக்கத் தொடங்கிய பின்னரே, தம் நாட்டார் தம்மை மதித்து வேண்டுதலைக் கண்ட கார்லைல் உள்ளம், வருந்தியவராய், 'அஃது எனக்கு வேண்டா' என்று கூறி மறுத்து விட்டார்.

தாயார் மறைவு

மேற்கூறிய நிகழ்ச்சிக்குப் பிறகு கார்லைல் வரைந்த இரண்டு நூல்கள் வெளிவந்தன. அவை—'முற்காலமும் இக்காலமும்' என்ற நூலும், 'வீரரும் வீரர் வணக்கமும் பற்றிய சொற்பொழிவுகள்' என்ற நூலும் ஆகும்.

அவை வெளிவந்த சிறிது காலத்திற்குள் கார்லைல் ஆருயிர் அன்னையார் நோய்வாய்ப்பட்டு, 1854-ல் காலமானார். தாயார் மறைவினைக் கேட்ட தனயர், 'இடியோசை கேட்ட நாகம்' போல் ஆயினர். அவர், தம் தந்தையாரையும் தாயாரையும் நேசித்த அளவு வேறு எவரையுமே நேசித்ததில்லை. தந்தையார் மறைவு அவரைத் துன்பத்திற்குள்ளாக்கியது எனின், தாயார் மறைவு மிக்க துன்பத்திற்கு உள்ளாக்கியது என்னலாம். 'தாயிற் சிறந்தொரு கோவிலும் இல்லை,' என்பது கார்லைல் கருத்து. பெரும் புலவராகிய அப்பேரறிஞர், தம் தாயாரை எண்ணி எண்ணிக் கதறி அழுதார் எனின், அவர் தம் தாயார்மீது கொண்டிருந்த பற்றை என்னென்பது!

முதுமை

கார்லைல் வரவர முதியவர் ஆயினார். முதுமை ஒருபக்கம் எனின், பெற்றோரை இழந்த பெருந்துயரம் மற்றொரு பக்கம் அவரை வாட்டியது. அதனால், அவரது உடல்நிலை மிக்க தளர்ச்சி அடைந்தது. அதன் காரணமாக, அவர் 1863-ஆம் ஆண்டுமுதல் நடக்க வன்மை குறைந்தவர் ஆயினார்; ஆகவே, குதிரைமீது வெளிப் போதலை மேற்கொண்டார்.

அரிய 'உழைப்பு' நூல்

'பிரடரிக் என்னும் பெரியோர்'[7] என்பவர் ஜெர்மானிய அரசர். அவரைப்பற்றிய வரலாறு

7. Frederick The Great

வரையக் கார்லைல் பலகாலும் முயன்றார்; அதற்காக இரண்டு முறை ஜெர்மனி சென்றார்; தமக்கு வேண்டிய குறிப்புகட்காகப் போர்க்களங்கள், காட்சிச் சாலைகள், நூல் நிலையங்கள் முதலியவற்றைப் பார்வையிட்டார்; அக்குறிப்புகளை முறைப்படுத்தி அழகிய ஆங்கில நடையில் அரிய நூல் ஒன்றை எழுதி முடித்தார். அதனைப் படித்த ஆங்கிலேயர் தாமஸ் கார்லைலை வானளாவப் பாராட்டினர். தங்கள் பேரரசரைப்பற்றி அரிய நூலினை எழுதிய பெரும் புலவரை ஜெர்மானியர் வாயார வாழ்த்தினர்

பல்கலைக் கழகத்தில் பதவி

எடின்பரோ-பல்கலைக்கழக அலுவலகத்துத் தலைவர் பதவி கார்லைலுக்குக் கிடைத்தது. கார்லைல் அதனைப் பல்கலைக்கழக மாணவர் வேண்டுகோள்மீது ஏற்றுக்கொண்டார். மாணவர் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர்; அவரைச் சொற்பொழிவு ஆற்றுமாறு வேண்டினர்; அவர் பேச்சைக் கேட்டுப் பெரு மகிழ்ச்சி அடைந்தனர். அப்பொழுது அவரது மனைவியார் 'செல்சி'யிலேயே தங்கியிருந்தார்.

மனைவியார் மறைவு

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் இயைந்து வருதல் அன்றோ உலக இயற்கை! ஓர் உயர் பதவியில் இருப்பதாக எண்ணி மகிழ்வு கொண்டிருந்த கார்லைலுக்கு உடனே துயர்நிலை உண்டானது. அவரைப் பிரிந்து தனியே 'செல்சி'யில் இருந்த அவரது ஆருயிர் மனைவி

யார் ஒருநாள் மாலை, இருதயத் துடிப்பு நின்று இறந்தார். இத்துயரச் செய்தியைக் கார்லைல் தாங்க முடியாதவர் ஆயினர். 'தாய்க்குப் பின் தாரம்' என்பது உலக மொழி. தாயார் மறைவுக்குப் பின் தம்மை மனம்-மொழி-மெய்களால் பாதுகாத்து வந்த மனைவியார் மறைந்தது, கார்லைலுக்கு உலகமே இருண்டு விட்டதுபோல் ஆயிற்று. அஃது இயல்புதானே! தம்மைப் பேரன்புடன் பாதுகாத்த பெற்றோர், ஒருவர் பின் ஒருவராக மறைந்தனர்; இறுதியில் தமது முதுமைப் பருவத்தில் உயிர்த்துணைவராக-வாழ்க்கையின் விளக்கமாக இருந்த இன்னுயிர் மனைவியாரும் இறந்தனர் எனின், அவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! அந்தோ! உயிரனையாரை உலகத்தினின்றும் பிரிதல் கொடிது! கொடிது!!

முதுமையில் சிறப்பு

தாமஸ் கார்லைல் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதிய ஆங்கில ஆசிரியர். அவரது நடை செம்பாகமான நடை. அவர் வரைந்துள்ள வரலாற்று நூல்கள் சாத்திரீயமுறையில் அமைந்தவை. அவற்றுள் 'பிரடெரிக் என்னும் பெரியோர்' என்ற நூல் பெரிதும், பாராட்டப்பட்டது. அந்நூலினை மதித்துப் 'ப்ரஷ்ய' அரசாங்கம் கார்லைலுக்கு 'ஆர்டர் ஆப் மெரிட்'[8] என்னும் சிறப்புப் பட்டத்தை அளித்து மகிழ்வித்தது. ஸ்காட்லண்ட் அரசியார் கார்லைலுக்கு உபகாரச் சம்பளமும் 'கிராண்ட் கிராஸ் ஆப் தி பாத்'[9]

---

8. Order of Merit
9. Grand Cross of the Bath

என்ற பட்டமும் வழங்கினர். அரசியார் தம்மை முன்னரே சிறப்பித்திருத்தல் வேண்டும் என்பது கார்லைல் எண்ணம்; அதனைச் செய்யாமையால் அவர் பலகாலும் எண்ணி வருந்தியதுண்டு. ஆதலின், அவர் அரசியார் உதவியையும் அவர் தந்த பட்டத்தையும் ஏற்க மறுத்துவிட்டார். கார்லைல் எண்பது வயது நிரம்பப்பெற்றார். அவருடைய நண்பரும் அவரை வியந்தவரும் அந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடினர்; அப்பொழுது ஸ்காட்லண்டிலிருந்து அவருக்குத் தங்கப் பதக்கம் ஒன்று பரிசளிக்கப்பட்டது. கார்லைல் அதனைப் பெரு மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.

கார்லைல் மறைவு

கார்லைல் தமது எண்பத்தைந்தாம் வயதில்-1881-ல் மண்ணக வாழ்வை நீத்தார். அப்பெரியார், அதுவரைப் பல நூல்களைப் படித்துக் கொண்டே இருந்தார் என்பது கவனிக்கத் தக்கது. அவர் சிறந்த கல்விமான் ஆதலின், அறிஞர் உடலங்கள் புதைக்கப்பட்ட இடமாகிய 'வெஸ்ட் மின்ஸ்டர் அபே'[10]யில் அவரது உடல் அரசாங்கத்தாரால் அடக்கம் செய்யப்பட்டிருக்கும். ஆயின், கார்லைல் அதனை விரும்பவில்லை. அவர், தமது ஊரில் தம் ஆருயிர்ப் பெற்றோர் அடக்கமான இடத்திலேயே தம் உடலையும் அடக்கம் செய்ய வேண்டும் என்று குறித்திருந்தனர். அதனால், அவர் விருப்பம் நிறைவேற்றப்பட்டது.

---

10. Westminster Abbey

நல்லியல்புகள்

இளமை அறம்

கார்லைல் எளிய குடும்பத்திற் பிறந்தவர்; எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்; தமக்குப் பெரும் பொருள் வந்த காலத்திலும் எளிய வாழ்வைக் கைவிடவில்லை. அவர் உள்ளம் இரக்கம், ஈகை, அன்பு இவற்றைப் பற்றுக்கோடாகக் கொண்டது. அவர் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த பொழுது, ஒரு நாள் எளிய மனிதன் ஒருவன் மேலாடை இன்றிக் குளிரில் வருந்திக்கொண்டே கார்லைல் வீட்டண்டை வந்து நின்றான். பரிதாப நிலையில் இருந்த அவ்வேழை மகனது வறிய கோலத்தைக் கண்ட பள்ளி மாணவராகிய கார்லைல்—உலக அநுபவம்பெறாத சிறுவராகிய கார்லைல் மன இரக்கம் கொண்டார்; அவனுக்கு உதவி செய்யத் துணிந்தார்; தாம் சேமித்து வைத்திருந்த சிறிய தொகையைக் கொண்டுவந்து அவனுக்குக் கொடுத்து மகிழ்ந்தார்.

மாணவர் உறவு

கார்லைல் பள்ளியில் தம்முடன் படித்துக் கொண்டிருந்த மாணவர்களுடன் நெருங்கிப் பழகவில்லை; அவர்களோடு கூடி விளையாடியதில்லை; அவர்கள் ஒருவர்க்கொருவர் மரியாதை தவறிப் பேசியதை வெறுத்தார்.

பெற்றோர்மீது பேரன்பு

அவர், பெற்றோரைக் கண் கண்ட தெய்வங்களாகக் கருதினார்; தாம் வருந்திய நிலையிலும்

அவர்கட்குத் தம்மால் இயன்ற அளவு பணத்தையோ-வேறு பொருள்களையோ அனுப்பி வந்தார். அவருக்குக் கடிதம் எழுதவே அவர் தாயார் எழுதக் கற்றுக்கொண்டனர் எனின், அவ்வம்மையார் அவரை, அவருடைய நல்லியல்புகட்காக எந்த அளவு நேசித்திருத்தல் வேண்டும் என்பது இங்கு நினைக்கத்தக்கது.

உண்மையாளர்-சுயமதிப்பாளர்

கார்லைல் உள்ளதை உள்ளவாறு உரைப்பவர்; தமது மனத்திற் பட்டதை ஒளியாமற் கூறுபவர். அவரது நேர்மையை உணர ஆற்றல் அற்ற மக்கள் அவரைக் குறை கூறினர். கூறி என்ன பயன்? அவர் அம்மக்களை மதிக்கவில்லை; தம் இயல்பினின்று ஒரு சிறிதும் வழுவவில்லை. தமது தகுதியை உரிய காலத்தில் அறிந்து சிறப்புச்செய்யாத அரசியாரை அவர் மதிக்கவில்லை; அவர் அளிக்க முன்வந்த உதவிச் சம்பளத்தையும் சிறப்புப் பட்டத்தையும் ஏற்க மறுத்துவிட்டார் எனின், அவரது சுயமதிப்பை என்னெனப் பாராட்டுவது!

தனிமையில் விருப்பம்

கார்லைல் சிறந்த சிந்தனையாளர் ஆதலின், அவர் வெளிச் செல்லும் பொழுதெல்லாம் நண்பரை அழைத்துப் போதல் இல்லை. சிலரைப் போல நண்பர்களுடன் வீண்பேச்சுப் பேசி வீணுக் காலத்தைக் கழிக்கும் வீணராக அவர் இருந்திலர் என்பது கவனிக்கத்தக்கது. தனி நடை

யிற்றுன்-தனி வாழ்க்கையிற்றுன் அமைதி உண்டாகும்.

இன்ப வாழ்க்கை

கார்லைல் நல்லியல்புகட்கு ஏற்ற மனைவியார் வாய்த்தது அவரது பெரும்பேறே ஆகும். அவ் அம்மையார், கணவரைக் கடவுளாக மதித்து வழிபட்ட கற்புடைய மனைவியார் ஆவர். அவர் தம் கணவருடைய இன்ப-துன்பங்களில் எல்லாம் தமக்குரிய பங்கினை எடுத்துக்கொண்டது பாராட்டற்பாலது. அவ்வம்மையார், தம் கணவர் வரைந்த 'சார்ட்டர் ரிசார்ட்டஸ்' என்ற நூலை ஊன்றிப் படித்துக் கணவரைப் பாராட்டினர் எனின், அவரது கல்வி மேம்பாடு எத்தகையதாக இருந்திருத்தல் வேண்டும்! இத்தகைய உயரிய கல்வியறிவும் சீரிய ஒழுக்கமும் ஒருங்கே அமையப்பெற்ற அம்மையாரை மனைவியாராகப் பெற்றமையாற்றுன், கார்லைல் புலவரது எளிய வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இலங்கியது.

உத்தம நண்பர்

'பிரெஞ்சுப் புரட்சி' பற்றிய நூற் பிரதியை எடுத்துச்சென்ற நண்பர் தொலைத்துவிட்ட செய்தியைக் கேட்டதும், கார்லைல் அந்நண்பர்மீது சீறி வீழ்ந்தார் இல்லை; அவரை வைதிலர்; அவரது நடுக்கத்தையும் மனக் குழப்பத்தையும் கண்டே மனம் வருந்தினர்; 'அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டா' என அவருக்கு ஆறுதல் கூறித் தேற்றினர். இத்தகைய செயல், அவரது உத்தம நட்பின் பண்பை உள்ளவாறு உணர்த்தப் போது

மன்றோ? பொருள் இழந்த நண்பர், அதனைப் போகட்ட நண்பரைத் தேற்றுதல் அரிதான செயலே!

பயன் பெறுக.

கொடிய வறுமைக்கிடையே அளவற்ற நூல்களைப் படித்து, பல நாடுகட்கும் சென்று, ஆராய்ச்சி நிகழ்த்திக் குறிப்புகள் சேர்த்து, நூல் எழுதி, அந்நூல்களைச் சமயம் வாய்க்கும்பொழுது வெளிப்படுத்தி, 'ஆங்கில உரைநடை ஆசிரியர்' எனப் பெரும் பெயர் பெற்ற தாமஸ் கார்லைல் என்பாரது வாழ்க்கை வரலாறு, உங்கட்குப் புத்துணர்ச்சி ஊட்டுவதாகும். இதனைப் பன்முறை வாசியுங்கள்; நல்லன கொண்டு பயன் பெறுக.

10. தலைமை உரை

திருவள்ளுவர் திருநாள்

இராவ் சாஹிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B.A., B.L.

[தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், பல்கலைக் கழகம், சென்னை.]

திரு அவதாரம்

தமிழ் நாடும் தமிழ் மொழியும் முயன்ற அருந்தவப் பயன் காரணமாக, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர், நமது நாட்டில் திரு அவதாரம் செய்தருளிய **வள்ளுவர்** என்னும் புண்ணிய மூர்த்தியை நினைவு கூரும் பொருட்டு நாம் இன்று கூடியிருக்கின்றோம். இவரது அவதார நிகழ்ச்சியைப் போன்று அத்துணைச் சிறப்புடையதாகப் பிறிதொரு நிகழ்ச்சி தமிழ் மொழிச் சரித்திரத்தில் உளதென்று கருது

வார் பெரும்பாலும் இல்லை. தமிழ் அணங்கு தலையெடுத்து அவள் மக்களாகிய நமக்கு இன் முகம் காட்டி நிற்பது இத் திரு அவதாரத்தின் பயன்கொண்டே யாகும். தமிழ் நாடு புண்ணிய பூமியாகக் கொள்ளப்படும் பெருமை வாய்ந்தது இவ் அவதாரத்தின் பெருமை பற்றியே யாகும். தமிழ் மக்களாகிய நாம் கௌரவமுடையதோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்று எண்ணி டப் பெற்று வருவதற்கும் இவ் அவதாரமே காரணமாகும். இங்ஙனமாகத் திரு அவதாரம் செய்தருளிய பெரியாரை அடிக்கடி ஞாபகத்தில் வைத்துப் போற்றிப் பாராட்டவேண்டுவது தமிழ் மக்களாகிய நமக்கு உரிமையும் கடமையும் ஆகின்றது. தமிழ் மொழியோடு பிறந்த நமக் கன்றிப் பிறமொழிகளைப் பயிலும் அந்நியர்க்கு இப்பேருரிமை இல்லாது போயிற்று. இவ் உரிமை ஒன்றினாலேயே நாம் இறுமாந்து தலை நிமிர்ந்து நடப்பதற்குத் தகுதியுடையராயி னோம். நம் தமிழ் மக்கள்மீதும் நம் தமிழ்மொழி மீதும் பிறர் அழுக்காறு கொள்ளும்படி அத் துணைப்பெருமை அளித்தது இப்பேருரிமை என்றே கருதுகின்றேன். இங்ஙனம், பிறப்பும் பெருமையும் நமக்கு அருள்செய்த புண்ணிய மூர்த்திக்கு நாம் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடு உடையராக இருக்கின்றோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு,"

என்பதன்றோ **தமிழ்வேதத்து விதி!**

நமது நிலை: அன்றும் - இன்றும்

ஆனால், நமது உரிமையைப் பாராட்டி மகிழ்தற்கும் நமது நன்றியறிதலை வெளிக்காட்டிக் கொள்ளுதற்கும் மாத்திரமன்று நாம் இன்று கூடியிருப்பது. நாம் பழமையில் இருந்த சிறந்த நிலையினின்றும் வழுவிவிட்டோம். நமது பண்டைப் பெருமை நம்மினின்றும் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டது. நாம் அதோகதியில் வீழ்ந்து கிடக்கின்றோம். இப்போது முழுவதும் அடிமைகளாகி விட்டோம். அறிவிலும் ஆண்மையிலும் அன்பிலும் நாம் அடிமைகளாய் உழல்கின்றோம். அன்பிற்கும் அடைக்குந்தாழ் உண்டு என்பதை இப்போது அறியலானோம். "கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றல்" உடையராயிருந்தோம் என்பது பண்டைப் பழங்கதையாய்ப் போயிற்று. ஒரு காலத்தே நம் தமிழ் மக்கள் எங்கணும் சென்றுலவி வாணிபம் செய்து தமிழ் நாட்டுப் பொருள்களை உலகிற் கெல்லாம் உதவி வந்தனர். நுகர்ச்சிப் பொருள்களை அன்றி, அறிவுப் பொருளும் உலகம் அனைத்திற்கும் கொடுத்துதவும் அத்துணை அளவாக நம்மிடம் இருந்தது. அவ்வறிவுப் பொருளை மேன்மேலும் விருத்தி செய்யாது வறிதே வாழ்ந்து எல்லாவற்றையும் இழந்தோம்.

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்,"

என்ற உண்மையை மறந்து விட்டோம். பிற நாடுகளில் அறிவு நாடோறும் பெருகி வளர, நம்நாட்

டில் அறிவு - வறுமை குடிகொண்டு விட்டது. மேலை நாடுகளினின்றும் அறிவுப்பொருள் பெற வேண்டி நாம் இரந்து நிற்கின்றோம். தமிழ் நாட்டில் அஞ்ஞான இருள் பரந்து நிலைத்திருக்கின்றது. இவ் அஞ்ஞான இருளில் உழன்று தத்தளிக்கும் நமக்கும் உய்தி உண்டென்று உணர்த்தி, நம்மை நன்னெறி உய்க்கும் ஒரு தெய்வ ஒளியை நாம் அடிக்கடி நோக்கி நெறிப்படுதல் வேண்டும் அன்றோ? இவ் இயல்புடைய தெய்வ ஒளி ஒன்றை நோக்கி நெறிப்படுவதற்கே நாம் இன்று ஒருங்கு கூடி இருக்கின்றோம். தமிழ் நாடனைத்தும் இத் தெய்வ ஒளியை இன்று தரிசித்து உய்தி கூடும்படி இறைவன் அருள் புரிவாராக!

திருவள்ளுவர் காலம்

இத் தெய்வப் பேரொளியானது தோன்றிய காலம் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் என்று கூறுவர். இதனைத் தமிழ் இலக்கிய-சரித்திர ஆராய்ச்சியாளரில் ஒரு சிலர் ஒப்புக்கொள்ளாமல் இருத்தல் கூடும். ஆனால், சில நூறு ஆண்டுகள் முன்-பின்னாகக் கூறிக்கொள்வதில் எனது நோக்கம் பழுதுபடுவதில்லை. எனது கருத்தெல்லாம், பெருமக்களது அருந்தோற்றத்தால் சிறப்புற்று விளங்கும் ஒளியின்றித் தமிழ்ச் சரித்திர மண்டிலம் வறிதே இருந்த காலத்து, 'வள்ளுவர்' என்று நாம் கொண்டாடும் இத் தெய்வ ஒளி தோன்றியது என்பதே. அங்கங்கே சிறுசிறு விண்மீன்கள் ஒன்று சேர்ந்து கூட்டமாக விளங்கியிருந்தன. சங்கப் புலவர்கள் என்று நாம் கருதும் நக்கீரர், கபிலர், மாங்

குடி மருதனார் முதலானோர் ஒன்று கூடிச் சிற்றொளி நல்கித் திகழ்ந்து வந்தனர். சிலப்பதிகாரம் இயற்றிய சேரர் பெருமானாகிய பெரு விண்மீன் இன்னும் விண்ணில் ஒளிரவில்லை. தண்ணிய அருளொடு மிளிரும் தேவார ஆசிரியர்களும் ஆழ்வாராதியர்களும் இன்னும் இன்னொளி நல்கவில்லை. சிந்தாமணியை உதவியருளிய திருத்தக்க தேவர் என்னும் செவ்விய நல்லொளி இன்முகம் செய்து திகழவில்லை. திருத்தொண்டர் புராணம் என்னும் சைவ மெய்ந்நூல் அருளிய **சேக்கிழார்** எனப்படும் விடிவெள்ளி விண்ணில் இன்னும் அரும்பவில்லை. விண்ணையும் மண்ணையும் தன் இடமாகக் கொண்டு, தனது பேரொளிப் பெருவெள்ளத்தால் இரு பேருலகையும் ஒளி மயம் ஆக்கிய **கம்பர்** என்னும் கவிகுல ஞாயிறு இன்னும் உதயம் செய்யவில்லை. பேரொளி மண்டிலங்கள் ஒன்றுமின்றிச் சிறு வெள்ளிகள் சிற்றொளிசெய்து விளங்கிய தமிழ்ச் சரித்திர மண்டிலத்தே, நாம் இன்று போற்றித் தொழுகின்ற தெய்வ ஒளியாகிய **திங்கள்** உதயமாயிற்று.

" திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்த லான்," (சிலப்பதிகாரம்)

என இயற்கைத் திங்களை வணங்கும் மரபுடைய நாம், அறிவு நலம் திகழ்ந்தொளிரும் வள்ளுவர் என்னும் செயற்கைத் திங்களை வணங்கி வாழ்த்துவோமாக!

வள்ளுவரைப் பற்றிய கட்டுக்கதைகள்

இப்பூவுலகத்தில் உள்ளவர்க்கு நிலவும் மகிழ்ச்சியும் ஒருங்கு தந்து விளங்கும் இயற்கைத் திங்கள் பூமியினின்றும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளது. அஃது எவ்வாறு, எப்பொழுது தோன்றியது? அதன் சரித்திரம் யாது? இவை போன்ற கேள்விகளுக்கெல்லாம் நமக்கு விடை கிடைப்பதரிது. திங்களின் தண்ணிய ஒளி மண்டிலத்தின் அழகிலே இன்புறுவதோடு நமது மனம் அமைதியுறுகின்றது. அதன் சரித்திரம் பற்றிய கேள்விகள் அனைத்தும் நம்அகங்காரத்தினாலும் ஆசைப்பரபரப்பினாலும் எழுகின்றன. சில சில விடைகளை அனுமானிக்கின்றோம். சிறு குழந்தைகள், கூனக் கிழவி அதில் வசித்து வருவதாகப் பாவிக்கின்றார்கள். வயது முதிர்ந்து விடின், குழந்தை மதியும் நம்மைவிட்டு அறவே ஒழிந்து விடுதல் உண்டோ? கவிதா கற்பனை என்பது இக்குழந்தை மதியோடு ஒருபுடை ஒற்றுமை உடையதென்பது பெரியதோர் உண்மையே அன்றோ? ஆகவே, நாமும் பாற்கடலில் அம்புலி தோன்றியதாகப் பாட்டிசைக்கின்றோம்; அதன்கண் முயல் இருப்பதாகப் புனைந்து உரைக்கின்றோம்; அதனை ராகு, கேதுக்கள் விழுங்கி உமிழ்வதாகக் கதை விளம்புகின்றோம். இங்ஙனமாகப் புனைந்துரைத்துக் கொள்வதன்றி உண்மை உணர்ந்து கொள்ளுதல் அரிய செயலாகின்றது. இதுபோலவே, இன்று நாம் தொழுது வாழ்த்தும் 'வள்ளுவர்' என்னும் தெய்வ - ஒளி வீசும் திங்களின் சரித்திரமும் நம்

மால் அறிதற்கு அரிதாயிருக்கின்றது. எத்தனையோ கட்டுக் கதைகள் புனையப்பட்டுள்ளன! 'வள்ளுவர்' என்ற பெயரால் அவர், 'புலைச்சி மகன்' என்ற கதை பிறந்தது. புலைக்குலத்தானுக்கு இத்துணைப் பேரறிவும் பெருங்கல்வியும் இருத்தல் பொருந்தாதது என்றெண்ணிப் புலைச்சிக்கும் பிராமணன் ஒருவனுக்கும் இவர் பிறந்ததாகக் கதை எழுந்தது. சிலர், 'வள்ளுவர்' என்ற சொல்லுக்கு 'வண்மையுடையார்' என்ற பொருள்கூறி, இவ் இடர்க்கடலைக் கடக்கத் தலைப்பட்டனர். சீத்தலைச் சாத்தனார்க்குத் திருவள்ளுவரது திருக்குறளால் தலைக்குத்துத் தீர்ந்த கதை பன்முறையும் கேள்விப்பட்டிருக்கின்றோம். இக் கதை முழுவதும் 'தலைக்குத்து' என்னும் தொடருக்கு இரண்டு பொருள் இருப்பதனாலும், 'சீத்தலை' என்பது ஓரூர் என அறியாமற் போனமையாலும் ஏற்பட்டதாகும்.

"சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்; —காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு."

இச்செய்யுளில் தலையிடி மருந்து கூறப்பட்டிருக்கின்றது. இம் மருந்தினை மோந்த மாத்திரையில் தலையிடி தீர்ந்துவிடும். 'குற்றம் நிரம்பிய நூல்களைத் தினந்தோறும் செவிமடுத்து என்றும் தீராத தலையிடியுடையவராய் இருந்த சாத்தற்கு வள்ளுவரது முப்பாலால் அந்நோய் தீர்வெய்திற்று', என்பதே இதன் கருத்து. இச் செய்யுளகத்துத் 'தலைக்குத்து' என்ற சொல்

பயின்று வந்திருத்தலால், குற்றமுள்ள நூல்களைக் கேட்குந்தோறும் சாத்தர் எழுத்தாணியைக்கொண்டு தம் தலையிற் குத்தித் தமது விதியை நொந்துகொள்வார் என்றும், 'சீத்தலைச் சாத்தனார்' என்ற பெயர் வழக்குண்மையால் எழுத்தாணியாற் குத்துண்ட அவர் தலையிற் சீழ் எப்போதும் வடிந்துகொண்டிருந்தது என்றும், இச்சீழ் வடிதலும் எழுத்தாணிக் குத்தும் வள்ளுவரது முப்பால் மருந்தினால் அறவே இல்லாது போயின என்றும் கட்டுக் கதைகள் கிளைக்கத் தலைப்பட்டன. இதுபோன்றதொரு தப்பு உணர்ச்சியின் காரணமாக, வள்ளுவர்க்குக் கற்பிற் சிறந்த இல்லறத் தலைவி ஒருத்தியை அடையும் பாக்கியமும் கிடைத்திருக்கின்றது.

> " அடிசிற் கினியாளை அன்புடை யாளைப்
> படிசொற் பழிநாணு வாளை—அடிவருடிப்
> பின்தூங்கி முன்னுணரும் பேதையை
> யான்பிரிந்தால்
> என்தூங்கும் என்கண் எனக்கு?"

என்ற செய்யுள், வள்ளுவர் தம் பத்தினியாரைக் குறித்துப் பாடியதாகக் கருதப்பட்டது. இதினின்றும் கற்பு-மாட்சி தெரிவிக்கவல்ல அழகிய பல கதைகள் புறப்பட்டுவிட்டன! ஆனால், இச்செய்யுள் வள்ளுவர் வாக்கு அன்று என்பதற்கு இச்செய்யுளகத்தே பொய்யாததோர் சான்று நிலை பெற்றிருக்கின்றது. 'தூங்குதல்' என்ற சொல்லுக்கு 'உறங்குதல்' என்ற பொருள் வள்ளுவர் காலத்தில் இல்லை. சங்க நூல்களில் ஓரிடத்தேனும் இப்பொருளில் இச்சொல்லைக் காணுதல்

கூடாது. வள்ளுவர் தாமும் இச்சொல்லைப் பல முறை வழங்கியுள்ளார்; பொருள் இஃதன்று. தூங்காமல் தூங்கிச் சுகம்பெற்றுச் சோம்பி இருந்த பிற்காலத்தே புகுந்த வழக்காகும் இது. பிற்காலத்துப் பிறந்த செய்யுளை வள்ளுவர்மீது ஏற்றி, அவர்க்குத் திருமணம் நிகழ்த்தப் பட்டிருக்கின்றது.

இக்கதைகளில் காணப்படும் உண்மை

மேற்குறித்தன போன்ற கட்டுக் கதைகளால் ஓர் உண்மையை நாம் உணர்கிறோம். வள்ளுவரது திருமேனிக்குத் தமிழ் மக்கள் பண்டு தொட்டு இன்றுவரை இடையறாத அன்பு பூண்டு வந்திருக்கிறார்கள் என்பதுவே அது. அநேக நூற்றாண்டுகளாகத் தமிழ் மக்கள் தம் உள்ளத்தை வள்ளுவர் கொள்ளைகொண்டு உலவி வருகின்றார். நம்மோடு ஒப்ப நம் மூதாதையர் கட்கும் அவரது திருநாமம் சிந்தைக்கும் செவிக்கும் இனிதாயுள்ளது. 'அவரது சரிதம் எனப் பெயரிட்டு எழுந்தன எல்லாம் புண்ணியம் பயப்பனவாக நம்மவரால் கருதப் பட்டன. கரையிலாது பொங்கி எழுந்த அன்பின் பெருக்கத்தால் முற்கூறியன போன்ற கதைகள் முளைத்துச் செழித்து வளர்ந்தன என்று நாம் உணர்ந்த அளவில் நமது மனம் பக்தியாற் கனிவெய்துகின்றதே அன்றி, அவற்றின் பொய்மை-மெய்ம்மைகளைத் தெரிதற்கு ஒருப்படுவதில்லை. அன்றியும், அழகுள்ள கதைகளில் யார்தாம் ஈடுபடமாட்டார்கள்!

யார்தாம் மயங்கிவிட மாட்டார்கள்! குணத்தானும் செயலானும் பெரியவர்களாய் உள்ளவர்களைப் பற்றிய அழகிய கதைகள் நம்மை வசீகரித்துவிட்டன என்று நாம் ஒப்புக்கொள்ளுதலிற் குற்றம் சிறிதேனும் உண்டோ? இல்லை. எனினும், ஒரு விஷயத்தை நாம் மறந்து விடல் ஆகாது. சந்திரனது ஒளிமண்டிலத்தைக் கடந்து அதன் இயற்கையைக் கண்டறிதற்குக் கண் கூசி வலியற்று நிற்பதுபோல, திருவள்ளுவரது புகழ் மண்டிலத்தைக் கடந்து அவரது உண்மைச் சரித்திரத்தை உணர்தற்கு நம் அறிவு வலியற்று நிற்கின்றது. இதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் பெரிதும் ஆவசியகம்.

ஆசிரியனும் நூலும்

வள்ளுவரது சரித்திரத்தில் ஓர் உண்மை மாத்திரம் நம் அறிவை விட்டு எவ்வகையானும் தப்பிச் செல்ல முடியாதபடி அகப்பட்டுக் கொண்டது. அறிவில் அகப்பட்டது என்று கூடச் சொல்லுதல் தவறு. நமது பார்வையிலேயே மிக எளிதில் அது சிக்கிக்கொண்டது. அவ்வுண்மை யாதெனின், திருவள்ளுவர் திருக்குறள் செய்தருளினர் என்பதே ஆகும். இதனை அறியாதார் இல்லை. ஆனல், இதன் பொருண்மையும் பயனும் உணர்ந்தோர் மிகச் சிலரே யாவர். ஒரு நூல் சிறப்பு வாய்ந்ததெனின், அதன் ஆசிரியனது இதயத்தினின்றும்—அறிவினின்றும்—அது பிறந்திருத்தல் வேண்டும். ஆசிரியன் தன்னையே தனது நூலில் அமைத்து விடுகின்

ருன். ஆசிரியனது உயிர் - நாடி அவனது நூலி லேயே துடிதுடித்துக்கொண்டு இருப்பதாகும். ஆசிரியனுக்குரிய சிறந்த ஆத்ம குணமெல்லாம் நூலினகத்தும் காணப்படுதல் நிச்சயம். நூலிற் கூறுகின்ற வாழ்க்கை நிலையில், ஆசிரியன் தானே வாழ்கின்ருன். தனது நுண்மாண் நுழைபுலங் கொண்டு செய்திகளின் உண்மையை நுனித்து உணருகிருன். தனது பேராற்றலால் அவ் விஷ யங்களின் பொருளைக் கூர்ந்து உணர்ந்து தனது அரிய புலமைத் திறத்தால் அவற்றைப் பிறரும் கூர்ந்து உணரச் செய்கிருன். சுருங்கக் கூறின், ஆசிரியனது உயிர்வாழ்வின் சாராம்சமே அவன் இயற்றிய பெருநூல் எனத் தகும். இக்காரணம் பற்றியே மில்டன் என்னும் ஆங்கில மகாகவி, "அறிவிற் சிறந்த பெரியோன் ஒருவன், அநித்திய மாகிய தனது பூத உடம்பு நீங்கியபின் என்றும் அழியாத புகழ் உடம்போடு நிலைத்த வாழ்வு எய்துதற் பொருட்டு, தனது இனிய ஆருயிரை வாசனை ஊட்டித் தைலத் தோணியில் வளர்த் திட்டு வைப்பது போன்றதாகும் அப்பெரியோன் இயறறிய பெருநூல்," என்னும் கருத்துப்பட வரைந்துள்ளார். இதன் உண்மை, அருஞ் சிறப்பு வாய்ந்த பெருநூல்களோடு மாத்திரமே பொருந்துவதாகும். ஓர் உயரிய நூல் எல்லா வகையானும் உயர்ந்தோன் ஒருவனது உள்ளத்தி னின்றே தோன்றுதல் கூடும். நூலை நன்கு உணர்வதன் மூலமாகத்தான் ஆசிரியனை நாம் அறிதல் இயலும். தினந்தோறும் நம்முடன் பழகி வருபவரது குணங்குணங்களும், நோக்க

முறையும், பெருமையும், சிறுமையும், அவர்கள் பேசும் குரலும் நாளுக்கு நாள் நமக்கு விளக்க மாதல் போலவே, சிறந்த ஒரு நூலாசிரியனது நூலை நாம் கற்கக் கற்க, அவ் ஆசிரியனது குணப் பெருமை, அவன் உலகினை நோக்கும் முறை, அவனுடைய குறை - குற்றங்கள், அவன் சொல் லாடும் முறை—இவை எல்லாம் நமக்குப் புலப் படுகின்றன. இவ்வண்ணமாக வள்ளுவரைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்துகொள்ளுதல் ஏலும். வள்ளுவரது வாழ்க்கைச் சரித்திரம் அவர் இயற் றியுள்ள ஒப்பற்ற திருக்குறள் நூலில் விரிவாய் அமைந்திருக்கின்றது. திங்கள் வேறு, அதன் ஒளிமண்டிலம் வேறு என்று நாம் கருதுவதில்லை. இங்ஙனமே, வள்ளுவர் வேறு, அவரது தெய்வத் திருக்குறள் வேறு என்பது இல்லை. **திருக்குறள் என்பதுதான் திருவள்ளுவர்**. ஆகவே, விரிவான சரித்திரம் ஒன்று வேண்டும் என்னும் தேவையே இல்லாதொழிகின்றது. வள்ளுவரது வாழ்க்கை யில் பிற மக்களோடு ஒப்ப அவர் செய்திருக்கக் கூடும் சிறு செயல்களால் நமது மனம் அலைப் புண்டு உழலாதபடி, அவரது வாழ்வின் தனிப் பெரு நோக்கமாகக் கொண்டியற்றிய நூலின் கண் மாத்திரம் நம் அறிவைச் செலுத்திப் பயன் பெறுமாறு ஆணை இடுவித்த ஊழ் - விதிக்கு ஒரு முறையில் நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

திருக்குறள்-ஊருணி

இவ்வாறாகத் தம்மை வேறென்று கொள் ளாது, தமது ஆருயிர் நிலைத்து வாழ்வதற்

கென்றே அரிதின் அமைத்துவைத்த உடல் போன்று உள்ளதாகும், வள்ளுவர் என்னும் தண் மதி அருளிய அருமைத் திருக்குறள். அழகிய இப் பெருநூலின் இயல்பினை ஒருவாறு சுட்டிக் கூறுவதோடு இப்போது அமைகின்றேன். அங் கண் விசும்பில் ஒளிரும் திங்களின் நிலவினை இன்னார்தாம் நுகர்தற்குரியார் என்பதில்லை. எளியார்க்கும் வலியார்க்கும் செல்வர்க்கும் வறி ஞர்க்கும் சந்திரன் ஒன்றுபோல ஒளி நல்குகின் றது. பகை-நண்பு என்பதும் இனத்தர்-அந்நி யர் என்பதும் நிலவுக்கில்லை. இதுபோன்றே இன்று நாம் போற்றுதற்கமைந்த வள்ளுவர் என்னும் தெய்வ ஒளியானது யாவர்க்கும் வேறு பாடின்றி ஒன்றுபோல நெறி காட்டி உதவும் தகைமையது. வள்ளுவர் தாமே, ஓர் அழகிய செய்யுளில் தம் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு."

என்பது அச் செய்யுள். 'நீர் நிறைந்த ஊருணி தன்னை அடைந்தார்க் கெல்லாம் வேற்றுமை யின்றி நீரை உதவி இன்பம் அளிக்கின்றது. இவ்வண்ணமே பேரறிவாளனது பெருஞ் செல்வ மும் நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவி இன்பம் அளிக்கின்றது,' என் பது செய்யுளின் கருத்து. உலகத்தில் 'பேரறி வாளன்' என்று அழைப்பதற்கு வள்ளுவரைக் காட்டிலும் சிறந்த உரிமையுடையார் அரியர். இவர் தந்தருளிய திருக்குறள் நூலைக் காட்டி

னும் பெரியதொரு செல்வம் உளதெனல் அரிதாம். செல்வத்துட் செல்வமாகிய இத் திருக்குறள், நீர் நிறைந்த ஊருணியை ஒத்து நலம் பயக்கின்றது. அறிவுத் தாகத்தால் வருந்து வோர் அனைவரும் திருக்குறள் நூலால் அறிவு உதவப்பெற்று இன்பம் எய்துதல் கூடும். இல்லற நெறியில் நிற்குமவர்கள், துறவிகள், அரசர்கள், குடிகள், பகைவர்கள், நண்பர்கள் - இவ் அனை வர்க்கும் அறிவுப் பொருளை இப் பெருநூல் உதவு கின்றது. சுருங்க உரைக்கு மிடத்துப்பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கை நிலையில் உள்ளவர்க்கும் சிறந்த அறிவுரைக் களஞ்சியமாக விளங்குவது நம் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் அருளிய தெய்விகப் பெருநூல்.

திங்கள்-திருவள்ளுவர்: வேறுபாடு

வள்ளுவரை, வானில் நிலவுவிட்டு ஒளிரும் தண்மதியத்திற்கு ஒப்பாகக் கூறிவந்தேன்; எல் லார்க்கும் ஒப்ப உதவி, உய்ந்நெறி காட்டலில் இது பொருந்தும். ஆனால், நம் முதற்பாவலர்க்கே தனித்து உரிய வேறொரு பெருமையும் இருக் கின்றது. நிலவுப்பயன் கொள்ளுதல் வெளி முற் றத்தும் மேல்மாடத்துந்தான் இயலும். பலகணி இல்லாத வீட்டினுள்ளே நிலவொளி பரவுவ தில்லை. வள்ளுவரது தெய்வ ஒளியோ பரவிச் செல்லக்கூடாத இடமே இல்லை. விண்மதியம் போலக்காலத்தால் மிக்க தூரத்தில் ஒளிவிட்டுத் திகழ்ந்த போதிலும், யாவரும் எவ்விடத்தும் கொண்டு செல்லத்தகும் கைவிளக்குப்போல

அடுத்து நின்றுதவும் தன்மை, நாம் இன்று தொழுது வணங்கும் தெய்வ ஒளிக்கு உளதாகின்றது. இத்தெய்வ ஒளியால் தமிழ் மக்களாகிய நாம் இருள் நீங்கி உய்தி பெறுவோமாக!

நின்று சுடரெறித்து நெஞ்சத் திருளகற்றி
இன்றுபோல் என்றும் இலங்கிடுக;—துன்று புகழ்த்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்னும்
மெய்வைத்த வேத விளக்கு.

THE MADURA TAMIL SA

ARIVIYAL KATTU

BY

P. RAMANATHAN,
St. Thomas College, Tri

THE NATIONAL PUBLISHING CO.,
12 SECOND LINE BEACH, MADRAS.

Copyright] [Price As.